கல்கி



KALKI 3-11-1963 30 காசு

தாங்கள் சொத்து நிர்வாகப் பொறுப்புள்ளவரா?

தாங்கள் ஓர் நல்ல குடும்பத் தலைவியாகவும் தாயாராகவும் இருக்கலாம். ஆனால் பண முதலீடுகள், உயில்கள், நிலபுலன்கள் நிர்வாகம் இம்மாதிரி பொறுப்புகளையும் வகிக்க வேண்டிவரின் அவைகளை கனரா பாங்கின் சிறந்த மேற்பார்வைக்கு விட்டுவிடுவதே நலம்.



கனரா பாங்கை உங்கள் சொத்து நிர்வாகஸ்தராகவும், டிரஸ்டியாகவும் நியமித்துக் கொள்ளுங்கள்.

முழு விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள எங்கள் கிளை மானேஜரைக் கேளுங்கள்.

கனரா பாங்க் லிமிடெட்

(ஸ்தாபிதம்:1906)

பரிபூரண சேவை ● பரிபூரண பாதுகாப்பு



நிர்வாக காரியாலயக் கட்டடம்

பதிவு செய்யப்பட்ட காரியாலயம்: மங்களூர் ● நிர்வாகக் காரியாலயம்: பெங்களூர்

கல்கி



பட விளக்கம் 8-ம் பக்கம் பார்க்க

பொருளடக்கம்

சோபகிருது, ஐப்பசி 17 ★ நவம்பர் 3


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



புகைபிடிக்கும் இங்கிதம்

தீப் பொறியின் திக்குவிஜயம்!

சிகரெட்டைப் பற்றவைக்கையில்—அதுவும் வெளியிலோ அல்லது காற்றடிக்கையிலோ—எவர் மீதும் குறிவைப்பதுபோலத் தீக்குச்சியைக் கிழிப்பது சரியல்ல. தவறிப் போய் தீப்பொறி தெறிக்குமேயானால் பாவம். அருகிலிருக்கும் பெண்மணியின் ஆடைக்கு வந்தது ஆபத்து.



உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா



இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.,
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 611 TAM

Greens' Advtg.



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற தாயென்று கும்பிட்டி பாப்பா — பாரதியார் | இதழ் 14

சட்டம் சிதைகிறது; காக்க வாரீர்!

சீனா பெருமளவில் படையெடுத்து ஓராண்டு முடிந்த அக்டோபர் 20ந் தேதி யன்று பிரதமரவர்கள் தேசத்துக்கு ஒரு செய்தி விடுத்து, மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்று கோஷித்தார்.


தேசியக் கட்டுக்கோப்புக்கு எந்தவிதமான ஊனமும் நிகழவில்லை; சீனப் படையெடுப்பு இது காரணமாக ஏற்படவும் இல்லை. சர்க்காரின் அயல்நாட்டுக் கொள்கையின் பலவீனம் காரணமாகத்தான் படையெடுப்பு நிகழ்ந்தது. இன்றைக்கும் அந்தப் பலவீனத்தைப் போக்கவல்ல மருந்தை அரசாங்கம் சரியாக நாடவில்லை. இந்நிலையில் மக்களின் கட்டுப்பாட்டைப் பிரதமர் வற்புறுத்துகிறாரென்றால் அதற்கு உட்பொருள் ஒன்றுதான். அது காங்கிரஸ் ஆட்சியின் போக்குக்கு எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாமல் நாடு பேசாமல் அடங்கி யிருக்க வேண்டும் என்பதுதான்.

பிரதமரின் 'தேசியக் கட்டுக்கோப்பு' கோரிக்கைக்கு அவர் என்ன உட்பொருள் கொண்டாலும், அவருடைய சகாக்களும், அவருக்கு அடங்கி நடக்கும் மற்ற தலைவர்களும் இதனை எடுத்துக் காட்டி, "ஆனபடியால், மக்களே! எல்லாரும் ஒற்றுமையாக நாங்கள் காட்டுகிற வழியில் வாருங்கள். இதுவே நேருஜியின் ஆணை" என்று வியாக்கியானம் செய்யத் தொடங்குவார்கள். மக்கள் ஏமாறலாகாது. சர்வாதிபத்தியத்தின்கீழ் எல்லாரும் ஆடுகளாக அடங்கியிருக்கும் ஒற்றுமை ஒற்றுமையே ஆகாது. ஜனநாயகத்தையோ, ஜனநாயகத்தின் சாரமான ஒரு பகுதியையோ பறிகொடுத்துக் "கட்டுக்கோப்பை" விலைக்கு வாங்குவது பேதைமை. யுத்தகாலமாயினும், வேறெந்தக் காலமாயினும் ஜனநாயகம் வாழ வேண்டுமானால், நாட்டின் நன்மையை மதித்துப் போராடும் எதிர்க்கட்சிகள் சுதந்திரமாகச் செயல்பட்டேயாக வேண்டும்.

மும்முரமாக யுத்தம் ஏற்படும்போது எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து பொது அபாயத்தை முறியடிப்பதில்தான் ஈடுபட வேண்டும். ஆனால் யுத்தத்தின் வேகம் குன்றிய பின்னும், நாட்டின் எல்லா நடவடிக்கைகளிலும் பிரவேசிக்கிற சர்க்கார் 'நெருக்கடி நிலைமை' என்றும் 'யுத்த அபாயம்' என்றும் புரளி பண்ணிக்கொண்டிருந்தால் அதற்காக எதிர்ப்பை நிறுத்திவிட முடியாது. ஆட்சி மொழிப் பிரச்னையை இப்போது அரசாங்கம் கிண்டிக்கிளறி விட்டிருப்பதும், காமராஜ் திட்டம் என்ற பெயரில் மந்திரி சபை அமைப்பில் மாற்றங்களை உண்டுபண்ணி யிருப்பதும், கட்சியைப் பலப்படுத்தும் எண்ணத்துடன் பல காரியங்கள் செய்வதும் இன்று யுத்த அபாயம் வலுக்குன்றி விட்டதாகச் சர்க்கார் கருதுவதைக் காட்டுகின்றன. ஆனால் ஆளும் கட்சிக்கு எதிர்ப்பு உருவானால் மட்டும், 'எல்லையில் சீனாக்காரன், உள்ளே எதிர்க்கட்சிகள்' என்று குற்றம் சாட்டுகிறார் பிரதமர்.

பெர்மிட்-லைசென்ஸ் ஆட்சியின் மூலம் இன்று பாரத சர்க்கார் நாட்டையே தனக்கடங்கிய ஜமீன்தாரியாக்கித் தான் தனிப்பெரும் ஜமீன்தாரனாகியிருக்கிறது. இன்று சர்க்கார் ஒன்றே நாட்டின் மொத்த வியாபாரி. அதுவே தேசத்தின் சர்வபோக பாங்கி. சுதந்திர ஜனநாயக நாட்டில் மக்கள் பெற்றுள்ள உரிமைகளை நாசமாக்கி யிருக்கிறது சர்க்கார். இந்த உரிமைகளைக் காப்பதற்காக நீதி மன்றம் பெற்றிருந்த அதிகாரத்தையும் 'திருத்தங்கள்' மூலம் பறிமுதல் செய்து விட்டது அரசாங்கம். "என்றால் சட்டத்துக்கிணங்க

ஊர் வம்பு



சங்கற்பம் செய்ய முடியவில்லை. ஆனபடியால் என் சங்கற்பப்படி சட்டம் இயற்றுவேன்'' என்று கூறிய பழைய ஓர் ஆங்கில மன்னனின் தோரணையில் தான் இன்று காங்கிரஸ் சர்க்கார் செல்கிறது. மூல அரசியல் சாஸனத்தின் வழி ஆட்சி ஏற்படும் வரையில் இந்தியாவில் 'சுதந்திரம்', 'ஜனநாயகம்' என்பதெல்லாம் ஏட்டளவோடு நிற்க வேண்டியதுதான்.

அரசியல் சாஸனம் காயமுற்று, 'என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அலறுகிறது. அதனைக் குணப்படுத்திப் பழையபடி தேக திடம் பெறச் செய்ய வேண்டியது நமது கடமை. ஜீவாதார உரிமைகள் என்று அரசியல் சாஸனம் விதித்திருக்கும் உரிமைகள் ஒரு நாளும் இம்மாதிரி மாற்றப்படலாகாது.

சொத்துரிமை என்பதைக் கேலிக்கூத்தாக்காமலே பெரிய பண்ணைகளில் வாழும் குத்தகைக்காரர்களுக்கும், உழவர்களுக்கும் சர்க்கார் சகல நன்மைகளையும் செய்ய முடியும். இதேபோல் சொத்துக்களை அரசாங்கம் நியாயமான நஷ்டஈட்டின் பேரில் எடுத்துக் கொண்டு பொதுக் காரியங்களுக்கு உபயோகப்படுத்துவதை எந்தச் சட்டமும் தடுக்கவில்லை. ஆனால் பதினேழாவது திருத்தம் முதலியன முறைமீறிய திட்டங்கள். ஆனபடியால், சீனாவிடமிருந்து நாட்டைக் காப்பது போலவே, அரசியல் சாஸனத்தைக் காக்கவும் மக்கள் முன்வரத் தருணம் நேரிட்டிருக்கிறது. முக்கியமாக, சட்ட வல்லுநர்கள் இப்போது தைரியமாக முன் வந்து எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியது அவசியம்.

இவ்விஷயமாகத் தமிழ் நாட்டு வழக்கறிஞர் சங்கத்தில் பிரபல நீதித்துறை நிபுணர் எம். கே. நம்பியார் அவர்கள் கூறிய சில வாசகங்களை வாசகர்களின் முன் வைக்கிறோம்: ''இந்தியக் குடியரசு ஸ்தாபிதமான போது மக்கள் தங்களுக்கு எந்த அரசியல் சாஸ

னத்தை அளித்துக் கொண்டனரோ, அதுவல்ல இன்றுள்ள சாஸனம். விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரால் அரசியல் சாஸனம் கண்ட துண்டமாக்கப்பட்டிருக்கிறது. இன்றைய அரசியல் சாஸனம் தர்மத்தின் குரலையோ சட்டத்தின் குரலையோ பேசவில்லை. அதிகார பீடத்தில் ஆரோகணித்துள்ள ஒரு சிலரின் கையில் மக்களின் வாழ்க்கை, சுதந்திரம், சொத்து ஆகிய உரிமைகள் அடைக்கலமாகி யிருக்கின்றன. இதைப் போல் ஒரு நாட்டின் அடிப்படைச் சட்ட அமைப்பு அலட்சியம் செய்யப் பட்டதை வேறெங்குமே காண முடியாது.......

''இன்றைய சீர்கெட்ட நிலைமைக்கு வக்கீல்களும் ஓரளவு பொறுப்பு ஏற்க வேண்டும். இந்தியாவில் பொதுமக்கள் எதிர்த்துப் பேசுவதில்லை. வழக்கறிஞர்களும் தங்கள் குரலை எழுப்பத் தவறினால் ஜனநாயகம் சீக்கிரமே அழிந்து போகக் கூடும்.''

மீண்டும் பாராட்டுகிறோம்


''காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தையும், சட்ட மறுப்பு இயக்கத்தையும் எதிர்த்தவர்களும் பிற்பாடு சுதந்திரத்தின் பயனை அடைந்தனர். அதுபோலவே இன்று தி. மு. க. வானது, ஆட்சி மொழிச் சட்டத்தின் பாதகமான விளைவுகளை அறியாமல் தூங்குகிறவர்களுக்காகவும் சேர்த்துப் போராடுகிறது. எல்லா அபக்கியாதியையும், தியாகத்தையும் தானே மேற்கொள்ள முன் வந்திருக்கும் தி. மு. க. விடம் நாம் நன்றி கொள்ள வேண்டும்'' என்று சென்ற வாரம் ராஜாஜி பாராட்டினார். இந்த வாரம் பாராட்டுதற்குரிய மேலும் ஒரு செயலைச் செய்திருக்கிறது தி. மு. கழகம். தேசப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுவதாகத் தி. மு. க. செய்துள்ள முடிவு நல்ல முடிவு.

துவேஷத்தின் பேரில் கொள்கைகளை வகுத்துக் கொள்வது எந்தக் கட்சிக்கும் நல்லதல்ல. ராஜாஜி நட்புக் கரம் நீட்டிய நாளாகத் தி. மு. க.வின் இனத் துவேஷம் மறைந்தது. இதற்காகச் சமூகம் தி. மு. க.வை மட்டுமின்றி ராஜாஜியையும் மனத்துக்குள் வாழ்த்திற்று.

இப்போது அரசியல் சாஸனத்தின் பதினாறாவது திருத்தம் நிறைவேறியிருப்பதன் காரணமாகத் தி. மு. கழகம் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட முன் வந்துள்ளது. வெறுப்பின்மேல் உருவான ஒரு கொள்கையைத் தி. மு. க. விட்டிருப்பது வரவேற்க வேண்டியதாகும்.

காங்கிரஸ் தலைவர்களோ ஒருபுறம் தேசத்தின் ஒற்றுமை பற்றி முழங்கிக் கொண்டிருக்கும் போதே, மறுபுறத்தில் தி. மு. க. பிரிவினைக் கொள்கையை நீத்திருப்பதையும் தூற்றுகிறார்கள்!

''சட்டத்துக்குப் பயந்துதான் தி. மு. க. கொள்கையை மாற்றிக் கொண்டிருக்



கிறது: இது கோழைத்தனமாகும்'' என்று நையாண்டி செய்கிறார் திரு காமராஜ். அப்படியானால், சட்டம் இயற்றப்பட்டதன் கருத்துதான் என்ன? தி. மு. க. சட்ட விரோதமாகச் செயலாற்ற வேண்டும் என்று திரு காமராஜரே தூண்டுகிறாரா, என்ன? உண்மையில் இது கோழைத்தனமும் அல்ல. இவ்வளவு நாட்களாகத் தனது முக்கியமான கொள்கையாக வைத்திருந்த ஒரு கருத்தைத் தி. மு. கழகம் கைவிட்டிருப்பது அதன் துணிச்சலையே காட்டுகிறது.

ஸ்ரீ லால்பகதூர் அவர்கள் ''மக்களின் பேச்சுரிமைக்காகத் தி. மு. க. இயக்கம் நடத்தப் போகிறதாம். இதன் மூலம் மீண்டும் பிரிவினைக் கோஷம் கிளம்பி விடும்'' என்கிறார். இதைப் பார்க்கும் போது, தி. மு. க.வின் இயக்கத்தை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு மக்களின் பேச்சு சுதந்திரம், கருத்து சுதந்திரம் இவற்றை முற்றிலும் பறிப்பதற்கும் அரசியல் சாஸனத் திருத்தம் கொண்டு வரப்படுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது!

என்ன சேதி?

ஊழலைப் பெருக்க உபாயம்

'ஒக்கலில் பிள்ளையை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் தேடினாளாம்' என்று ஒரு பழமொழி உண்டு. காங்கிரஸ் கட்சியினர் தங்கள் செல்வாக்குக் குறைந்து வருவதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க ஆராய்ந்து வருவதைக் காணும்போது இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. செல்வாக்குக் குறைந்ததற்குக் காரணம் காங்கிரசுக்கு உள்ளேயேதான் இருக்கிறது. நாட்டை ஆளும் பொறுப்பைப் பெற்ற காங்கிரஸ் தனது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதால் மக்களிடம் அதன் மவுசு குன்றி வருகிறது. ஊழல் மலிந்த ஒரு ஸ்தாபனமாகி விட்டது இன்றைய காங்கிரஸ். ஊழலைக் களைந்து தூய்மை பெற வேண்டியதே இன்று காங்கிரஸ் செய்யவேண்டிய காரியம். அதற்குத் தகுந்த வைத்தியர் காங்கிரஸுக்குக் கிடைக்கவில்லை. திரு காமராஜ் அவர்களும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும் உண்மையில் தேவைப்படும் நடவடிக்கைகளில் மனம் செலுத்தவில்லை. பொது மக்களுடன் கட்சி இன்னும் வலுவான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றே பேசி, 'தொண்டர்' படை திரட்டி வருகிறார்கள். சர்க்கார் காரியாலயங்களையெல்லாம் கட்சியின் கிளைகளாக்கிப் பிரசாரம் செய்து கொள்ளும் காங்கிரஸுக்கு மக்களிடம் தொடர்பு கொள்வதில் உள்ள வாய்ப்பு வேறெந்தக் கட்சிக்கும் கிடையாது. இந்த வாய்ப்பைக் கூச்சமில்லாமல் பயன்படுத்தி வந்திருக்கிறது அக்கட்சி. இப்போது மக்கள் தொடர்பை மேலும் பலப்படுத்துவதில் காங்கிரஸ் தலைவர்கள் முனைந்திருப்பது இந்நாட்டில் ஊழல்கள் மேலும் பெருகப் போகின்றன என்பதற்கு ஒரு முன்னறிவிப்பே ஆகும்.

படி அளப்பவனுக்கு ஒரு பிடி

''தினமும் உலையில் போடுவதற்கு அரிசி எடுக்கும் சமயம் முருகனை நினைத்துக் கொள்ளுங்கள். அவன் தந்த சௌபாக்கியம் நாம் வாழ்கிறோம். மேலும் நன்கு வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து, உலைக்குப் போடுவதற்கு எடுத்த அரிசியில் அவன் பங்குக்கு ஒரு பிடி எடுத்து, ஒரு பாத்திரத்தில், ''முருகா'' என்று வேண்டி இட்டு வாருங்கள். சேர்ந்து வரும் அரிசியை மாதம் ஒரு முறை கணக்கிட்டு, அதற்குள்ள விலையை மணியார்டர் மூலம் தனலக்ஷ்மி பாங்க் லிமிடெட், (ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் திருப்பணிக் கணக்கு) எர்ணாகுளம்-1' என்று அனுப்பி வைக்கவும்.''

—இப்படிக் கூறும் எர்ணாகுளம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் திருப்பணி விண்ணப்பம் நம் நெஞ்சைத் தொடுகிறது. எளிய முறையில் ஆண்டவனின் அருட் பிரசாதத்தை நாம் பெற எர்ணாகுளம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் குழுவினர் வழி செய்திருக்கிறார்கள்.

எர்ணாகுளத்தில் எழுந்தருளியிருக்கும் சிவாலயத்தின் வடப் புறத்தில் முருகக் கடவுளுக்குத் திருக் கோயில் அமைக்கப்படுகிறது. அதற்கு உத்தேசமாக 1,50,000 ரூபாய் தேவையாக உள்ளது. இதற்கு ஆஸ்திகப் பெருமக்களின் ஆதரவு அவசியம். அன்பர்கள் மேற்சொன்ன முறையில்தான் கைங்கரியம் செய்ய வேண்டும் என்பதில்லை. நிதி மிகுந்தவர் பொற்குவை தரலாம், நிதி குறைந்தவர் காசுகள் தரலாம். எவ்வாறோ தமிழரின் தனிப் பெரும் தெய்வமாகிய முருகனுக்குக் கேரளத்தில் அமைய விருக்கும் ஆலய நிர்மாணத்தில் தமிழர் யாவரும் பங்கு பெற்றுப் புண்ணியம் பெற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.



நீர் மேல் தீ!

"புயல்லே மரங்களெல்லாம் சாய்ந்து போச்சாம். பாரீஸ்கார்னரிலே ஒரு பஸ் மேலே மரம் விழுந்து......"

"ஓய்! புயலுடைய வேகத்தைக் குறைத்துப் பேசாதீர்! ஒரு கப்பலே திருவொற்றியூர் அருகே கரை தட்டிப் போகுமாறு செய்து விட்டதுங்காணும்!"

"எல்லாம் பழைய 'நியூஸ்' பேசிக்கிட்டிருக்கீங்களே! அந்தக் கப்பலில் தீப் பிடிச்சுக்கிட்டதாம்!"

"எவனாவது மாலுமி சிகரெட் பிடிச்சுப் போட்டிருப்பான், கப்பல் ஏற்றி வந்த நிலக்கரி மேலே!"

"எதுக்கு வீண் பழி சுமத்தறீங்க! கப்பல் கரை தட்டின உடனே எல்லாரும் கரை சேர்ந்துட்டாங்க. அதிலே ஒருத்தரும் கிடையாது, தெரியுமா?"

"அப்பமன்னு எப்படித் தீப் பிடிக்க முடியும்?"

"மின்னல் தாக்கி யிருக்கும்."

"தீ மூணு நாளைக்கு எரியுமாம்!"

"ஜல சமாதிதானும்; கப்பலுக்கு!"

"அட, ராமா! தீயை அணைக்க வழி இல்லையோ?"

"தீ அணைக்கும் படை அங்கே போச்சு. தண்ணீர் பீச்சி அடிச்சும் பார்த்தது. தண்ணீர் கடல்லேதான் விழுந்தது. கப்பல் வரை எட்டலே!"

"தீ பலமா எரியுதாம்! இஞ்சினைச் செலுத்த டீஸல் எண்ணெய் வைச்சிருப்பாங்களே டாங்குலே. அது கிட்டே நெருங்கிட்டதாம் நெருப்பு. படார் படார்னு வெடிச்சுக் கப்பல் சுக்கு நூறு ஆகப் போகுது!"

"ஐயய்யோ! சுற்று வட்டாரத்திலெல்லாம் தெறிச்சு வந்து விழுமே!"

"ஆமாம்! அதுக்கும் முன்னேற்பாடா கரையோரத்தில் இருந்த செம்படவர்களையெல்லாம் குடிசையைக் காலி பண்ணச் சொல்லி அனுச்சுக்கிட்டுப் போயிட்டாங்க!"

"என்ன அநியாயம் ஸார், இத்தனை பேர் இருந்துகிட்டுத் தீயை அணைக்க ஒரு முயற்சியும் எடுக்கலே; கப்பலுக்காகக் கண்ணீர் விட ஆரம்பிச்சுட்டாங்க."

"ஏனய்யா? விமானத்திலே ஏறிப் போய் ஆகாயத்திலேயிருந்து அணைக்க முடியாதா நெருப்பை?"

"அந்த நெருப்பை அணைக்கிறது அத்தனை சுலபம்னு நினைக்கிறீங்களா? அதுக்கு விசேஷ உபகரணங்கள் வேணும். அதை வாங்கி வர ஆகிற செலவு ஏகமாயிருக்கும். அதுக்குக் கப்பலைக் கைவிடறதே மேல்னு நெனைச்சுக் கிட்டிருப்பாங்க."

"பாவம், கப்பல் கம்பெனிக்காரன்! இந்த அதிர்ச்சியிலேயிருந்து அவன் பிழைச்சு எழுந்திருப்பானோ இல்லையோ?"

"அவனுக்கு என்னங்காணும் கவலை? இன்ஷூர் பண்ணியிருப்பான். இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரன் கொடுத்துட்டுப் போறான்."

"அப்படின்னு இன்ஷூரன்ஸ் கம்பெனிக்காரன்தான் தலையிலே கையை வைச்சுக்கிட்டு உட்காரணும்னு சொல்லும்!"

"அவனுக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விடுவதென்று தீர்மானிச்சுட்டேன்."

"ஏனய்யா! கண்ணீர் விடணும்? போகிற போக்கில் ஒரு பக்கெட் கடல் தண்ணீரைக் கப்பல் இருக்கிற பக்கமாய் வீசி விட்டுக் கடமை தீர்ந்ததென்று சமுத்திர ஜலத்திலேயே கப்பலுக்கு ஒரு முழுக்கையும் போட்டு விட்டு வாரும்!"

"நீர் முழுக்குப் போடுகிறீரோ இல்லையோ; உங்கள் அத்தனை பேர் வாயிலும் மண்ணைப் போட்டு விட்டது சென்னை நெருப்பணைக்கும் படை! ரொம்ப சாமர்த்தியமா காரியம் செய்து நெருப்பை அணைச்சுட்டாங்க!"

"நிஜமாகவா?"

"ஆமாம், ஸார்! உயிரை லட்சியம் செய்யாமல் மூணு பேர் நீந்திப் போய்க் கப்பலை நெருங்கினாங்க. அங்கே எரிஞ்சும் எரியாமலும் இருந்த சில கயிறுகளைப் பிடிச்சுத் தொத்திக்கிட்டு மேலே ஏறினாங்க. கப்பலுடைய இரும்புத் தகடுகளெல்லாம் உஷ்ணம் ஏறிப் போய்ச் சுட்டுக் கொதிச்சதையும் பொருட்படுத்தாமலே ஏறினாங்க. ஏதாவது ஆபத்து நேர்ந்தா கரையிலே இருக்கிறவங்க பிடிச்சுஇழுக்க வசதியாக இடுப்பிலே கயிறு கட்டிக்கிட்டுப் போயிருந்தாங்க. கப்பலிலே ஏறினதும், கயிற்றை அதில் இறுக்கமாகக் கட்டி விடவே மற்றவங்களும் அதைப் பிடிச்சுக்கிட்டுக் கப்பல் மேல் தளத்துக்குப் போனாங்க. தண்ணீரை இறைக்கிற மிதக்கும் பம்பு வந்து சேர்ந்தது கப்பல் கிட்டே. அப்புறமென்ன? தீயணைக்கும் படையினர் தங்கள் திறமையைக் காட்டினாங்க."

"யாரையாவது பாராட்டணும்னு 'உங்க திறமையை நன்றாக நிறைய பயன்படுத்திக் கொள்கிறவாய்ப்பு இந்த நாட்டுக்குக் கிடைக்கணும்'பாங்க. நம்ப சென்னை தீயணைக்கும் படையினரை இதற்கு நேர் எதிர் மாதிரியாகத் தான் வாழ்த்தணும். அவங்களுடைய அபாரமான திறமையைப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பமே நேராதிருக்கட்டும்!"



போகிற போக்கில்....

விலைவாசி உயர்வைப்பற்றிச் சென்னையில் இந்திய அரசின் நிதியமைச்சர் நீளமாகப் பேசியிருக்கிறார். 'மத்திய தரகர்கள்' எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு விலைகள் குறையும் என்பது நிதியமைச்சரின் கண்டுபிடிப்பு! மத்திய தரகர் எனக் கூறும் அமைச்சர் இன்னொன்று சொல்லி யிருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். அதாவது 'அரசாங்கத் தலையீடு' எவ்வளவுக்கெவ்வளவு குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு விலைகள் குறையும், மலிவாகத் தருவதில் போட்டா போட்டி ஏற்படுமெனப் பேசி யிருந்தால் நூற்றுக்கு நூறு மார்க்குகள் தரலாம். இது தெரிந்திருந்தும் அவர் அப்படிப் பேசி யிருப்பது நேரு சோஷலிஸ மாகாத்மியங்களில் ஒன்றாகும்.

ஃ ஃ ஃ

கஷ்டங்கள் அதிகரிக்கும்போது மக்களின் கவனத்தைத் திருப்ப ஏதாவது ஒரு புது 'கரடி'யை விடுவதென்பது ஃபாசிஸ வல்லரசுகளின் சித்தாந்தம். இறைச்சிப் பஞ்சமும் ரொட்டிப் பஞ்சமும் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் ஏற்பட்டிருந்த போது ஹிட்லர் மகானும் முசோலினி பிரபுவும் இப்படித்தான் செய்தார்கள். இவர்கள் இறந்து விட்டார்கள் என்றாலும் இவர்களின் ஆவிகள் இப்போது பாகிஸ்தானில் பயங்கரமாக நடமாடுகின்றன எனத் தெரிகிறது. 'பசித்தவன் பழங்கணக்குப் பார்த்தான்' என்ற கதையாகப் பழைய எல்லை ஒப்பந்தத்தை இப்போது பரிசீலனை செய்ய ஆரம்பித்திருக்கிறது பாகிஸ்தான் அரசாங்கம். அதன்படி சட்நாக் என்ற கிராமத்தின் மீது உரிமை கொண்டாடி அதனருகே துருப்புக்களைக் குவித்திருக்கிறார்களாம். இந்தப் போர் வெறி எங்கு கொண்டு போய் விடுமோ, ஆண்டவன்தான் அறிவான்!

ஃ ஃ ஃ

வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை ஆண்ட போது எந்த ஒரு பிரச்னையையும் தட்டிக் கழிக்க ஓர் உபாயத்தைக் கையாளுவார்கள். 'கஷ்டமான பிரச்னைக்குக் கமிட்டி போடுவது' என்று வேடிக்கையாகக் கூறுவதுண்டு. இன்று வெள்ளைக்காரர்கள் போய் விட்டாலும் அவர்கள் ஏற்படுத்தியிருந்த வழக்கம் நம்மை விட்டுப் போக வில்லை. பாஞ்சால முதன் மந்திரி கெய்ரோன் அவர்கள் மீது நடந்திருக்கிற விசாரணைகளும், சுப்ரீம் கோர்ட்டு அளித்த தீர்ப்பும் போதாதென்று இப்போது புதியதாக இன்னொரு விசாரணை நடக்கப் போகிறதாம். சுப்ரீம் கோர்ட்டில் முன்னாள் நீதிபதி ஸ்ரீ எஸ். ஆர். தாஸைக் கொண்டு மற்றொரு முறை விசாரணை நடத்த காங்கிரஸ் மேலிடமும் பிரதமரும் முயற்சி செய்வதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அலை ஓய்ந்த பிறகு சமுத்திர ஸ்நானம் செய்யலாமெனக் காத்திருந்தவர்களின் கதை மாதிரியாகப் பஞ்சாப் முதன் மந்திரி கெய்ரோன் விஷயத்தில் நீதி கிடைக்கும்போலும்! — **சிட்டுக்குருவி**



பழைய, புதிய பிரதமர்கள்

ப்ரொபியூமா விவகாரத்திலிருந்தே பிரிட்டனில் மாக்மில்லன் சர்க்காரிடம் மக்களுக்கிருந்த அபிமானம் குறைந்து வந்தது. மாக்மில்லனிடம் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அதனால் அவர் விலக வேண்டும் என்றும் ஓர் அறிக்கையை வெளியிட, அவர் தலைமை தாங்கும் கன்ஸர்வேடிவ் கட்சியின் செயற்குழுவைச் சேர்ந்த இருநூறு பேர்களே அனுமதி தந்தார்கள்! இத்தகைய கருத்துச் சுதந்திரம் நம் நாட்டில் ஆளும் கட்சியினரிடம் நிலவாது; நிலவ முடியாது. இதன் பின்னர் பிரதமர் மாக்மில்லனுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் தமக்குள்ள பொறுப்புக்களைத் திறம்படத் தம்மால் நிர்வகிக்க முடியும் என்று தோன்றவில்லை என்பதாக அரசிக்கு அவர் எழுதி விட்டார். கன்ஸர்வேடிவ் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்பது பற்றிக் கருத்து வேற்றுமை இருந்த நிலையில் அரசி லார்டு ஹோமைப் புதிய மந்திரி சபை அமைக்குமாறு கூறினார்.

இதை யெல்லாம் பார்க்கும் போது பிரிட்டனில் நடைபெற விருக்கும் அடுத்த தேர்தலில் சோஷலிசச் சார்புள்ள இடதுசாரிக் கட்சியான லேபர் கட்சிக்கே அதிக ஆதரவு இருக்கும் என்று தோன்றுகிறது. அக்கட்சியினர் சமீபத்தில் வெளியிட்டுள்ள நான்கு அம்சத் திட்டத்தில் ஓர் அம்சம், ''தனியார் துறையின் ஒத்துழைப்புடன் விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பலனைப் புதிய தொழிலகங்களை நிறுவுவதற்குப் பயன்படுத்த வேண்டும்'' எனக் கூறுகிறது. காங்கிரஸ் கவனிக்குமா?



பின்னியின் தூய பட்டு
வேஷ்டி, அங்கவஸ்திரம்

ஆஹா ! எவ்வளவு எடுப்பான தோற்றம் !

மிருதுவான, தூய பட்டினுலான இவை உங்கள் கம்பீரத்தோற்றத்திற்கு மேலானதோர் மெருகூட்டுகின்றன.
கண்கவரும் ஜரிகை பார்டர்களுடன் கூடிய இவை, அங்கீகாரம் பெற்ற பின்னி விற்பனையாளரிடம் கிடைக்கின்றன.

பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
அக்ரஹாரம் ரோடு, பெங்களூர்-23 பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
ஸ்தாபனத்தின் ஒரு கிளை

Bm/SDA/2392a

கூந்தலின் எழிலை எடுத்துக் காட்டுகிறது


ஸ்வஸ்திக் பர்ப்யூம்ட் காஸ்டர் ஆயில்

கூந்தலை மழமழப்பாகவும் கவர்ச்சியாகவும் ஆக்குகிறது




ஸ்வஸ்திக் ஹேர்
ஸ்டைல் "மயூர்"

சிறிதளவு ஸ்வஸ்திக் பர்ப்யூம்ட் காஸ்டர் ஆயிலைத் தடவி, கூந்தலை வாரி மூன்று கால்களாக்கிக்கொண்டு நடுப்பாகத்தைச் சுழற்றி ஒரு பக்கமாகச் சாய்த்துக் கொண்டை போடவும். இரு பகுதிகளையும், எதிரும் புதிருமாகக் கொண்டையைச் சுற்றிச் சொருகிவிடவும். பொருத்தமான அணிகளினால் கொண்டையை அலங்கரித்துக்கொள்ளவும்.



ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்





30

திருமாலும் சிவபெருமானும் ஆகிய இரண்டு மூர்த்திகளும் ஒரு பெருமானே என்பதை அற்புத நிலையிலே நின்று மனம் உருகப் பாடுகிறார் பேயாழ்வார்.

தாழ்சடையும் நீள்முடியும்

[தாழ்சடையும் - சிவபெருமானுடைய நீண்ட சடையும். நீள் முடியும் - திருமாலின் உயரமான கிரீடமும்.]

ஒண்மழுவும் சக்கரமும்

[ஒண்மழு - சிவபெருமானுடைய ஒளி வீசுகிற மழு ஆயுதமும். சக்கரமும் - திருமாலின் திருவாழியும்.]

சூழ்அரவும் பொன்நாணும்

[சூழ் அரவும் சிவபெருமானை அலங்கரிக்கும் பாம்புகளும். பொன் நாணும் - திருமாலின் தங்க அரைஞாணும்,கடிசூத்திரமும்.]


இந்த இரண்டுவிதமான கோலங்களும் தோன்றுகின்றன, ஆழ்வாரின் கண்களுக்கு! எந்தத் தலத்திலே இந்த அரிய காட்சியைக் கண்டார் என்பதைப் பாடுகிறார் :

—சூழும்
திரண்டுஅருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுஉருவும் ஒன்றாய்
இசைந்து!

[சூழும் திரண்டு அருவி பாயும் - நாற்புறமும் சுற்றித் திரண்ட அருவிகள் பாயும். திருமலைமேல் எந்தைக்கு - திருவேங்கடமலையின் மேல் எழுந்தருளியுள்ள என் அப்பனுக்கு. இரண்டு உருவும் - திருமால் சிவபெருமான் ஆகிய இரண்டு கோலங்களும். ஒன்றாய் இசைந்து - ஒருருவமாக இசைந்த நிலையிலே தோன்றுமால் - தோன்றும்.]

தாழ்சடையும் நீள்முடியும்
ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும்
தோன்றுமால் — சூழும்
திரண்டருவி பாயும்
திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய்
இசைந்து!

ஆழ்வார் பெருமாளின் அருளால் பெற்ற திவ்விய தரிசனம் இது. திருவேங்கடமூர்த்தியின் சிற்ப வடிவமும் இதுவே என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் அதைப் பார்த்தவர்கள் இல்லை.



சீனத்து அரசி யெஹோனலா

சரித்திர மாணக்கன்

சீனாவை ஆண்ட ஒரு சக்கரவர்த்தினிக்கு 'முதிய புத்தர்' என்ற பெயர் வழங்கப்பட்டு வந்ததென்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். சீனர்கள், இந்தப் பெயரிட்டுத்தான் இவளைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் இவள் முதுமையடையாத ஆசையுள்ளவள்; புத்தருக்கு நேர்மாறான குணங்கள் உள்ளவள். புதிர் போல் இருக்கிறதல்லவா இவள் பெயர்?

சீனாவில் ஆதி காலத்திலிருந்து எத்தனையோ அரச வமிசங்கள் வரிசைக்கிரமமாக ஆண்டன. கடைசியாக ஆண்டது மஞ்சூ வம்சம். இந்த வமிசத்தோடு, சீனாவில், சுமார் நாலாயிரம் வருஷங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த முடியாட்சி முடிந்தது; 1912-ம் ஆண்டிலிருந்து குடியாட்சி தொடங்கியது.

மஞ்சூக்கள், சீனாவுக்கு அந்நியர்கள். சீனாவுக்கு வடக்கேயுள்ள மஞ்சூரியாவிலிருந்து வந்தவர்களானபடியால் மஞ்சூக்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இவர்கள், சீனர்களுக்குள்ளேயே ஏற்பட்ட பரஸ்பர பகைமையின் விளைவாகச் சீனாவுக்குள் புகுந்து ஆளும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். கைப் பற்றிக் கொண்டதும், சீனர்களைக் கொடுமைப்படுத்த முற்பட்டார்கள். சீன ஆண் பிள்ளைகள் தலையின் முன்பக்கம் கூடிவரச் செய்து கொண்டு, பின் பக்கம் தலை மயிரை ஒற்றைப் பின்னலாகப் பின்னி நீளமாகத் தொங்கவிட்டுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். இதற்கு இணங்காதவர்கள் மரண தண்டனை விதிக்கப்படுவார்கள் என்று இந்த உத்தரவு கூறியது. சீனர்கள் இந்த உத்தரவுக்கு எளிதில் பணியவில்லை; எதிர்த்துப் போராடினார்கள். பயனில்லை. லட்சக்கணக்கான பேர் உயிர் இழந்ததுதான் மிச்சம்.


இந்த மஞ்சூ வமிச ஆட்சியின் முடிவு காலத்தில் ஆண்டவள்தான் இந்த 'முதிய புத்தர்'. இவளுடைய இயற்பெயர், யெஹோனலா; பட்டப்பெயர் த்ஸு ஹ்ஸி. இந்தப் பட்டப் பெயருக்குக் 'கருணை உள்ளவள் — தாய்மைப் பண்பு நிறைந்தவள்' என்று அர்த்தம். உண்மையில் இவ்விரண்டும் இல்லாதவளாகவே இருந்தாள் இவள்.

உலகத்துப் பேரதிசயங்களுள் ஒன்றான சீனப் பெருஞ் சுவரைக் கட்டிய சின் ஷி ஹுவாங் தீ என்ற அரசன் (கி. மு. 221–210) தன் தலைநகரத்தைச் சுற்றி இருநூற்றெழுபது அரண்மனைகளைக் கட்டினான்; இவை ஒவ்வொன்றிலும் வைப்பாட்டிகள் இவனுக்கு இருந்தனர்.

இந்த வைப்பாட்டிகளைத் தெரிந்தெடுப்பது ஒரு சடங்காகவே நடைபெறும். பட்டத்துக்கு வரவேண்டிய இளவரசனுடைய தாயார் தன் மகனுடைய சுகபோக வாழ்க்கைக்காக, ராஜ்யத்திலுள்ள அழகான இளமங்கையர்களை வரவழைக்கச் செய்து, அவர்களில் மிக அழகான சிலரைத் தெரிந்தெடுத்து இளவரசனுடைய அரண்மனைக்கு அனுப்புவாள்.

டாவோ குவாங் என்ற சக்கரவர்த்தி 1850ம் வருஷம் இறந்து விட்டான். இவனுடைய மகன் ஹ்ஸின் பெங் என்பவன் பிறகு பட்டத்துக்கு வந்தான். இவனுக்கு அப்பொழுது இருபது வயது. இவனுடைய வைப்பாட்டிகளாக இருபத்தெட்டுப் பேர் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். இவர்களுள் ஒருத்திதான் யெஹோனலா. இவள் மஞ்சூ இனத்தைச் சேர்ந்தவள். ஒரு சாதாரண அரசாங்க உத்தியோகஸ்தனுடைய மகள். 1835-ம் வருஷம் பிறந்தவள். தன்னுடைய அழகினாலும், அபார சூழ்ச்சித் திறனாலும், வைப்பாட்டிகளுக்குள்ளே முதல் ஸ்தானத்தைச் சில ஆண்டுகளுக்குள் கைப்பற்றிக் கொண்டு விட்டாள். இந்த முதல் ஸ்தானம், சட்டரீதியாக மணந்து கொள்ளப்பட்ட பட்டத்தரசிக்கு அடுத்தது. இவளுக்குப் பிள்ளை பிறக்காவிட்டால், இந்த முதல் வைப்பாட்டிக்குப் பிறக்கும் பிள்ளைக்குத்தான் இளவரசுப் பட்டம் கிடைக்கும். இந்த ரகசியத்தைத் தெரிந்து கொண்டிருந்தாள் யெஹோனலா.

ஹ்ஸின் பெங் மன்னனுக்குப் பட்டமேறிய சுமார் ஆறுவருஷங்கள் வரையில் பட்டத்தரசியிடம் ஒரு குழந்தையும் பிறக்க வில்லை. ஆனால் யெஹோனலாவுக்கு, அந்த மன்னனிட



லிருந்து 1856-ம் வருஷம் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. உண்மையில் இவளுக்குக் குழந்தை எதுவும் பிறக்கவில்லை என்றும், யாரோ ஒரு குடியானவப் பெண்ணுக்குப் பிறந்திருந்த ஆண் குழந்தையை எப்படியோ அரண்மனைக்குள் கொண்டு வரச் செய்து, அதை, தனக்கும் மன்னனுக்கும் பிறந்த குழந்தை என்று சொல்லி எல்லோரையும் நம்பும்படி செய்து விட்டாள் என்றும் அப்பொழுது அரண்மனைப் பரிவாரத்தினர் சொல்லிக் கொண்டனர்.

ஷீன் பெங் மன்னன், 1861-ம் வருஷம் இறந்து போனான். யெஹோனலா தான் அவனை விஷம் வைத்துக் கொன்று விட்டாள் என்று வதந்தி எழுந்தது.

உடனே இவள், ஆறு வயது அடைந்திருந்த தன் மகனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினாள். அவன் யுக்த வயது அடையும் வரை, பட்டத்தரசியும் தானும் சேர்ந்து கூட்டாட்சி நடத்தி வருவது என்று ஏற்பாடு செய்து கொண்டாள். ஆனால் பட்டத்தரசிக்கு அதிகாரம் செலுத்த இவள் இடம் கொடுக்க வில்லை; தானே சர்வ அதிகாரங்களையும் மேற்கொண்டாள். இதற்குப் பிறகு த்ஸூ ஹ்ஸி என்ற பட்டப் பெயருடன் ஆண்டு வந்தாள்.

இளவரசனாகிய தன் மகன் யுக்த வயது அடைந்ததும், அவனுக்கு 1875-ம் வருஷம் ஒரு பெண்ணை விவாகம் செய்வித்தாள் த்ஸூ ஹ்ஸி; கூடவே, டுங் சீ என்ற பட்டப் பெயர் கொடுத்து அவனை அரசுக் கட்டிலில் அமர்த்தினாள். ஆனால் அவன் இரண்டு வருஷங்கள் கழித்து அம்மை போட்டு இறந்து போனான். சிறிது காலத்துக்குள் அவன் மனைவியும் இறந்து போனாள்; த்ஸூ ஹ்ஸி தான் அவளை இறந்து போகும்படி செய்தாள் என்ற வதந்தி பரவியது.



அடுத்தாற்போல் பட்டத்துக்கு வருவது யார்? இதற்காக த்ஸு ஹ்ஸி யோசித்துக் கொண்டிருக்கவில்லை. தன் ஒன்று விட்ட சகோதரி ஒருத்தியின் நான்கு வயதான ஆண் குழந்தைக்கு இளவரசப் பட்டம் சூட்டினாள். பின்னால் குவாங் ஷு அரச பீடத்தில் அமர்ந்த போதிலும் அதிகாரக் கடிவாளம் தன் கை நழுவிப் போகாதபடி பார்த்துக்கொண்டாள்.

இது இப்படியிருக்க, பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்தே, சீனா, மேலை நாட்டு வல்லரசுகளின் பலதிறச் சூழ்ச்சிகளுக்கு மெல்ல மெல்ல இரையாகிக் கொண்டு வந்தது. இதைத் தடுக்க வேண்டுமானால் ராஜ்ய நிருவாகத்தில் முன்னேற்றகரமான அநேக சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்றும், ஐரோப்பிய நாடுகளைப் பின்பற்றி அநேக திட்டங்களை வகுத்துச் செயலில் கொண்டு வர வேண்டுமென்றும் மேனாட்டுக் கல்வி பயின்ற இளைஞர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். இவர்களில் சிலர் குவாங் ஷு மன்னனை அணுகி, தங்கள் முன்னேற்றகரமான திட்டங்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். அவனும் இவர்களுக்குச் செவி கொடுத்தான். சீர்திருத்த உத்தரவுகளை ஒன்றன் பின் ஒன்றாகப் பிறப்பித்து வந்தான். இவைகளைக் கண்டு மருண்டு விட்டாள் த்ஸு ஹ்ஸி. இந்த உத்தரவுகள் அனைத்தையும் நூறு நாட்களுக்குள் வாபஸ் பெறும்படி செய்தாள்! அவனுக்கு உடல் நலம் இல்லையென்றும், அதனால் தானே ரீஜண்டாக இருந்து நிருவாகத்தை நடத்தி வர வேண்டியிருக்கிறதென்றும் சொல்லி ஒரு பிரகடனத்தை வெளியிடச் செய்துவிட்டு ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொண்டாள். குவாங் ஷு மன்னனும், தனியாக ஓரிடத்தில் காவல் கைதி மாதிரி வைக்கப்பட்டு விட்டான்.

இப்படிச் சீர்திருத்த உத்தரவுகளை இவள் ரத்து செய்து விட்டதால், முற்போக்கான இளைஞர்கள் புரட்சி செய்தனர். ஆயிரக்கணக்கில் சிறை சென்றனர். நூற்றுக் கணக்கில் தூக்கு மேடையில் ஏறினர்.

இந்தப் புரட்சிக் கருத்துக்கு வித்தூன்றித் தலைமை தாங்கி நடத்தியவன் ஸன் யாட் ஸென். இவன்தான் 1912ம் வருஷத் தொடக்கத்தில் சீனாவில் குடியரசு ஏற்படுவதற்கு மூல புருஷனாயிருந்தவன்; சீனக் குடியரசின், 'தந்தை'யாகச் சீனர்களின் நினைவில் என்றும் இருந்து கொண்டிருக்கிறவன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை நாட்டு வல்லரசுகள், மஞ்சு அரசாங்கத்தைப் பயமுறுத்திப் பயமுறுத்தி அநேக சலுகைகளைப் பெற்று வந்தன. இதனால் ஜனங்களுடைய பொருளாதார வாழ்வு பெரிதும் பாதிக்கப்பட்டது. மஞ்சு அரசாங்கத்தின் பலவீனத்தை நன்கு உணர்ந்திருந்த ஜனங்கள் மேனாட்டார் மீது துவேஷம் கொள்ளத் தலைப்பட்டனர். இந்தத் துவேஷம் முதிர்ந்து 1900-ம் வருஷம் பெரிய கலகமாக வெடித்தது. இதுவே சரித்திரப் பிரசித்தி பெற்ற பாக்ஸர் கலகம்.

இந்தக் கலகத்துக்கு உடந்தையாயிருந்தாள் த்ஸு ஹ்ஸி. மஞ்சு அரசாங்கத்தின் மீது ஜனங்களுக்கிருந்த அதிருப்தியை இப்படி அந்நியத் துவேஷமாகத் திருப்பி விட்டால், தன் பதவி இன்னும் சிறிது காலம் ஆட்டம் கொடாமல் இருக்கும் என்று இவள் நினைத்தாள். ஆனால் இவள் நினைத்தபடி நடக்கவில்லை. மேலை நாட்டு வல்லரசுகள் ஒன்று சேர்ந்து தங்கள் படை பலத்துடன், இவள் வசித்துக் கொண்டிருந்த பீகிங் தலைநகரைக் கைப்பற்றிக் கொண்டு உயிரழிவையும் பொருட் சேதத்தையும் உண்டு பண்ணின. த்ஸு ஹ்ஸி பயந்து போய் மாறு வேஷத்துடன் பீகிங் நகரத்தினின்று தப்பிச் சென்று விட்டாள். இரண்டு வருஷங்கள் கழிந்த பிறகுதான் திரும்பி வந்தாள். இந்தக் கலகத்தின் விளைவாக மஞ்சு அரசாங்கம் மேலை நாட்டு வல்லரசுகளுக்கு மொத்தமாக நூறு கோடி ரூபாய் நஷ்ட ஈடு செலுத்தியது. வேறு சில நிர்ப்பந்தங்களுக்கும் உட்பட்டது.

இதற்குப் பிறகு த்ஸு ஹ்ஸியின் அதிகார பலம் வேகமாகக் குன்றி வர ஆரம்பித்தது. இதற்குத் தகுந்தாற்போல், இவளால் காவல் கைதி மாதிரி வைக்கப்பட்டிருந்த குவாங் ஷு இறந்து போனான். எப்படி இறந்து போனான் என்பது த்ஸு ஹ்ஸிக்கு மட்டுமே தெரிந்திருந்தது. ஆனால் தன் வினை தன்னைச் சுடும் என்கிற மாதிரி இவளும் மறு நாளே தன்னந்தனிமையில் இறந்து கிடந்தாள்.

த்ஸு ஹ்ஸி, முற்போக்குச் சக்திகளுக்கு எதிரி; பிடிவாதக்காரி; தன் எண்ணம் நிறைவேற எத்தனை கொலைகளையும் செய்யத் தயங்காதவள். 'கெஞ்சினால்' மிஞ்சுதல்; மிஞ்சினால் கெஞ்சுதல்; என்பது இவள் கையாண்ட அரச தந்திரம். ஆனால் தன் உயிருக்கு ஆபத்து என்று காற்று வாக்கில் கேள்விப்பட்டால் கூடப் போதும்; அஞ்சி அஞ்சிச் சாவாள். அந்த ஆபத்து விலகி விட்டது என்று தெரிந்ததும், தனக்கு மிஞ்சினவர் யாருமில்லை என்கிற தோரணையில் பேசுவாள்.

காலையில் இவளைப் படுக்கையிலிருந்து எழுப்புவதற்கு இவளுடைய சேடிகளே அஞ்சுவார்கள். இவளுக்குக் கோபம் வந்து விட்டால் கண் மண் தெரியாது. வாய்க்கு வந்தபடி வசைபாடி விடுவாள்; சில சமயங்களில் கையையும் ஓங்கி விடுவாள். சிலருக்குக் கசையடி கொடுக்கவும் செய்வாள். இவளுடைய கசையடி உத்தரவை நிறைவேற்றச் சிலர் கூடவே இருப்பார்கள்.

ஒருசமயம் ஒரு சேடி இவளுக்குத் தலைமயிர் சீவிக்கொண்டிருந்தாள். அப்பொழுது சீப்பில் கொஞ்சம் மயிர் சிக்கிக்கொண்டு வெளி வந்துவிட்டது. இதைப் பார்த்து விட்டாள் சக்ரவர்த்தினி அம்மாள். கோபம் பொங்கி எழுந்தது. 'என் தலைமயிரை இப்படிப் பிய்த்தெடுக்கலாமா?' என்று சொல்லி அந்தச் சேடியைக் கைகொண்ட மட்டும் அடிக்க, அவளும் பாவம் இறந்து விட்டாள். இப்படிச் சிறிய விஷயங்களுக்கெல்லாம் இவளுக்குக் கடுங் கோபம் வந்துவிடும்.

அச்சத்துடன் இச்சகம் பாடி நிற்போருக்கு இவள் தர்ம தேவதை. அச்சமின்றி உள்ளதைச் சொல்லி நாட்டை நல்வழியில் திருப்ப முயலுவோருக்கு இவள் நச்சரவம்.

> ஒரு பாடகருக்கு இசையைக் கேட்பதும், அப்பியாசம் அல்லது கச்சேரி பண்ணுவதுபோல் முக்கியமானது. அது, ஒருவருடைய சங்கீத அனுபவத்தை வளப்படுத்துவதுடன் அவரது இசை அறிவையும் விசாலமாக்குகிறது. எனது பிலிப்ஸ் ரேடியோ எனக்கு முக்கியமானது. ஏனெனில் அது பல பாடகர்களின் வெவ்வேறான இசைகளையும் அநேக பண்புகளையும் எனக்கு கொணர்ந்தளிக்கிறது.

ஜி. என். பாலசுப்ரமணியம்

கர்நாடக சங்கீதத்தில் புதியதோர் பாணியை சிருஷ்டி செய்தவர். இவரது சிறந்த அம்சங்கள், 'ப்ருகா'வும் விஸ்தாரமாக அலசிப்பாடுவதுமே. ஜி. என்.பியும் ஓர் உணர்ச்சி மிகுந்த இசைப் புலவர்.



பிலிப்ஸை கவலையின்றி நம்பலாம் என்பது உலகப்பிரசித்தம். இந்தியாவில் பிலிப்ஸ் ஒன்றே இவற்றையெல்லாம் உங்களுக்கு வழங்குகின்றனர்:

■ விசேஷமான 'நோவோஸோனிக்' பாகங்கள் ■ நவீன 'லோ-லைன்' டிஸைன் ■ நம்பக் கூடிய சேவை அளிக்கவென்று பிலிப்ஸ் தொழிற்சாலைகளில் விசேஷ பயிற்சிபெற்ற ப்ரத்தியேகமான டீலர்கள் நாடெங்கும் உள்ளனர்.

பிலிப்ஸ் நோவோஸோனிக் **ரேடியோ**

PHILIPS

மிக உயர்வான தரம் ★ பரவலான வகைகள்

JWTPHR 1161A

★ விழா நாட்கள் நெருங்கி விட்டன ! ★

இதோ

நல்ல பட்டில் இன்று பலரும் விரும்பி அணியும் எங்கள் புதுத் தயாரிப்பான தங்கம் வெள்ளி ஜரிகைக் கரைகளிட்ட **"ஸில்வர் க்வீன்", "நைட்டிங் கேல்"** புடவைகள் பாவாடைகள் பின்னி மென்பட்டில் கண்ணைக் கவரும் கலர்களில் **"ராஜ ஹம்ஸ்", "விக்டரி", "கல்பனா" "அலங்கார்"** புடவைகள்.

இவற்றில்

உங்களுடைய தீபாவளிப் புடவை, பாவாடை எது என்பதை நிச்சயித்து விட்டீர்களா ?

*

தாரகராம் ஸில்க் ஹவுஸ்

கோயம்புத்தூர் - 9 - - - போன் : **2871**

வெளிவந்து விட்டது ! விற்பனையாகிறது !!

தரம்மிக்க மலிவு விலை நூல்கள் வெளியிடுவோர்

புதுக்கோட்டை மீனாட்சி பதிப்பகத்தாரின் புதிய மலிவு விலை நூல்

ஒப்பிலா நமது பாரதப் பிரதமரின் வாழ்க்கை வரலாறு !

"நமது தலைவர் நேரு"

- ★ புதிய முறையில் எழுதப்பட்டுள்ளது
- ★ தெள்ளு தமிழ் ! துள்ளு நடை !! புதிய விளக்கங்கள் !!!
- ★ சமாதான சகவாழ்வுக் கொள்கையின் தெளிவுரை
- ★ ஒவ்வொருவரும், குறிப்பாக மாணவர் உலகம் படித்து அறிய வேண்டிய நூல்

ஆசிரியர் : **எஸ். பி. இராமச்சந்திரன்**


பக்கங்கள் 90 (ஆர்ட் ஜாக்கெட்) விலை ரூ. 0-75 தான்

எமது ஏனைய சிறந்த மலிவு விலை நூல்கள் :

(வேறெந்த பதிப்பகத்திலும் வெளி வராதவை—கருத்துக் கருவூலங்கள்)

1.	உலகப் பெரியார்கள் (40 சிறந்த வாழ்க்கை விளக்கங்கள்)	ரூ.	1-00
2.	உலக அறிவு (மேற்கோள்களின் தொகுப்பு) ...	ரூ.	1-00
3.	நானாற்பது (சங்க நூல் அரிய உரையுடன்) ...	ரூ.	1-00
4.	தனிப்பாடல் திரட்டு (தமிழ் இலக்கியத் தெளிவுரையுடன்)	ரூ.	1-50

மீனாட்சி பதிப்பகம், 4142, கீழ இராச வீதி, புதுக்கோட்டை



காட்டு மைனா

சிறந்த நடிகர்களின் உயர்ந்த நடிப்பைக் கொண்ட படமாயிருந்தால், காட்சி அமைப்புக்களைப் பற்றியோ, புகைப்பட நுணுக்கங்களைப் பற்றியோ அதிகமாகக் கவனிக்கத் தோன்றாது. இயற்கைக் காட்சிகளின் சிறப்பும், புகைப்படக் கலையின் உயர்வும் அதிகமாக உள்ள படமா யிருந்தால் நடிகர்களைப் பற்றிய நினைப்பே வராது.

நீலா புரொடக்‌ஷன்ஸாரின் ''காட்டு மைனா'' இரண்டாவதாகக் குறிப்பிட்ட ரகத்தைச் சேர்ந்த படம். திரைக் கதையைப் பற்றிக் கவலையில்லை; பாடல்களைப் பற்றிக் கவலையில்லை; நடிப்பைப் பற்றியும் கவலையில்லை. இந்தப் படத்தைப் பார்த்தாலும் கவலையில்லை; பார்க்காவிட்டாலும் கவலையில்லை. படம் பார்த்தவர்கள், 'ஒன்றுக்கும் உதவாத ஒரு படத்தைப் பார்த்துத் தொலைத்தோமே!' என்று வருந்தும்படியிராது. அடர்ந்த கானகம், 'சோ'வென்று கொட்டும் அருவி, கூட்டம் கூட்டமாகப் பிளிறிட்டோடும் களிறுகள், பாயும் புலிகள், சீறும் சிறுத்தைகள், பெரிய பெரிய மலைப் பாம்புகள், நீர்ப் பறவைகள், வெண்புறுக்கள், தோகை விரித்தாடும் மயில்கள் — இப்படிப்பட்ட அதிசயப் பிராணி வர்க்கங்களை அருமையாகப் படம் பிடித்துக் காட்டினால் நடிகர்களைப் பற்றிக் கவலைப்படுவானேன்!

படத்தில் அப்படியொன்றும் உணர்ச்சிக் கொந்தளிப்போ, ஜீவ மரணப் போராட்டமோ, தீராத பிரச்னையோ எதுவும் இல்லாததால் பார்க்காவிட்டாலும் கவலையில்லை என்கிறேன்.

தென்மலை, வேல்மலை என்று காட்டில் இரண்டு பகுதிகள்; அவற்றில் வாழும் காட்டுவாசிகள் ஒருவருக்கொருவர் விரோதத்துடன் சதா சண்டையிடுகின்றனர். வேல்மலை மன்னன் மகன் வீரன் தென்மலையைச் சேர்ந்த மைனாவைக் காதலிக்கிறான். நகரத்திலிருந்து வந்த பிரபாகரன் வீரனின் தங்கை நீலியைக் காதலிக்கிறான். முதலில் காதல், பிறகு பொறாமை, அப்புறம் போர், கடைசியில் கல்யாணம். (புதுமை இல்லையே என்கிறீர்களா? காடுகளில் புதுமைக்கு எங்கே போவது?)

மலையாளப் படத்தைத் தமிழில் 'டப்' செய்து தமிழுக்குக் கொடுமை புரிந்திருக்கிறார்கள். நடிகர்களின் வாயசைப்புக்கும், படத்தில் கேட்கும் குரலுக்கும் சம்பந்தப்படுத்திப் பார்ப்பவர்கள் நிச்சயம் வேதனைக்குள்ளாவார்கள்!

வீரனாக வரும் ஆனந்தன் யானைச் சவாரி செய்து, அடிதடி சண்டைகளில் கலந்து கொண்டு கட்டுமரத்தில் சென்று, காதலில் வெற்றியும் பெறுகிறார். ஆனால் நடிப்பு...? உஸ்! பேசப்படாது.

காட்டு மைனா சாந்தியும், ஷீலாவும் வனமோகினிகளாகத் தோன்றிப் படம் முழுதும் பருவ எழிலைப் பரப்புகின்றனர். கவர்ச்சியோடு ஓரளவு நடிப்பையும் அவர்களிடம் காண முடிந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

இந்தப் படத்தில் நடிப்பு என்ற அம்சத்தை நினைவூட்டும் ஒரே ஒரு நடிகர் யார் தெரியுமா? ஒரு யானை! மைனாவின் பாட்டுக்கு ஏற்ப அது ஆடிய அழகு அற்புதம். ஆனால் பாட்டு நன்றாயில்லை. அதனால் என்ன!

ஐயாப்பிள்ளையின் தமாஷ்கள் அளவுக்கு மீறிப் போய் வேதனை அளிக்கின்றன. காட்டு மிருகங்களை விடப் படத்தின் ஒலிப்பதிவின் ஓலம் பயங்கரமாக இருக்கிறது.

திரைக் கதையின் காதைப் பிடித்துத் திருகித் தூர எறிந்துவிட்டு, நடிகர்களின் மீது யானைகளை ஏவித் துரத்திவிட்டு, பாடல்களின் கோர ஒலியும், வசனங்களின் கொடுமையும் கேளாமல் இருக்கக் காதுகளில் பஞ்சை வைத்து அடைத்துக் கொண்டு விட்டால்... காட்டு மைனா ஏ-ஒன்!

—காந்தன்



நமது அரசியல் சாஸனம்

லலிதா நடராஜன்

இதுவரை பதினேழு திருத்தங்கள்

"இந்தியாவின் மக்களாகிய நாம் இந்தியாவை ஒரு சம்பூர்ண அதிகார ஜனநாயகக் குடியரசாக அமைத்து - அதன் குடிகள் அனைவருக்கும் —
சமூகம், பொருளாதாரம், ராஜ்யம் இவற்றில் நீதியும் —
எண்ணம், வெளியீடு, கோட்பாடு, மதம், வழிபாடு — இவற்றில் சுதந்திரமும் —
அந்தஸ்து, வாய்ப்பு — இவற்றில் சமத்துவமும் கிடைக்குமாறு செய்யவும்.

தனியொருவனின் கண்ணியமும், தேச சமுதாயத்தின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடத்திலும், சகோதரத்துவம் ஓங்குமாறு செய்யவும் மனப்பூர்வமாகச் சங்கற்பம் செய்து கொண்டமையால் நமது அரசியல் நிர்ணய சபையில் 1949ம் வருடம் நவம்பர் மாதம் 26ம் தேதியான இன்று இதனால் இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டு சட்டம் இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.'' இது நமது அரசியல் சாஸனத்தின் பூர்வ பீடிகை.

அன்று முதல் இன்று வரை பதினாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. பதினேழாவது திருத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசியல் சாஸனத்தை வகுத்த பெரியோர்கள்: டாக்டர் அம்பேத்கர் (தலைவர்) என். கோபாலஸ்வாமி அய்யங்கார், அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர், கே. எம். முன்ஷி, சையத் எம். சாதுல்லா, என். மாதவராவ், கே. பி. கைத்தான், பி. எல். மித்தர் ஆகியோர்.



முன்ஷி

முதல் திருத்தம் — 1951

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு முன்னேறச் சலுகைகள் காட்டப்படுவதை யாரும் ஆட்சேபிக்காது இருக்க 15வது ஷரத்து திருத்தப்பட்டது.

சமூக நலனுக்காகக் கொண்டுவரப்பட்ட ஜமீன் ஒழிப்புச் சட்டங்கள் கோர்ட்டுகளில் இழுக்கப்படாமல் தடுக்க இரு ஷரத்துக்களும் ஒரு ஷெட்யூலும் சேர்க்கப்பட்டன.

அயல் நாடுகளுடன் நல்லுறவு, பொது ஜன அமைதி, நன்னடத்தை இவை பாதிக்கப்படும் அளவுக்குப் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் பிரயோகிக்கப்பட்டால் அதைக் கட்டுப்படுத்த ராஜ்யங்களுக்கு விரிவான அதிகாரம் 19வது ஷரத்துக்குக் கொண்டு வந்த திருத்தம் மூலம் அளிக்கப்பட்டது.



என். கோபாலசாமி

இரண்டாவது திருத்தம் — 1952

1951ம் வருஷ ஜன கணித விவரப்படி பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக 81வது ஷரத்துக்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

மூன்றாவது திருத்தம் — 1954

369வது ஷரத்தின்படி சில அத்தியாவசியப் பொருள்கள் விஷயமாக 1955 ஜனவரி 25-ந் தேதி வரை பாராளுமன்றம் சட்டம் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. இந்த அதிகாரம் நீடிக்க இத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஏழாவது ஷெட்யூலில் உணவுப் பொருள்கள், கால்நடைத் தீவனம், கச்சா பருத்தி, கச்சா சணல் இவை சேர்க்கப்பட்டன. இவற்றின் உற்பத்தி, சப்ளை இவைகளை மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்தும் வசதி இத் திருத்தம் மூலம் கிடைத்தது.




அல்லாடி

நான்காவது திருத்தம் — 1955

பொதுக் காரியத்துக்காகத் தனிப்பட்ட சொத்துக்களைக் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்யும் அதிகாரம் ராஜ்யங்களுக்கு இத் திருத்தம் மூலம் கிடைத்தது. அந்தச் சொத்துக்குச் சட்ட சபை நிர்ணயிக்கும் நஷ்ட ஈடு தொகை பற்றி கோர்ட்டுக்கு இழுக்க முடியாத பாதுகாப்பும் இதனால் அளிக்கப்படுகிறது. ராஜ்யங்கள் ஏகபோகமாக நடந்து கொள்ள அனுமதிக்கும் சட்டங்கள் செல்லத் தக்கதல்ல என்று ஏற்படாதபடி பாதுகாப்பும் இத் திருத்தம் மூலம் அளிக்கப்படுகிறது.

ஐந்தாவது திருத்தம் — 1955

ஒரு ராஜ்யத்தின் விஸ்தீரணம், எல்லே, இவைகளைப் பாதிக்கும்படியான சட்டத்தை மத்திய அரசாங்கம் இயற்றி ஞல் அதைப் பற்றி அந்த ராஜ்யம் அபிப்பிராயம் தெரிவிக்கும் கால வரையரையை நிர்ணயித்தது இந்தத் திருத்தம்.



ஆருவது திருத்தம் — 1956

விற்பனே வரி விஷயமாக நிதி விசாரணைக் கமிஷன் செய்த சிபாரிசுகளையொட்டி இத் திருத்தம்.

ஒரு ராஜ்யத்துக்கும் மற்ருெரு ராஜ்யத்துக்குமிடையே நடைபெறும் வர்த்தக விஷயங்களில் வரி விதிப்பு விஷய மாகச் சட்டம் செய்யும் அதிகாரம் இதன் மூலம் மத்திய அரசாங்கத்துக்குக் கிடைத்தது. இதன் மூலம் ராஜ்யங்கள் இந்த விற்பனேப் பொருள் விஷயமாகச் செய்யும் சட்டங் களையும் கட்டுப்படுத்த முடியும்.




ஏழாவது திருத்தம் — 1956

ராஜ்ய சீரமைப்புத் திட்டத்தை அமுல் செய்ய இத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. புது ராஜ்யம் அமைப்பது, எல்லேயை மாற்றுவது, ஒரு சட்ட சபை, இரு சட்டசபைகள் இவைகளே அமைப்பது; மொழி காரணமாகச் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இவை இந்தத் திருத்தம் மூலம் ஏற்பட்டன.

எட்டாவது திருத்தம் — 1959

பாராளு மன்றம், ராஜ்ய சட்டசபைகள் இவைகளில் ஷெட்யூல்டு ஜாதியினர், ஆங்கிலோ இந்தியர் இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதற்காக இந்தத் திருத்தம்.

பின்தங்கியவர்களுக்கு 1960 வரை இடம் ஒதுக்கியது போதும், அதன் பிறகு வேண்டியதில்லே என்று 334வது ஷரத்து கூறியது. இன்னும் 10 வருடங்களுக்கு (1970 வரை) ஷெட் யூல் வகுப்பினருக்கு இடம் ஒதுக்கவும் ஆங்கிலோ இந்தியரை நியமனம் செய்யவும் இத் திருத்தம் வழி செய்தது.



ஒன்பதாவது திருத்தம் — 1960

நேரு — நூன் உடன்படிக்கைப்படி பிரதேசங்களை இந்தியா வுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மாற்றிக்கொள்ளும் அதிகாரம் இத் திருத்தம் மூலம் கிடைத்தது. (வங்கத்தைச் சேர்ந்த பெருபாரி பாகிஸ்தானுக்கு மாற்றப்பட்டது)

பத்தாவது திருத்தம் — 1961

இந்திய யூனியனுடன் தத்ரா - நகர் ஹவேலி சேருவதைக் குறித்து முதல் ஷெட்யூலில் அப் பெயர்கள் சேர்க்கப்பட்டன.

பதினென்ருவது திருத்தம் — 1961

ஜனதிபதி, உப ஜனதிபதி இவர்களைத் தேர்ந்தெடுக்கும் புது முறையைக் குறித்தது இத் திருத்தம்.

பன்னிரண்டாவது திருத்தம் — 1962

கோவா, டையூ, டாமன் இவை இந்திய யூனியனுடன் சேருவதைக் குறித்து முதல் ஷெட்யூலில் அப் பெயர்கள் சேர்க்கப்பட்டன.

பதின்மூன்ருவது திருத்தம் — 1962

நாகா லாந்து புது ராஜ்யமாக அமைவதை யொட்டி இத்திருத்தம் கொண்டு வரப்பட்டது.

பதினன்காவது திருத்தம் — 1963

புதுச்சேரி, காரைக்கால், மாஹி ஆகிய முன்னுள் பிரஞ்சுப் பகுதிகள் இந்திய யூனியனுடன் இணைந்தது குறித்து முதல் ஷெட்யூலில் அப் பெயர்கள் சேர்க்கவே இத்திருத்தம் கொண்டுவரப்பட்டது.

பதினைந்தாவது திருத்தம் — 1963

நீதிபதிகளின் பதவியிலிருந்து விலகும் வயது 60லிருந்து 62 ஆக இத் திருத்தம் மூலம் உயர்த்தப்பட்டது.

பதினருவது திருத்தம்-'63


பிரிவினேப் பிரசாரத்தைத் தடுக்கும் அதிகாரம் இத் திருத்தம் மூலம் கிடைக் கிறது. சட்டசபையாளர் எடுக்கவேண்டிய பிரமாணத் தின் அமைப்பும் மாறுகிறது.

பதினேழாவது திருத்தம்

இது நிலச் சீர்திருத்தம் பற்றிய திருத்தம். ''எஸ் டேட்'' என்ற பதத்துக்குப் புது வியாக்கியானம் தர இதில் முயற்சி செய்யப்படு கிறது. எல்லா நிலச் சொத் துக்களுமே எஸ்டேட்தான் என்று சொல்லப்படும் இத் திருத்தம் அபாயகரமானது.

இத் திருத்த மசோதா நிறைவேற்றப் படுமாளுல் ஜீவாதார உரிமைகள் பற் றிய அத்தியாயம் முழுவ துமே நீக்கப்பட்டுவிட்ட தாகக் கருதலாம் என்கிருர் ராஜாஜி.

அரசியல் சாஸனம் இப் போது பாதிக்கு மேல் உரு மாறிவிட்டது.



சீக்கிரமாக ஆரம்பிப்பதே சிறந்த ஆரம்பமாகும். குறிப்பாக உங்கள் குழந்தைக்காகச் சேமிப்பது போன்ற முக்கியமான விஷயத்தில் இது மிகவும் பொருந்தும். 14 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுள்ள மைனர்களும் தங்கள் சேவிங்ஸ் பாங்க் கணக்கு மூலம் - எந்தச் சந்தர்ப்பத்திலும் அதிகபட்சம் ரூ. 10,000 கையிருப்புடன் பரிவர்த்தனைகள் செய்து கொள்ளலாம்.

■ வருடத்திற்கு 100 செக்குகள் ■ முன்னறிவிப்பின்றி எந்த சமயத்திலும் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ள முடியும்.
■ வருடத்திற்கு 3 சதவீதம் கூட்டு வட்டி.

தி பாங்க் ஆப் இந்தியா லிட்.

T. D. கன்ஸாரா, ஜெனரல் மானேஜர்

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

மழையில் நனைவதாகப் பிச்சுமணி பிடிவாதம் பிடிப்பதைக் கண்டு, ''என்ன பிச்சுமணி! பைத்தியம் மாதிரிப் பேசுகிறாய்!'' என்றாள் உமா.

''ஆமாம்! எனக்குச் சீக்கிரம் பைத்தியம் பிடித்து விடும் என்று டாக்டர் ஜகந்நாதன் கூடக் கிண்டல் செய்தார். அவரும் என் தாத்தாவும் சேர்ந்து கொண்டு என் எண்ணங்களுக்குக் குறுக்கே நிற்கிறார்கள் என்பதை நினைத்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துக் காரை வேகமாக ஓட்டிக் கொண்டு போய் எதன் மீதாவது 'டபார்' என்று மோத வேண்டும்போல் இருக்கிறது!'' என்று பிச்சுமணி பற்களைக் கடித்துக் கொண்டு முனகினான்.

''பிச்சுமணி! உணர்ச்சிகளுக்கோ, ஆத்திரத்துக்கோ நாம் இடம் கொடுக்கக் கூடாது. இப்போது நமக்குப் பிரமாதமாகப் படும் விஷயங்களெல்லாம் நாளை பொழுது விடிந்து பார்த்தால் அற்பமானவையாக நமக்கே தோன்றக்கூடும்.''

''இல்லை! இது அற்பமான விஷயமல்ல!'' என்று பிச்சுமணி குமுறினான்.

உமா ஏதோ யோசித்து விட்டு, பரிவுடன் அவனை நோக்கியபடி, பாசத்தை ஊட்டும் குரலில், ''பாவம், உன் தாத்தா உனக்காக வீட்டில் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பார், இல்லையா?'' என்றாள்.

''அதெல்லாம் அவர் எனக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. நான் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டுத்தான் வந்தேன்!''

''ஹோட்டலில் சாப்பிட்டாயோ?''





ஒருவர்: இந்தக் கடிகாரத்தை ரிப்பேர் செய்து தர நான் என்ன தர வேண்டும்?

கடைக்காரர்: நீங்கள் இதை வாங்க என்ன செலவழித்தீர்களோ அத்தனை தரவேண்டியிருக்கும்!

வந்தவர்: ஒருவருக்கு ஐந்து குத்து விட்டு இதை வாங்கினேன். சீக்கிரம் ரிப்பேர் பண்ணித் தா! அதைக் கொடுத்துவிட்டு இதை வாங்கிக் கொள்ளுகிறேன்!

''இல்லை! எனக்கு ஹோட்டல் சாப்பாடு பிடிக்காது! அரிசி வெந்ததும் வேகாததுமாக இருக்கும்!''

''சாயந்திரம் டிபன் சாப்பிட்டாயோ ?''

''இல்லை! மத்தியானமே எனக்கும் தாத்தாவுக்கும் வாய்ச் சண்டை ஆரம்பமாகி விட்டது.''

''அதிலிருந்து நீ பட்டினியாகவா இருக்கிறே?''

''ஆமாம்!''

''உனக்குப் பசிக்க வில்லையா?''

''பசிக்கிறது!''

உமாவின் கண்களில் நீர் துளித்தது. அதன் பெருக்கை ஒரு புன்சிரிப்பால் உமா அழுத்தி மறைத்துக் கொண்டு, ''எங்கள் வீட்டுச் சாப்பாடு உனக்குப் பிடிக்குமோ?'' என்று கேட்டாள்.

''ஓ! பிடிக்குமே!'' என்று பிச்சமணி உற்சாகத்தோடு துள்ளினான். அவனுடைய ஆத்திரம், அழுகை, கோபம், ஏக்கம் எல்லாம் எங்கோ காற்றில் பறக்கும் உமிகளாகப் பறந்து மறைந்து விட்டன.

''முதல்லே நீ சாப்பிடணும்! வா; என் வீட்டுக்குப் போகலாம்!....!'' என்றாள் உமா.

தேவலோகத்தின் வாசல் திறப்பதைக் கண்டவன் போல் பிச்சமணி பேரானந்தத்தால் குதித்துக் கொண்டு, உமாவைத் தன் காரிலேயே அழைத்துச் சென்று அவளுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

உமாவின் வீட்டில் சமையல் அறையில், ஒரு பாத்திரத்தில் உமாவுக்கு மட்டும் காணும் அளவுக்குச் சிறிது சாதமும், மோரும், வெண்டைக் காய்ப் பொரியலும் இருந்தன. போதாததற்கு ஒரு சிறு ஜாடியில் ஆவக்காய் ஊறுகாயும் இருந்தது.

உமா ஒரு பெருமூச்சு விட்டாள்.

''பிச்சமணி! வெண்டைக் காய்ப் பொரியல் மட்டும்தான் இருக்கு!.... அடுப்புப் பற்ற வைத்து இன்னும் ஏதாவது பதார்த்தம் பண்ணித் தருகிறேன்!'' என்றாள் உமா பரபரப்போடு.

''இல்லை! எனக்கு வெண்டைக்காய்ப் பொரியல் மட்டுமே போதும்!'' என்றான் பிச்சமணி, அவளுக்குச் சிரமம் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தில்.

வெண்டைக்காய் என்றால் அவனுக்கு வேப்பங்காய் போல் கசக்குமென்றாலும் உமாவின் கைபடும் வெண்டைக்காய் தேவாமிர்தம் போல் இனிக்கும் என்று பிச்சமணி நினைத்தான்.

அவன் சாப்பிடுவதற்காக உமா ஒரு தட்டை எடுத்து வைத்து ஒரு மணையும் எடுத்துப் போட்டு, அதில் அவனை உட்காரச் சொல்லி, தன் கையாலேயே சாதம் முதலானவற்றைப் பரிமாறி, அவனைச் சாப்பிடச் சொன்னாள்.

''உமா, நீங்கள்....?''

''நான் அப்புறம் சாப்பிட்டுக் கொள்கிறேன்!''

ஆனால் அப்புறமாக உமா சாப்பிடுவதற்கு வேறு எதுவுமே மிஞ்சவில்லை.

உமாவின் பரிமாறும் தளிர்க் கரங்களையும், அவள் குனிந்து நிமிரும் அழகையும், அங்க அசைவுகளையும், புன்முறுவல் பொங்கும் அவள் முகப் பொலிவையும், கண்களுக்கு இனிய பாசம் துள்ளும் கரு விழிகளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு பிச்சமணி எல்லாவற்றையும் ருசித்து ருசித்துச் சாப்பிட்டான்.

அப்படியிருந்தும் அவன் வயிற்றுக்குப் போதுமோ போதாதோ என்ற எண்ணந்தான் உமாவின் உள்ளத்தில் அடித்துக் கொண்டது.

ஒருவழியாகப் பிச்சமணி கை அலம்புவதற்காக உமா ஒரு செம்பில் நீர் மொண்டு கொடுத்துவிட்டு, ''நான் ஒன்று சொன்னால் நீ கேட்பாயோ?'' என்றாள் பாசப் பரிவின் உரிமை தொனிக்கும் குரலில்.

''நீங்கள் எது சொன்னாலும் நான் கேட்பேன்!''

''பாவம்! உன் தாத்தா உன்னை எதிர்பார்த்து ஒவ்வொரு நிமிடமும் வீட்டில் காத்துக் கொண்டிருப்பார். நீ நேரே

வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொள்! சரியா?''

''சரி! நீங்கள் சொல்வதினால்தான் நான் வீட்டுக்குப் போகிறேன், மானம் ரோஷத்தைக்கூட மறந்துவிட்டு!'' என்றான் பிச்சுமணி உணர்ச்சி வசமாகி.

உமா சிரித்தாள்.

அவளோடு சேர்ந்து பிச்சுமணியும் சிரித்தான்.

அவன் போன பிறகு, உமாவின் பாட்டி வியப்போடு தன் முகவாயில் கை வைத்தபடி, ''ஏண்டி, உமா! இதெல்லாம் என்னடி கூத்து......?'' என்று நீட்டி முழக்கிக் கொண்டே கேட்டாள்.

''பாட்டி! அந்தப் பிச்சுமணி ஒரு குழந்தை!''

''குழந்தையா? நல்லா யிருக்கிறதடீ நீ சொல்வது? அவன் கல்யாண மாப் பிள்ளை மாதிரி இருக்கான்?'' என்று பாட்டி கூறிவிட்டு, உமாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

அதற்குள் உமா சட்டென்று தன் முகத்தைத் திருப்பிக்கொண்டுவிட்டாள்.

அன்றிரவு உமா சாப்பிடாமலே படுத்துக் கொண்டாள். அவளுக்குப் பசித்தாலும் அந்தப் பசிகூட அவளுக்கு ஒருவித ஆனந்தத்தை ஊட்டுவதாகவே இருந்தது!

அத்தியாயம் பதினேழு

மிருகத் தத்துவம்

திரிபுர சுந்தரியம்மாளின் குழந்தைகளை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்வதற்காக உமா வந்தாள்.

அந்த அம்மாளின் வீட்டில் குழந்தைகள் எல்லோரும் புத்தாடைகள் புனைந்து அதி உற்சாகத்துடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.

உமாவைக் கண்டதும் அவர்களெல்லாம் குதித்தோடி வந்து, ''சித்தீ ! சித்தீ !'' என்று ஏககாலத்தில் பீரங்கி வெடிப்பது போல் கூவினார்கள்.

''சித்தியா?'' என்ற உமாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. குழந்தைகளின் வாயில் 'டீச்சரக்கா' அதற்குள் சித்தியாகவோ பாட்டியாகவோ எப்படி மாறினாள் என்பது புரியவில்லை!

''இதென்ன அதிசயமாக் கூப்பிடறீங்க?'' என்று உமா சற்றுக் கோபமாகவே கேட்டாள்.

''இல்லே, டீச்சர்! எங்கள் சிங்கப்பூர் சித்தப்பாதான் உங்களை அப்படிக் கூப்பிடச் சொன்னார்! சித்தி என்று கூப்பிட்டால் நீங்கள் 'ரொம்ப'ச் சந்தோஷப்படுவீர்களாம்!'' என்றான் ராஜீ.

உமாவுக்கு ஒரு புறம் நாணமும் இன்னொரு புறம் கோபமும் பொங்கியெழுந்தன. 'சித்தி' என்று கூப்பிடச் சொன்ன டாக்டர் ஜகந்நாதனின் துணிச்சலை நினைக்கும் போது வியப்பும் மேலிட்டது.

''இனி மேல் நீங்கள் என்னைச் சித்தி என்று கூப்பிடக் கூடாது! யார் சொன்னாலும் சரி!'' என்று உமா அவர்களைக் கண்டித்தாள்.

அத்தகைய குரலின் கடுமையை இதுவரை கண்டறியாத குழந்தைகள், ''சரியக்கா!'' என்று உமாவை வழக்கம் போல் 'டீச்சரக்கா' என்று கூப்பிடவே முடிவு செய்தார்கள்.

அவர்களுடைய அரைகுறை அலங்காரங்களையெல்லாம் உமா சீர் செய்ய முனைந்தாள்.

''டீச்சரக்கா! என் 'டிரஸ்' நல்லாயிருக்கா?'' என்று கேட்டாள் ராஜீ. அவளுக்குப் பதின்மூன்று வயதுதான் ஆகிறது என்றாலும், தன் தாயாரின் கிழிந்த பட்டுப் புடவையைத் தாவணியாகத் தைத்துப் போட்டுக் கொண்டும், வயதுக்கு மீறி நாணிக் கோணிக் கொண்டும் நின்றதால் இரண்டு வயது அதிகமான பருவப் பெண் போலவே தென்பட்டாள்.

அவளை உமா கட்டியணைத்துக் கொண்டு, ''உனக்கு ரொம்ப அழகாயிருக்கு, ராஜீ!'' என்றாள்.

உடனே மற்றக் குழந்தைகள் எல்லாம், ''என்னுது? என்னுது?'' என்று கேட்க ஆரம்பித்தார்கள்.

''எல்லோரும் ரொம்ப அழகாயிருக்கிறீர்கள்!'' என்று உமா அக்குழந்தைகளின் உள்ளங்களில் ஆனந்தத்தை நிறைவித்தாள்.

''டீச்சரக்கா! இன்னைக்கு மிருகக் காட்சிச் சாலையில் ஒரு பெரிய தமாஷ் நடக்கப் போகிறது!'' என்றான் ரவி தன் சட்டைக் காலரை நிமிர்த்தி விட்டுக் கொண்டே. குழந்தைகளிலே அவன்தான் கொஞ்சம் குறும்புக்காரன். அவன் ஏதோ மிருகக் காட்சிச் சாலையில் விஷமம் செய்யத் திட்டமிட்டிருக்கிறான் என்பது புரிந்தது.

''யாரும் விஷமம் பண்ணாமல் சமர்த்தாக வரணும். அப்போதுதான் உங்களை



பெண்: இந்தக் குழந்தை வண்டி நம்முடையதில்லை; இதில் உள்ள குழந்தையும் நம்முடையதில்லை!

ஆண்: பரவாயில்லை! அதனால் என்ன? இந்த வண்டியும் நன்றாயிருக்கிறது. இதில் உள்ள குழந்தையும் நன்றாயிருக்கிறது!

அழைத்துக் கொண்டு போவேன்!'' என்றாள் உமா.

''சரி, டீச்சர்! சரி, டீச்சர்!'' என்று எல்லாக் குழந்தைகளும் கத்தினார்கள்.

உமா புளியஞ் சாதமும் தயிர்ச் சாதமும் கட்டிக் கொண்டு குழந்தைகளுடன் புறப்பட்டுத் தெருவில் இறங்கினாள்.

அதே சமயம் அவர்களை மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்ல மாயாவி போல் டாக்டர் ஜகந்நாதனே தமது காரைக் கொண்டு வந்து நிறுத்தினார்.

''சித்தப்பா! சித்தப்பா!'' என்று கூவிக் கொண்டே குழந்தைகளெல்லாரும் காரில் தொற்றி ஏறிக் கொண்டு, ''டீச்சர்! நீங்களும் வாருங்கள் டீச்சர்!'' என்று உமாவைக் கூப்பிட்டார்கள்.

உமா தயங்கினாள்.

''என்ன தயக்கம் உமா? நான் திடீரென்று டிரைவராக ஏன் மாறுகிறேன் என்று ஆராய்ச்சி பண்ணுகிறாயா?'' என்று ஜகந்நாதன் விஷமச் சிரிப்புடன் கேட்டார்.

''பாவம்! உங்கள் நோயாளிகளை விட்டு விட்டு எங்களுடன் வருகிறேன் என்கிறீர்களே?'' என்றாள் உமா.

''தொண தொணக்கும் நோயாளிகளைவிட ஆரோக்கியத்தோடு உறுமும் மிருகங்களைப் பார்ப்பது இன்னும் வேடிக்கையாக இருக்கும்!''

''நீங்கள் உலகம் சுற்றியவர்! எத்தனையோ விதமான மிருகங்களையும் வேடிக்கைகளையும் பார்த்திருப்பீர்கள்!''

''இருந்தாலும் குழந்தைகளின் கண்ணோட்டத்தோடு பார்ப்பது புதுமையாக இருக்கும்! அதிலும் டீச்சரம்மாவின் கண்ணோட்டத்தோடும் சேர்ந்து பார்க்கும் போது எனக்கு சுவாரஸ்யமாகவும் இருக்கும்!'' என்று ஜகந்நாதன், கண்கள் மின்னவிட, மெல்லச் சிரித்தார்.

உமா சூடாக ஏதாவது பதில் சொல்ல வேண்டும் என்று துடித்தாள். அதற்குள் ஜகந்நாதன் சாதுரியமாகச் சிரித்துக் கொண்டே, ''உமா! நான் ஒரு நாவலாசிரியன்! என் கையைப் போலவே என் நாக்கும் நினைத்தபடியெல்லாம் வளையும்! அதனால் என் தமாஷ் சொற்களுக்கெல்லாம் ஆழ்ந்த அர்த்த வியாக்கியானங்கள் செய்து கொண்டு வீணாக அவஸ்தைப்படாதே!'' என்று சொல்லி விட்டு, ''என் அண்ணாவின் குழந்தைகளை நான் மிருகக் காட்சிச் சாலைக்கு அழைத்துப் போக வில்லை என்ற குறை அண்ணிக்கு இருக்க வேண்டாம். அதனால்தான் வந்தேன்!'' என்றார். பிறகு அவர் சட்டென்று குழந்தைகளை நோக்கித் திரும்பி, ''சிநேகபாலர்கள்! நாம் மிருகங்களைப் பேட்டி காணச் சீக்கிரம் போக வேண்டும்! மத்தியானமாகி விட்டால் யானை, புலி எல்லாம் தூங்கி விடும்!'' என்று கேலியாகச் சொன்னார்.

''பகலிலா தூங்கும்?'' என்று கேட்டான் சிறுவன் ரவி.

''ஆமாம்! பெரிய மனுஷர் வர்க்கமில்லையோ?'' என்று ஜகந்நாதன் கூறிச் சிரித்தார்.

உமா வேறு வழியின்றிக் காரின் பின் ஸீட்டில் ஏறி குழந்தைகளின் மத்தியில் உட்கார்ந்து கொண்டாள்.


ஜகந்நாதன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல் தமது காரை விர்ரென்று கிளப்பிச் சென்றார்.

மிருகக் காட்சிச் சாலையின் வாசல் முன்னால் ஒரு புறம், இரண்டு பெரிய கார்களுக்கு மத்தியில் பிச்சுமணியின் சின்னஞ் சிறு பேபி ஆஸ்டின் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அதை ஜகந்நாதன் ஜாடையாகக் கவனித்துக் கொண்டாரே தவிர, உமா கவனிக்கவில்லை. அதை உமாவும் கவனித்திருந்தால் அவள் நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொள்ளுமென்று ஜகந்நாதன் கற்பனை செய்து கொண்டார். உடனே அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது. அதன் பிறகு அவர் உமாவோடு அதிகமாகவும் அநாவசியமாகவும் சிரித்துப் பேசிக் கொண்டு மிருகக் காட்சிச் சாலைக்குள் வட்டமிடலானார்.

மிருகங்களின் அந்தத் தனி உலகத்துக்குள் நுழைந்ததுமே குழந்தைகளுக்குக் குதூகலம் தாங்க முடியவில்லை.

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.

கால்கேட் உடனடியாக வாய் துர்நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும். உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரீட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் வீரியமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கிடைத்திருக்கும் நூதன சுகமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.


ழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

ரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெற
யும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும்
விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.


ஆதரவுக்கு ஆதரவான
அன்னைக்கு ஆதரவு:
டால்டா
DALDA
டால்டா
பேரீச்ச மர அடையாளமிட்ட
வனஸ்பதி
■ தரத்திலுயர்ந்த தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிப்பு.
■ வளரும் சிறுவர்களுக்கான வைட்டமின்கள் அடங்கியது.
■ மோசடி செய்ய முடியாதவாறு ஸீல்வைத்த டப்பாக்களில் சுகாதார முறைப்படி அடக்கமானது.
■ மறவாதீர்கள்: திறந்த டப்பாக்களிலிருந்து சில்லறையாக வாங்கக்கூடியதல்லடால்டா.
தரத்திலும் தூய்மையிலும் சிறந்த சமையல் சாதனம்
DL. 96-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

அங்குமிங்கும் குதித்துக் கொண்டு ஓடிப் பார்க்க முயன்றார்கள்.

''இதோ பாருடா, மீன் தொட்டி'', ''அதோ, அந்தக் கூண்டுக்குள்ளே என்னடி ராஜி? புலியா?'', ''இதோ, இதோ தெப்பம்!'', ''டீச்சரக்கா ! அந்தப் பக்கம் வரிசையா என்னவோ கூண்டுக்குள் இருக்கு!'', ''முதல்லே அந்தப் பக்கம் போகலாம் டீச்சர்!'' என்றெல்லாம் குழந்தைகள் ஆளுக்கு ஒரு பக்கமாக நோக்கிக் கொண்டு ஏக காலத்தில் கூச்சலிட்டார்கள்.

''உஷ்! மிருகங்களைத் தொடாமல் கூண்டுப் பக்கம் போகாமல் தூர நின்றே பார்க்க வேண்டும்!'' என்று உமா குழந்தைகளை எச்சரித்தாள்.

அவர்களுடன் ஜகந்நாதன் பல வகையான மிருகங்களையும் பார்வையிட்டுப் பலவிதமாகப் பரிகசித்துக் கொண்டும் வந்தவர், சட்டென்று ஓரிடத்தில் நின்று சுற்று முற்றும் பார்த்தார்.

சற்றுத் தொலைவில் ஒரு கூண்டுப் பக்கம் மறைவாக இரண்டு கண்கள் எட்டி எட்டி அவர்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவை பிச்சுமணியின் கண்கள்தான் என்பது ஜகந்நாதனுக்குப் புரிந்ததும், அக்கண்களில் பொறாமையை ஏற்றி வைத்தால் தமக்கு எவ்வளவு பெருமையாகவும் சுவாரசியமாகவும் இருக்கும் என்று அவர் எண்ணமிட்டார்.

உடனே அவர் உமாவின் அருகில் நெருங்கி அவள் முகத்தை நோக்கிக் கலகல வென்று சிரித்தார்.


''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் உமா.

''சென்னை போன்ற நகரங்களில் மிருகக் காட்சிச் சாலைகளை ஏன் வைக்கிறார்கள் தெரியுமா, உமா? மனிதனின் மடத்தனத்தை எடுத்துக் காட்டுவதற்குத்தான்!''

''மனிதனின் மடத்தனமா?''

''ஆமாம்! மிருகங்களைப் பார்த்துப் பொறாமைப்படக் கூட மனிதனால் முடியவில்லை!'' என்று ஜகந்நாதன் அநாயாசமாக ஒரு பெருமூச்சு விட்டு, ''உமா! காக்கை குருவி முதல் கரடி, சிங்கம், புலி முதலான காட்டு மிருகங்கள் வரை வாயில்லா ஜீவன்கள் அனைத்தும் நம்மைப் போலத்தான் காதல் புரிகின்றன. ஆனால் அவை கலியாணம் செய்து கொள்வதோ, அதை ஆடம்பரப்படுத்துவதோ, விவாக ரத்து வேண்டுமென விதிகள் வகுப்பதோ இல்லை! அதனால் தான் மனிதனின் காதலைவிட அவற்றின் காதல் இயற்கையானதாகவும், நிலைத்ததாகவும், சுவாரசியம் குன்றாததாகவும் இருந்து வருகிறது!'' என்றார்.

விஞ்ஞான விநோதம்



காண்டாமிருகப் பால்!

புலிப் பாலைக் கறந்து வந்துவிடுவான் என்று பேச்சுக்குத்தான் சொல்வதுண்டு. பகைவரைப் படாத பாடு படுத்தும்போது காண்டாமிருகத்திடம் பால் கறப்பதென்றால்....!

ஆனால் இது உண்மையில் நடக்கத்தான் செய்கிறது. இங்கிலாந்தில் பிரிஸ்டல் நகரத்தில் உள்ள மிருகக் காட்சி சாலையில், ஸ்டான் ஈவான்ஸ் இரண்டு மாத காலம் ஸ்டீபானி என்று அழைக்கப்படும் இரண்டு டன் எடையுள்ள ஒரு காண்டாமிருகத்தினிடம் அன்புடன் பழகி, அதன் சிநேகத்தைச் சம்பாதித்துக்கொண்டு பால் கறக்கவும் ஆரம்பித்தார். இதற்குக் காரணம் என்ன தெரியுமா? ஆப்பிரிக்கக் கானகங்களில் வேட்டைப் பிரியர்கள் தாறுமாறாக காண்டாமிருகங்களைச் சுட்டுக் கொன்றுவிடுகிறார்கள். அவற்றின் குட்டிகள் பால் இல்லாமல் பசியில் இறந்துவிடுகின்றன. இந்தக் கொடுமையைத் தவிர்க்க விஞ்ஞானிகள் ஸ்டான் கறந்து தரும் பாலை ஆராய்வார்கள். பின்னர் அதைப் போன்ற சத்துள்ள பால் பவுடர் செய்து ஆப்பிரிக்காவுக்கு அனுப்புவார்கள். அங்கே அதைக் கரைத்துப் புட்டிப் பாலைத் தாயிழந்த காண்டா மிருகக் குட்டிகளுக்கு ஊட்டுவார்கள். விஞ்ஞானம் வயிற்றை நிரப்பிவிட்டாலும் அந்தக் காண்டா மிருகக் குட்டிகள் தாயன்பு இல்லாமல் ஏங்கத்தானே செய்யும், பாவம்!

''ஓ! மிருகங்களைப் போல மனித நாகரிகத்திலும் 'ப்ரீ லவ்' (சுதந்திரக் காதல்) இருக்க வேண்டும் என்ற மேல்நாட்டுக் கொள்கையை வெகு சாதுரியமாகத் திணிக்கிறீர்கள்!''

''அது மட்டுமல்ல, உமா! மிருகங்களும் நம்மைப் போலத்தான் குடும்பம் நடத்தி, குட்டிகள் பெற்றுப் போஷிக்கின்றன. ஆனால் குட்டிகளுக்குத் தானாகவே இரைதேடிப் பிழைத்துக் கொள்ளக் கற்றுக் கொடுப்பதோடு அவற்றின் கடமை தீர்ந்து விடுகிறது. மனிதனைப் போல் தன் சந்ததியரின் ஏழு தலைமுறை

களுக்கும் தேவையான சொத்துக்களைச் சேகரிக்க அல்லும் பகலும் அனவரதமும் பாடுபடுவதோ, அதற்காகத் தன் வாழ்க்கையை வீணாக்குவதோ பிறர் வாழ்க்கையைப் பலியிடுவதோ இல்லை! அவை இயற்கையோடு இயைந்து, இனிமையாகவும் எளிமையாகவும் நடத்தும் வாழ்க்கையை மனிதனால் நடத்த முடிவதில்லை. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? மனிதனுக்கு விசேஷமாக ஆண்டவனால் படைக்கப்பட்டிருக்கும் ஆறாவது அறிவு எனப்படும் பகுத்தறிவுதான்!''

''என்ன? அறிவு என்பது மனித வாழ்க்கைக்கு முட்டுக்கட்டை என்கிறீர்களா?''

''ஆமாம்! அந்த அறிவைக் கொண்டு சட்டங்கள், சம்பிரதாயங்கள், மதாசாரங்கள், சமூக லட்சியங்கள், மனித ஒழுக்கம் பற்றிய நீதி வாக்கியங்கள், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று பலப் பல தளைகளைக் கட்டிச் சுமந்துகொண்டு தன் வாழ்க்கையையும், பிறர் வாழ்க்கையையும் பாரமாக்கிக் கொண்டு வருகிறான்! மிருகங்கள் ஓர் அங்குலம்கூட முன்னேற்றம் அடையாமல் இருந்திருக்கலாம். ஆனால் தன் அறிவின் துணை கொண்டு வெகு வேகமாக முன்னேறுவதாகச் சொல்லிக் கொள்ளும் மனிதனே, தன் வாழ்க்கையின் உண்மையான இன்பத்தை இழந்து வருகிறான். நவீன விஞ்ஞான வசதிகளோ, நாளுக்கு நாள் அவனைச் சோம்பேறியாக்குகிறது. நாகரிக முன்னேற்றமோ, அவனுடைய தேவைகளைப் பெருக்குகிறது. இவற்றினிடையில் வாழ்க்கையைச் சமாளிக்க முடியாமல் அவன் அவஸ்தைப் படுகிறான்.''

இந்த அநாவசியமான பிரசங்கத்தை உமா பொறுமையுடன் கேட்டுக் கொண்டு மௌனமாகவே நின்றாள். பேச்சு சுவாரஸ்யத்தில் குழந்தைகள் அவர்களைப் பிரிந்து சென்றதைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை.

''உமா! உதாரணமாக உன்னையே எடுத்துக் கொள்! உனக்கு உள்ளூறச் சிரிக்க வேண்டும் என்று தோன்றினாலும் பெண்மையின் நாணம், அடக்கம் என்ற தளைகளைக் கொண்டு அந்தச் சிரிப்பை அடக்கிக் கொள்வாய், இல்லையா? அப்போது உன் இயற்கையை உன் அறிவே அமுக்கி விடுகிறது'' என்றார் ஜகந்நாதன் குறும்புச் சிரிப்புடன் அவளை உற்றுப் பார்த்துக் கொண்டே.

உமா கலகலவென்று வாய் விட்டுச் சிரித்தாள்.

''ஏன், சிரிக்கிறாய், உமா?''

''மனிதனை மிருகமாக்கும் தத்துவத்தைத்தான் நீங்கள் மேல் நாட்டிலிருந்து கற்றுக் கொண்டு வந்திருக்கிறீர்கள்!'' என்றாள் அவள் மெல்ல.

''மனிதனை யந்திரமாகவோ, ஜடமாகவோ ஆக்கும் தத்துவத்தை விட, மிருகங்களின் தத்துவம் எவ்வளவோ மேலானது. மேலும் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பதுதான் என் சித்தாந்தம்!'' என்று ஜகந்நாதனும் விட்டுக் கொடுக்காமல் சொல்லி விட்டு அவளோடு சேர்ந்து சிரித்தார்.

இருவரின் சிரிப்பும் தூரத்திலிருந்து கவனிக்கும் பிச்சுமணிக்கு எப்படி இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை! அதை நினைத்து ஜகந்நாதன் அதிகமாகவே சிரித்தார்!

சட்டென்று தான் அதிகமாகச் சிரித்து விட்டதை உணர்ந்த உமா தலை குனிந்து நின்றாள்.

''உமா! உனக்கு உள்ளூற ஒரு கோபம் இருக்கிறது, இல்லையா? அதைச் சொல்லி விடேன்!''

''குழந்தைகளிடம் என்னைச் 'சித்தி' என்று கூப்பிடும்படி சொன்னீர்களா?''

''உமா! உன்னை என் அண்ணாவின் குழந்தைகள் 'சித்தி' என்று கூப்பிடும் போது உன் உள்ளத்தில் எத்தகைய எண்ணங்கள் உண்டாகும் என்று அதன் விளைவுகளை ஆராய விரும்பினேன்! அதில் எனக்கு ஒரு சுவாரசியம்!''

''உங்களுக்கு உங்கள் சுவாரஸ்யம் தான் முக்கியம்! பிறர் எண்ணங்களைப் பற்றிக் கவலையில்லை! அப்படித்தானே?''

''உமா! நான் ஒரு நாவலாசிரியன் அல்லவா? என் கண் முன்னே நடமாடும் எல்லோரையுமே கதாபாத்திரங்களாகக் கருதி அவர்களிடம் எண்ணங்களை உற்பத்தி செய்து அவற்றின் அஸ்திவாரத்தின் மீது கற்பனைக் கோபுரங்கள் கட்டுவதை என் தொழிலாகக் கொண்டிருக்கிறேன்!'' என்று ஜகந்நாதன் வெகு சாதாரணமாகச் சிரித்தார்.

அந்தச் சமயம் சிறுவன் ரவி அவரிடம் வெகுவேகமாக ஓடி வந்து, ''சித்தப்பா! உங்களை யாரோ ஒரு மீசைத் தாத்தா தனியாகப் பார்க்க வேண்டுமாம்! அந்தப் பக்கம் ஒரு புலிக் கூண்டு இருக்கு! அதன் பின்னாலே அந்தத் தாத்தா ஒளிந்து கொண்டிருந்தார்.! உங்களை உடனே 'கான்டீன்' பக்கம் வரச் சொன்னார்!'' என்று சொல்லி விட்டுத் திருதிருவென்று விழித்தான்.

ஜகந்நாதன் ஒரு கணம் யோசித்து விட்டு, ''உமா! நீ குழந்தைகளுக்குச் சுற்றிக் காண்பித்துக் கொண்டிரு! நான் ஐந்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன்!'' என்று சொல்லி விட்டு விர்ரென்று கிளம்பிச் சென்று கூண்டுகளின் ஒரு திருப்பத்தில் மறைந்தார். (தொடரும்)

தினப்படி உடுப்பதற்கு மனங்கவர்

பின்டெக்ஸ்

கைநெசவுப் புடவைகள்,

பின்னி மேற்பார்வையில்

தயாராகி அவர்களால் விற்பனையாவது




பின்டெக்ஸ் கைநெசவுப் புடவை உடுக்கும் ஒவ்வொரு நாளும் உங்களுக்கு விசேஷ நாள் தான். பின்டெக்ஸ் புடவைகள் நம்பிக்கைக்கு உகந்தவை. ஏனெனில், பின்னியின் மேற்பார்வையில், ஒரே சீரான தரத்தில் தயாராகும் இவைகளில் மிகச் சிறந்த நூலே பயன் படுகிறது. நீடித்த உழைப்புக்கும் கெட்டிச் சாயத்திற்கும் புகழ் பெற்றவை இப்புடவைகள்.

உங்களுக்குத் தேவையான பின்டெக்ஸ் கைநெசவுத் துணிகளை இந்த அடையாளம் காணும் அனுமதி பெற்ற பின்னி விற்பனையாளரிடமிருந்தே வாங்குங்கள்.

பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்,
மதராஸ்

இத்தனை சுறுசுறுப்பாக நான்
என்றுமே இருந்ததில்லை!




சக்திக்கும்
வலிமைக்கும்
போர்ன்-வீடா



BOURN-VITA

தயாரிப்பாளர்கள் Cadbury's







போலீஸ் பயிற்சிக் கல்லூரி

பொதுமக்களின் நலனைக் காத்து அவர்கள் நிம்மதியுடன் வாழ உதவும் போலீஸாரின் பணி சமூக வளர்ச்சியில் இன்றியமையாத பங்கு பெறுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. பொறுப்பு நிறைந்த அந்தப் பணியைச் சீரிய முறையில் ஆற்ற அவர்கள் எப்படிப் பயிற்சி பெறுகிறார்கள் என்ற சிந்தனையும் எழுந்தது.

விளைவு வேலூர்ப் பிரயாணம். அங்குள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு முல்லிக்குடன் பேட்டி.

பூரண போலீஸ் உடையில் ஆஜானுபாகுவாக நின்று, முதல்வருடன் நின்று பேசிக் கொண்டிருந்த நான்கைந்து சிப்பந்திகளை வெளியே இருந்து கவனித்தபோது அந்த அறைக்குள் நுழையவே தயக்கமாகத்தான் இருந்தது. ஆனால் திரு முல்லிக்கின் புன்னகை கூடிய வரவேற்பும், சரளமான பேச்சும் அவர் முன்னே போய் அமர்ந்த சில விநாடிகளுக்குள்ளேயே சூழ்நிலையை மறக்கச் செய்துவிட்டன. போலீஸ் பாணியில் சிப்பந்திகளுக்கு 'டக் டக்' என்று உத்தரவு அனுப்பிவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார்.

திரு முல்லிக் பல மாவட்டங்களில் ஜில்லா போலீஸ் சூபரின்டென்டாகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர். அப்படி அனுபவம் பெற்ற சீனியர் அதிகாரிகளைத்தான் இந்தப் பதவிக்கு நியமிக்கிறார்கள். அவருக்குத் துணையாக மற்றும் பல போலீஸ் அதிகாரிகள் ஆசிரியர்களாக இங்கு பணி செய்கிறார்கள்.

முதல்வரின் அறையில் திரு முல்லிக் மாத்திரம் அமர்ந்திருக்கவில்லை. 1905-ம் ஆண்டில் இப்போதைய கல்லூரி ஒரு பள்ளியாகத் தொடங்கப்பட்ட நாளிலிருந்து முதல்வர் பதவி வகித்த அத்தனை பேர்களுமே அவர் கூட அமர்ந்திருக்கிறார்கள்.

மேலே: விரல் ரேகைப் பரிசோதனை. (வலதுபக்கம்) கல்லூரி முதல்வர் திரு முல்லிக்.





கீழே: அடாது மழை பெய்தாலும் விடாது போலீஸாரின் பரேட் நடக்கும்.

ஆம்! அந்த மாஜி முதல்வர்களின் பெரிய உருவப் படங்கள் வரிசைக்கிரமமாக அந்த அறையின் சுவரை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றன. ''நான் இன்னென்ன அபிவிருத்தி செய்தேன் இந்தக் கல்லூரிக்கு! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று ஒவ்வொரு பழைய முதல்வரும் அடுத்தாற்போல் பதவியில் வந்து அமரும் நபரைக் கேட்பது போல் இருக்கிறது!

சரித்திரப் பிரசித்தி பெற்ற வேலூர்க் கோட்டைக்குள்ளிருக்கும் 'ஹைதர் மஹால்' 'திப்பு மஹால்' பகுதிகளில் இயங்கி வரும் மாநிலத்தின் இந்த ஒரே பயிற்சிக் கல்லூரிக்கும், அந்நியர் ஆட்சியை எதிர்த்து எழுந்த சிப்பாய்க் கலகத்துக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய வேலூர்ப் புரட்சிக்கும் ஒருவித இணைப்பைக்கூட நாம் கற்பனை செய்துகொள்ளலாம்.

ஆனால் சிப்பாய்க் கலக நிகழ்ச்சிகளைத் தொடர்ந்துதான் 1859ம் ஆண்டில் தனி போலீஸ் நிர்வாகத்துக்கான விதி முறைகள் நாட்டில் அமுலுக்கு வந்தன. அதே ஆண்டில்தான் உயர்நீதி மன்றங்களும் மாநிலங்களில் செயல்படத் தொடங்கின. அப்போது சென்னை மாநிலத்தில் கவர்னராக இருந்த சர் சார்லஸ் டிரெவெலின் போலீஸ் நிர்வாகச் சீர்திருத்தங்களில் வெகுவான அக்கறை காட்டினார்.

1902ம் ஆண்டில் லார்ட் கர்ஸான் காலத்தில்தான் போலீஸ் கமிஷன் ஒன்று நிறுவப்பட்டு, போலீஸில் சேருபவர்களுக்கு விசேஷப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்ற நியதி அமுலுக்கு வந்தது.

1905ம் ஆண்டில் முதல் கோஷ்டி வேலூர் போலீஸ் பள்ளியில் சப் இன்ஸ்பெக்டர்களுக்கான பயிற்சி பெற்றது. கெஜட் பதிவுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கான பயிற்சி அளிக்கவும் அப்போதே ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கல்லூரி முதல்வரின் நிர்வாகத்தில் கீழே போலீஸ்காரர்கள் பயிற்சி பெறும் பள்ளியும், சப்–இன்ஸ்பெக்டர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் பயிற்சி பெறும் கல்லூரியும் இருக்கின்றன. முந்திய பிரிவுக்குப் பயிற்சிக் காலம் நான்கு மாதம். பிந்திய பிரிவுக்கு ஒரு வருடம். போலீஸ்காரர்களுக்கான மற்றொரு பயிற்சிப் பள்ளிக்கூடம் கோவையிலும் இருக்கிறது.

இப்போது இந்த வேலூர்க் கல்லூரியில் எழுபத்தி நான்கு சப் இன்ஸ்பெக்டர் பதவி ஏற்க வேண்டியவர்கள் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். கிரிமினல் லா, எவிடென்ஸ் லா, மெடிகல் ஜூரிஸ்புருடென்ஸ், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான விஞ்ஞான ரீதியில் அமைந்த வழிகள், பிளான் வரைதல் முதலிய பிரிவுகளில் அனுபவம் மிக்க போலீஸ் அதிகாரிகளே போதகர்களாக அமர்ந்து சொல்லிக் கொடுக்கிறார்கள். புத்தகங்களில் உள்ள பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும்போதே தங்களுக்குப் பல மாவட்டங்களில் கிடைத்த நேரடி அனுபவங்களையும், தாங்கள் புரிந்த சாகசச் செயல்களையும் உதாரணங்களாய்ச் சொல்ல வாய்ப்பிருப்பதால் பயிற்சி பெறுபவர்கள் குறிப்பிட்ட சட்ட திட்ட நிர்வாகங்களில் போதிய விஷய ஞானத்தை அடைய நிறைய வாய்ப்பு இருக்கிறது.

முற்பகல் ஒன்பதரையிலிருந்து ஒரு மணி வரையிலும் பிற்பகல் மூன்றிலிருந்து நாலரை மணி வரையிலும் பாட சம்பந்தமான வகுப்புகள், மாலையில் தினசரி கண்டிப்பான டிரில் வகுப்புகள். போலீஸ் பணியில் உள்ளமும் உடலும் ஒரே அளவில் எந்த ஆபத்தான நிலையையும் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு போலும்.

கல்லூரிக்கான ஹாஸ்டல், கல்லூரியை ஒட்டியே யிருக்கிறது.

ஒரு மாதிரிப் போலீஸ் ஸ்டேஷன், விளையாட்டு மைதானம், வாசகசாலை, போலீஸ் துறை சம்பந்தப்பட்ட மியூஸியம் எல்லாம் பயிற்சியாளர்களுக்கு உதவி செய்கின்றன. வாசகசாலை நிர்வாகி தம் பொறுப்பை நிறைவேற்றும் முறையைப் பல வெளியூர் வாசகசாலை நிர்வாகிகள் கண்டு பின்பற்றினால் பொதுஜனங்களுக்கு உதவியாக இருக்கும். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வரும் போலீஸ் துறை சம்பந்தமான சஞ்சிகைகளை இங்கே காண முடிகிறது.

சென்னை மாநில போலீஸ் கைரேகைச் சாலையின் தலைமைப் பீடம் இந்தக் கல்லூரியுடன் இணைந்திருப்பது ஒரு விசேஷ அம்சமாகும்.

மனித வர்க்கத்தில் ஒரு நபருடைய விரல் ரேகையோ உள்ளங்கை ரேகையோ தனித்துவம் பெற்று நிச்சயமாக மற்றொரு நபருடைய ரேகைகளைப் போல இருக்காது என்ற தத்துவத்தின் அடிப்படையில் இயங்கும் இந்தக் கைரேகைச் சாலை நாட்டில் நடந்த பல பெரிய குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க உதவியிருக்கிறது; உதவிக் கொண்டிருக்கிறது.

மாநிலத்தின் எந்த மூலையிலாவது ஒரு குற்றவாளி பிடிபட்டு, தன் பெயர் இன்னதென்றும், தான் செய்த முதல் குற்றம் இதுதான் என்றும் சொல்லும்போது அவனுடைய ரேகைகளைப் பதித்து அந்தக் காகிதத்தை இங்கே முதல் வேலையாக அனுப்பி வைக்கிறார்கள். பூதக் கண்ணாடி கொண்டு அந்த ரேகைகளைப் பார்க்கும் நிபுணர் உடனே அது என்ன பிரிவைச் சேர்ந்தது என்று பார்த்து அந்தப் பிரிவிலுள்ள சுமார் நூறு பழைய கேடிகளின் கைரேகை ரிக்கார்டுகளை எடுத்து ஒவ்வொன்றுடனும் புதிதாக வந்ததை ஒப்பிட்டுப் பார்க்கிறார். அநேகமாக அதே கை ரேகை அந்தப் பழைய கும்பலில் அகப்படும். அதிலிருந்து அந்தப் பழைய கேடி ஜெயிலிலிருந்து வெளிவந்த பிறகு பெயரை மாற்றிக் கொண்டு முதல் குற்றத்தை இப்போதுதான் செய்ததாகச் சொல்லியிருக்கிறான் என்பதை ஊர்ஜிதப் படுத்துகிறார். சில சமயங்களில் அவன் முதல் குற்றவாளியாகவும் இருக்கலாம்.

இந்த ரேகை பிரிக்கும் 'டெக்னிகல்' பிரிவில் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் வேலை செய்கிறார்கள். சாதாரணக் குமாஸ்தாக்கள் அல்லாத இந்த மாதிரி தொழில் நுணுக்கப் பிரிவில் பெண்கள்

பயிற்சி பெற்று வேலை செய்வது இங்குதான் என்று தெரிகிறது.

சாதாரண பிராமிசரி நோட்டு வழக்கி லிருந்து, பிரேதப் பார்சல் வழக்கு வரை குற்றவாளி இன்னார்தான் என்று சுகப் பிக்க இங்கு நடக்கும் ரேகைப் பரிசோதனைகள் வெகுவாக உதவுகின்றன.

ஒன்றுமே புரியாத வகையில் ஒரு ரெவின்யூ ஸ்டாம்பின் மேல் வண்டி மையால் ஒரு ரேகை அழுக்கல் செய்யப்பட்ட ஒரு பிராமி சரி நோட்டை ஆதாரமாகக் கொண்டு ஒரு வாதி ஒரு பிரதிவாதியைக் கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்தினார். பிரதிவாதியோ தான் இந்த வாதியிடம் எந்த விதமான பண வியவகாரமும் வைத்துக் கொள்ள வில்லை என்று வாதாடினார். புரோ நோட்டி லுள்ள புரியாத ரேகையை விசேஷ சாத னங்கள் கொண்டு தெளிவாக்கிப் படம் பிடித்து அத்துடன் பிரதிவாதியின் கை ரேகைகளை ஒத்திட்டுப் பார்த்ததில் இரண் டுக்கும் ஸ்நானப் பிராப்தி கூட இல்லை என்று தெரிய வந்தது. இந்த ஆதாரத்தின் அடிப்படையில் பிரதிவாதி பிழைத்தார்.

இதைப் போல் ஒரு பிரசித்தி பெற்ற கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட வரின் வீட்டின் சுவரில் கிடைத்த இரத்தக் கறை படிந்த ரேகை அடையாளங்களும், எங்கோ சில நாட்கள் கழித்துக் கிடைத்த கொலையுண்டவரின் சரீரத்திலிருந்து கிடைத்த ரேகை அடையாளங்களும், குற்றம் சாட்டப் பட்டவரின் ரேகைகளும் ஒன்றாக ஒத்துப் போய் ஐயந்திரிபு இல்லாமல் கொலையாளி யைச் சுட்டிக் காண்பித்துத் தண்டனை வாங் கிக் கொடுத்துவிட்டன.

தம்முடைய பயிற்சிக்கால அனுபவங்களைப் பற்றி ஒரு கெஜட் பதிவு அதிகாரி குறிப்பிட் டிருப்பது சுவாரசியமாகவும் பொது ஜனங் களிடம் போலீஸ் இலாக்கா மீது மதிப்பு அதிகரிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. வேலூர்க் கல்லூரியிலே பயிற்சி பெற்று முடிந்ததும் குறிப்பிட்ட அந்த அதிகாரியை நேரடிப் பயிற்சி பெற மசூலிப்பட்டணத்தில் உள்ள ஜில்லா போலீஸ் சூப்பிரெண்டெண் டிடம் போக உத்தரவிட்டார்கள். ஆந்திர மாகாணம் தோன்றாத காலம் அது. பயிற்சி யாளர் மசூலிப் பட்டணம் போய் இறங் கினார். அங்கிருந்து சூப்பிரண்டெண்ட் பங்களாவுக்குப் போய்ச் சேர வாகன வசதி கிடைக்க வில்லை. அவரை வரவேற்க வந்த உள்ளூர் இன்ஸ்பெக்டர் தம் காரிலேயே போகலாம் என்று அழைத்தார். பயிற்சி யாளர் அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டார்.

தம் பங்களா வராந்தாவில் அமர்ந் திருந்த அந்த மாவட்ட போலீஸ் அதிகாரி, பயிற்சியாளர் காரில் வந்து இறங்குவதைக் கண்டார். எடுத்த எடுப்பிலேயே வேறு ஒன்றையும் கேட்காமல், ''நீங்கள் வந்து இறங்கியது உங்கள் காரா?'' என்றார்.

''இல்லை! இந்த ஊர் இன்ஸ்பெக்டரின் கார்'' என்ற பதில் வந்தது. அவ்வளவுதான்! அந்த அதிகாரி சீறி எழுந்தார்.

''நீங்கள் செய்த முதல் மாபெரும் தவறு இது! இந்த உத்தியோகத்தில் நீங்கள் பிறர் உதவியை உபயோகிப்பதோ, அதை நாடு வதோ விரும்பத் தகாத காரியம்! நீங்கள் நடந்து வந்திருந்தால் நான் மிகுந்த சந் தோஷப்பட்டிருப்பேன். யாரிடமிருந்தும், எதையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிர் பாராமல் தம் பணியைச் செய்யும் வழக்கம் இந்த இலாக்கா உத்தியோகஸ்தர்களிடம் வளர்ந்தாக வேண்டும்! இதோ மேஜை மீது பாரும்! நாலணா சாமான் வாங்கியதற்குக் கூட நான் முன் ஜாக்கிரதையாகப் பில் வாங்கி வைத்திருக்கிறேன். இந்த வழக் கத்தை நீங்களும் கடைப்பிடிக்க வேண்டும்'' என்று ஒரு பெரிய உபதேச உரை நிகழ்த்தி விட்டுத்தான், அவர் பயிற்சியாளரை முறைப் படி வரவேற்றாராம்.

''சில சமயங்களில் நான் போலீஸ் இலாகா மீது குறைப்பட்டுக் கொண்டிருந்தாலும், அடிக்கடி அவர்களுடைய பொறுப்பு மிகுந்த பணியைப் பற்றியும் சூழ்நிலைகளைச் சமாளிக் கும் விதம் பற்றியும் நினைத்து வியப்படைந் திருக்கிறேன். அவர்களுடைய பணி சிரம மானது, சிக்கலானது, மென்மையானது, அனுதாபத்துக்குரியது. பொதுமக்களின் நம் பிக்கையையும், ஒத்துழைப்பையும் அவர்கள் அஸ்திவாரமாகக் கொண்டால் அவர்கள் பணி இலகுவாக இருக்கும். அவர்களுடைய பெரு மையும் உயரும்'' என்று பாரதப் பிரதமர் நேரு சமீபத்தில் சென்னையில் நடந்த போலீஸ் நூற்றாண்டு விழாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருப்பது, அந்த இலாக் காவுக்கு ஒரு நற்சாட்சியாகவே அமைந் திருக்கிறது.

''பாரதத்திலேயே முதல் போலீஸ் பயிற்சிக் கல்லூரி, அதுவும் தமிழ் நாட்டில் இந்த மாதிரி பிரத்தியேகமாக நிறுவப்பட்ட முதல் கல்லூரி இதுதான்'' என்று குறிப் பிட்ட முதல்வர் திரு முல்லிக்கிடம் விடை பெற்றுக் கிளம்பிய போது, நமது மாநிலப் போலீஸ் உத்தியோகஸ்தர்களைப் பற்றிய பெருமை உள்ளத்தில் உயர்ந்து நின்றது.



டாக்டர்: நேற்றுச் சாயந்திரத்தைக் காட்டிலும் உன் இருமல் தெளிவாகக் கேட்கிறதே!

நோயாளி: கேட்கத்தானே கேட்கணும்! இரவு முழுதும் இருமி இருமிப் பழகிக் கொண்டிருக்கிறேனே!

மூன்று கடைகள்
முதல்தர ஜவுளிகள்
முகமலர்ந்த வரவேற்பு

[பின்னி - புல் வாயில் எங்கள் தனிச் சிறப்பு]

ராமு & கோ.

1	2	3
போன் . 4397 ஆர். எஸ். புரம்	போன் : 5124 300, அவினாசி ரோடு	கிராஸ் கட் ரோடு காந்திபுரம்

கோயமுத்தூர்

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)

கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சியளித்து, ஞாபகசக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.


யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்யமாக வாழ்வீர்கள்


விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)


SHRI RAMTIRTH YOGASHRAM
DADAR, BOMBAY - 14

மதராஸ் டிப்போ : 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ் - 3




1, 2. ஈ. வி. சரோஜா நடனக் குழுவினர் 'மனோன் மணீயம்' நாட்டிய நாடகத்தைச் சமீபத்தில் அரங்கேற்றினர். இந்த அரங்கேற்று விழாவில் ம. பொ. சி. அவர்கள் பாராட்டிப் பேசுகிறார். 3. நான்காவது அகில இந்திய போலீஸ் சயன்ஸ் காங்கிரஸ் ராஜாஜி ஹாலில் நடைபெற்றது. இந்த வைபவத்தைச் சென்னை கவர்னர் ஆரம்பித்து வைத்தார். 4. பெண்களாலேயே நிர்வகிக்கப்படும் கனரா இண்டஸ்டிரியல் அண்ட் பாங்கிங் சிண்டிகேட்டின் தியாகராய நகர் கிளைக்கு ஸ்ரீமதி விஷ்ணுராம் மேதி விஜயம் செய்தார். 5. திரு கே. அருணாசலம் (அருண்) அவர்களின் 'அந்த நாள்' 'தமிழகத்தின் ஒளி விளக்கு' இவ்விரு புத்தகங்களையும் சென்னை முதன் மந்திரி திரு பக்தவத்ஸலம் வெளியிட்டார். 6. தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை, நேர்மையையும் ஒற்றுமையையும் வளர்க்க நம் நாட்டில் யாத்திரை செய்து வரும் எம். ஆர். ஏ. குழுவினரைச் சமீபத்தில் வரவேற்றுக் கௌரவித்தது. ஸ்ரீ ராஜ்மோகன் காந்தி வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிறார்.










பஞ்சாமிர்தம் பம்பாய் போகிறார்!

கோமதி சுவாமிநாதன்



[எழுத்தாளர் பஞ்சாமிர்தத்தின் வீட்டுக் கூடம். தடித்த புத்தகம் ஒன்றைப்பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் பஞ்சாமிர்தத்தின் முகத்தில் கோபம், வியப்பு, மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளின் ரேகைகள் மாறி மாறி விழுகின்றன.]

பஞ்சாமிர்தம் : (உட்பக்கம் பார்த்து) ஏய் இடியட்! இடியட்!

(பஞ்சாமிர்தத்தின் மனைவி பெரியநாயகி உள்ளிருந்து வருகிறாள்.)

பெரியநாயகி : என்ன? இடியாப்பமா? ஏதாவது பழம் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நடக்கிறதோ? அந்தச் சூழ்நிலைக்கு 'மாட்ச்'சாக இடியாப்பம் டிபன் கேட்கிறதோ?

பஞ்சாமிர்தம் : நீ வந்துட்டியா? நாடகத்திலே சீன் ஞாபகம் இல்லாமல் நுழைகிற நடிகன் மாதிரி! இடியாப்பமும் வேண்டாம்! அடியாப்பமும் வேண்டாம்! நீ கடிக்காமல் உள்ளே போனால் சரி!... உன் பிள்ளையைக் கூப்பிட்டேன். எங்கே அந்தத் தடியன்?

பெரியநாயகி: என்னைக் கண்டாலே உங்களுக்கு.....

பஞ்சாமிர்தம்: உஷ்! உன் தனி உரையை ஆரம்பித்து விடாதே! என் சிந்தனைக் கோவையை அது வெங்காயம் நறுக்கும் கத்திமாதிரி வெட்டி விடும்!.... இதோ பாரு! உன்னைக் கண்டவுடன் நானும் சூரியனைக் கண்ட தாமரை மாதிரி முகம் மலரத் தயார்! ஆனால் நீ என் மேல் பாயாமல் ஒதுங்கிப் போய் விட வேண்டும்! சூரியன் தாமரையை விட்டு எவ்வளவோ தூரத்தில் இருப்பதுதான் தாமரை மலர்வதற்குக் காரணம்!

பெரியநாயகி: இப்போ ஆராய்ச்சிச் சேறு நிறைந்த தாமரைக் குளத்திலே இறங்கிவிட்டாப் போலிருக்கு!... ஐயோ! தாமரைக்கும் உங்களுக்கும் என்னதான் பொருத்தமோ?

[பஞ்சாமிர்தத்தின் பையன் ராஜு வெளியிலிருந்து வருகிறான்.]

ராஜு: என்னப்பா! இங்கே ஏதும் சமாதான மகாநாடு நடக்கிறதா? ரொம்ப அமைதி நிறைந்த சூழ்நிலையாக இருக்கிறதே!

பஞ்சாமிர்தம்: ஏண்டா! தபால்காரன் கொண்டு வந்து போடுகிற தபால்களை ஒழுங்காகப் பொறுக்கி மேஜைமீது வைக்கிற அளவுக்குக்கூட உனக்குப் பொறுப்பில்லே! காலேஜுலே வேறு படிக்கிறேன்னு பெருமை யடிச்சுக்கறே!

ராஜு: காலேஜிலே அந்த வேலையை எல்லாம் பியூன் பார்க்கிறான் அப்பா! எங்களுக்கு இதுவரை சொல்லித் தரவில்லே. ஒருவேளை அடுத்த 'டெர்மிலே' சொல்லித் தருவார்களோ என்னவோ?

பஞ்சாமிர்தம்: வாயை மூடுடா அதிகப் பிரசங்கி!.... ஒரு முக்கியமான எழுத்தாளர் மகாநாட்டுக்கான அழைப்பிதழ் வந்திருக்கிறது! அது வந்த கவரையும் எங்கோ தூக்கி எறிந்துவிட்டு வெறும் 'இன்விடேஷனை' இந்த மகாபாரதப் புத்தகத்துக்குள்ளே திணித்து வைத்திருக்கிறாய்?

பெரியநாயகி: நீங்க உங்க மகாபாரதத்தைத் திறந்து விட்டீர்களா?

பஞ்சாமிர்தம்: ஏய் அசோகவனம்! நீ குறுக்குச் சாலோட்டாதே! நல்லவேளையாக இந்தப் புத்தகத்தைப் பார்த்தேன். இல்லாத போனால் அந்த மகாநாடெல்லாம் முடிந்து போய் மூன்று மாத காலத்துக்குப் பின்தான் விஷயம் தெரிந்திருக்கும்!... நான் இந்த வாரமே பம்பாய் போயாக வேண்டும். முப்பதாந் தேதி மகாநாடு....

பெரியநாயகி: டேய் ராஜு! உங்க அப்பாவுக்கு இப்பவே 'பம்பாய் அட்மாஸ்பியர்' வந்துடுத்து. தலையிலே ஒரு சேட்ஜி குல்லா வைத்துக் கொண்டு பேசினால் பொருத்தமாக இருக்கும். ஒரு குல்லா பார்த்துக் கொடு! இலக்கிய ஆராய்ச்சி செய்யற போது பழம் தமிழ் டிபன் இடியாப்பம் வேண்டு மென்று கேட்கிறார்.

பஞ்சாமிர்தம்: நான்சென்ஸ்! கேக் சாப்பிட்டுக்கொண்டே நான் இதை ஆராய்ச்சி பண்ணுவேன்! எனக்கு ஒருத்தரும் குல்லாப் போட வேண்டாம். நான் போடுவேன் எத்தனையோ பேருக்கு!

பெரியநாயகி: போன ஜன்மத்திலே பெருமாள் கோவில் பட்டராக இருந்து வருகிறவர்களுக்கெல்லாம் சடாரி சாதித்தீர்களோ, என்னவோ?

பஞ்சாமிர்தம்: (காதைப் பொத்திக் கொண்டு) சிவ சிவா! டேய் ராஜு! உங்க அம்மாவைக் கொஞ்சம் பேசாமல் இருக்கச் சொல்லிவிட்டுக் காரியத்தைப் பாருடா! ரயில்வே கைடை எடு! லாண்டரியிலே துணி வந்துடுத்தா பார்!

பெரிய நாயகி: (உள்ளே போய்க்கொண்டே) லாண்டரியிலே போய் கைடையும் ரயில்வே ஸ்டேஷனுக்குப்

போய்த் துணியையும் வாங்கிண்டு வாடா! [போகிறான்]

ராஜு: என்ன மகாநாடாம் அப்பா!...

பஞ்சாமிர்தம்: அகில உலக ஹிந்தி சம்மேளனமாம்! என்னைப் பார்வையாளனாக் கூப்பிட்டிருக்காப் போலிருக்கு!....

ராஜு: பேஷ்! பேஷ்!.. மசால் வடைக்கும் மஹாளய அமாவாசைக்கும் உள்ள உறவுதான்! உங்களுக்குத்தான் ஹிந்தி சுட்டுப் போட்டாலும் வராதே!

பஞ்சாமிர்தம்: அச்சா! நல்ல கேள்வி கேட்டாய் போ!...

ராஜு: போதும்! போதும்! நீங்கள் 'அச்சா' என்ற ஒரு வார்த்தையைச் சொன்ன அழகே போதும்! உங்களைப் பிறவி ஹிந்திக்காரன் என்று நினைத்துக் கொள்வார்கள்! நீங்க ஜனதாவிலேதானே போகப் போகிறீர்கள்?

திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் மத்தியானம் ஒண்ணரை மணிக்குப் புறப்படுகிறது!



பஞ்சாமிர்தம்: மண்டு! எக்ஸ்பிரசிலே முதல் கிளாசிலே ஒரு பெர்த் புக் பண்ண வேணும். ஒருவேளை போக வர அவர்களே சார்ஜ் கொடுத்தாலும் கொடுப்பார்கள். மேலும் ஒரு பார்வையாளன் அந்தஸ்தாகப் போய் இறங்க வேண்டாமோ?

ராஜு: முதலில் போட்டுப் புரட்டப் பணம்?

பஞ்சாமிர்தம்: மறந்தே போய்விட்டேன். 'அர்த்த ஜாம'த்தின் ஆசிரியரிடமிருந்து கடுதாசி வந்ததோ?

ராஜு: ஓ. வந்துடுத்தே! மேஜை டிராயரிலே இருக்கு.

பஞ்சாமிர்தம்: பின்னே என்னடா கவலை? குறுநாவலை எடுத்துக் கொண்டுவிட்டார்.

ராஜு: எடுத்துக் கொண்டுவிட்டார் இல்லையப்பா! எடுத்துக் கொன்றுவிட்டார்! அது திருப்திகரமாக இல்லை என்று திருப்பியிருப்பதாக எழுதியிருக்கிறார்.

பஞ்சாமிர்தம்: நிலை வை! ஹூம்! குறுநாவல் நினைக்கிறபோது எழுதலாம்! ஆனால் பம்பாய் மகாநாடு நினைக்கிறபோது நடக்குமா? நம்ப கான்டீன் மானேஜர் ரகுபதி கிட்டே இருநூறு மூந்நூறு புரட்டிக் கொள்ளலாம்.

ராஜு: அப்பா! டேன்ஜர்! அந்த ரகுபதி சாரோட பொண் பம்பாயிலே இருக்கா. ரொம்ப நாளா ஒரு ஆட்டுரலும் குழவியும் மெட்ராஸிலிருந்து வாங்கி அனுப்பச் சொல்லிக் கொண்டிருக்கிறாராம். மனுஷன் பணத்தையும் கொடுத்து, கூட உரலைத் தலையில் கட்டிவிடுவார். அதற்கும் முதல் வகுப்புப் பிரயாண யோகம் கிட்டும்!

பஞ்சாமிர்தம்: முடியாது என்று சொல்கிறது!

ராஜு: மனுஷன் பணத்தைக் காட்ட மாட்டார்! உரலையும் குழவியையும் தான் காட்டுவார்.

பஞ்சாமிர்தம்: வாஸ்தவம். நான் வேறு ஏற்பாடு பண்ணி டிக்கட் 'புக்' பண்ணிவிடுகிறேன்! முதலில் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டித் தலைவருக்கு நான் போய்ச் சேரும் தேதியை அறிவிக்க வேண்டும்!... அடுத்த திங்கட்கிழமை எக்ஸ்பிரஸ்தான் சரியானரயில்.

ராஜு: பம்பாயில் எங்கே தங்கப் போகிறீர்கள்?

பஞ்சாமிர்தம்: ஏண்டா? இடத்துக்கா பஞ்சம்?... வடலாவிலே நம்ப பரமேசுவரன் இருக்கிறான்! என் கூடப் படித்தான்! இல்லே, ஸயானிலே கஸ்தூரி ரங்கன் இருக்கிறார்.

ராஜு: அந்தப் பரமேசுவரன்தானே முன்னாலே ஒரு சமயம் தான் எழுதின கதை ஒன்றை உங்களுக்கு அனுப்பி அபிப்பிராயம் கேட்டபோது 'காசிக்குப் போகாமலேயே நீ எழுதுகிற ஆசையை விட்டுவிடலாம்! சலவைக்காரன் கணக்கைக் கூட வேறு யாரைக் கொண்டாவது இனி எழுதச் சொல்' என்று 'அட்வைஸ்' பண்ணினீர்கள்.

பஞ்சாமிர்தம்: (முகவாய்க் கட்டையைத் தடவிக்கொண்டு) ஆமாம்! அந்தப் பயல் வீட்டில் போய் இறங்குவது கொஞ்சம் கஷ்டம்தான்!.... பார்க்கலாம்!....

ராஜு: பம்பாயோ உங்களுக்குப் புதிது! இங்கேயே இருபத்திரண்டாம் நம்பர் பஸ்ஸுக்குப் பதிலாக இரண்டாம் நம்பரில் ஏறி அவதிப்படுகிறீர்கள்? நீங்கள் எப்படி...?

பஞ்சாமிர்தம்: இந்தப் பஞ்சாமிர்தத்தை என்னடா நினைத்து விட்டாய்? இந்த அழைப்பிதழைப் பார்த்தபிறகு

பாலின் குணங்கள் அடங்கியது...



காட்பரீஸ்
மில்க் சாக்கலேட்

மிட்டாய் மட்டுமல்ல ... ஒரு உணவும் கூட !

CFY-7-TAM

நான் அரை மணி நேரமாக என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று நினைத்தாய்? பம்பாய் நகர கைடும் படமும் பழம் குப்பையில் இருந்ததை எடுத்து அலசிக் கொண்டிருக்கிறேன். கிங் சர்க்கிளில் இறங்கினால் இந்தப் பக்கம் மாதுங்கா, அந்தப் பக்கம் வடாலா. நேரே போனால் சயான்!...

ராஜு: பேஷ்! பேஷ்! அப்பா இப்பவே பம்பாயிலே போய் இறங்கியாச்சு!... நான் லாண்டிரிக்குப் போறேன். [போகிறான்]

காட்சி 2

அதே இடம். இரண்டு மூன்று நாட்கள் கழித்து.

[பஞ்சாமிர்தம் கையில் ஒரு நோட் புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறார்]

பஞ்சாமிர்தம்: (நடந்துகொண்டே): சிலப்பதிகாரத்தில் கானல்வரிப் பகுதியில் இளங்கோவடிகள் கூறுகிறார்:

பொழில் தரு நறுமலரே!
புதுமணம் விரிமணலே!

ராஜு: (எட்டிப் பார்த்து) அப்பா!....

பஞ்சாமிர்தம்: (கவனியாமல்) 'புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி' என்னும் இடத்திலே நாம் பாரதியின் கற்பனைத் திறனைக் காண்கிறோம்! பாரதி மேலும் சொல்கிறான்....

ராஜு: (வேகமாக வந்து) அப்பா! அப்பா! ஒரே 'கன்பியூஷன்'!.... சிலப்பதிகாரத்தையும், குயில் பாட்டையும் கலந்து அவியல் பண்ணுகிறீர்களே!...

பஞ்சாமிர்தம்: எஸ்! எஸ்! எந்தச் சந்தர்ப்பமாக இருந்தாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்துப் பழைமைக்குச் சிலம்பையும், புதுமைக்குப் பாரதியையும் கொஞ்சம் 'ஸ்டடி' பண்ணினேன்.

ராஜு: நீங்க எல்லாவற்றிலுமே முன் யோசனைக்காரர் தான்!

[பஞ்சாமிர்தத்தின் பெண் மீனு வாசல் பக்கத்திலிருந்து வருகிறாள்.]

மீனு: அப்பா! நீங்க பம்பாய் போகப் போகிறீர்களாமே! நேற்றுத்தான் உங்கள் மாப்பிள்ளை சொன்னார்.

பஞ்சாமிர்தம்: நான் ஒன்றும் 'வால் போஸ்டர்' ஒட்ட ஏற்பாடு பண்ணவில்லை. ஆனாலும் எப்படியோ தெரிந்திருக்கிறது ஊர் முழுவதும். அது சரி! உன் அகத்துக்காரர் பம்பாயில் உள்ள நண்பர் யாருக்கும் சாமான்கள் கொடுத்து அனுப்ப வேண்டுமா?

மீனு: போங்கப்பா! அங்கே டெர்ரிலீன் ஷர்ட் மலிவாம். அவருக்கு இரண்டு ஷர்ட்டும், எனக்கு இரண்டு நைலான் புடவையும்...

பஞ்சாமிர்தம்: புடவை! எனக்கு அதற்கெல்லாம் அவகாசம் இருக்காது. மகாநாட்டு நிகழ்ச்சிகள் எப்படி இருக்கின்றனவோ?

பெரியநாயகி (வந்துகொண்டே) நீங்க இடிச்ச புளி மாதிரி மகாநாட்டில் உட்கார்ந்திருங்கள்! நான் ஊர் சுற்றிப் பார்த்துச் சாமான்கள் வாங்குகிறேன்.

பஞ்சாமிர்தம் : ஹூம்! காசிக்குப் போயும்....

ராஜு: அப்பா! இந்தச் சந்தர்ப்பத்திலே உங்க பழமொழிகளையெல்லாம் உதிர்க்காதீர்கள். அம்மா எல்லைப்புறத்தில் கடத் தயாராக இருக்கும் அந்நியப் படைகள் மாதிரி தயாராக இருக்கிறாள்.

ஸ்ரீ
கல்கி



தீபாவளி மலர்
1963

கருத்துக்கினிய கதை, கட்டுரை, கவிதைகளும், கண்ணுக்கினிய ஓவியங்களும், மனத்துக்கினிய ஹாஸ்யப் பகுதிகளும் பூத்துக் குலுங்கும் இலக்கியப் பூஞ்சோலையாக இவ்வாண்டு 'கல்கி' தீபாவளி மலர் நவம்பர் 15-ந் தேதி யன்று வெளிவருகிறது.

விலை ரூபாய் நான்கு

உங்கள் பிரதிகளுக்கு
உள்ளூர் ஏஜண்டிடம் உடனே
பதிவு செய்து கொள்ளுங்கள்

தபாலில் பெற விரும்பும் நேயர்கள் கீழ்க்கண்ட விகிதப்படி தொகை அனுப்பக் கோருகிறோம். மலரை வி. பி. பி. யில் அனுப்புவது சாத்தியமில்லை.

உள்நாடு ... ரூ. 4.75
இலங்கை, பர்மா, மலேயா
இதர வெளிநாடுகள் ... ரூ. 5.00

மானேஜர்

கல்கி கீழ்ப்பாக்கம், சென்னை -10

பஞ்சாமிர்தம்: பெரியநாயகி! (இதமாக) அடுத்த தடவை நாம் எல்லோருமே ஒரு 'டிரிப்' பாம்பே போய் வந்துடலாம்! இப்போ நான் முதலில் போய் எந்தச் சிநேகிதன் வீடு சௌகரியமாக இருக்கும் என்று பார்த்து விட்டு வருகிறேன்.

[அடுத்த தெரு நாராயணன் வருகிறார்]

நாராயணன்: என்ன பஞ்சாமிர்தம் சார்! பம்பாய் போகிறீர்களாமே? [உட்காருகிறார்]

பஞ்சாமிர்தம்: ஆமாம்! ஒரு 'லிட்டரரி கான்பரன்ஸ்.' வற்புறுத்திக் கூப்பிட்டிருக்கிறார்கள். இங்கே ஆயிரம் வேலை இருக்கு.

நாராயணன்: உமக்கென்னய்யா யோக சாலி! எழுத்தாளர் என்றால் சும்மா தானா?.... என் மைத்துனன் செம்பூரில் இருக்கிறான். போய்ப் பார்த்துவிட்டு வாரும். உமக்கு உதவியாக இருப்பான்.

பஞ்சாமிர்தம்: பேஷாய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். ஆனால் டயம் இருக்கணும்!.... ராஜு, விலாசத்தைக் குறிச்சுக்கோடா!

நாராயணன்: நீங்க என்ன நாளை எக்ஸ்பிரஸிலே புறப்படுகிறீர்களா?

பஞ்சாமிர்தம்: ஆமாம். பெர்த் புக் பண்ணி விட்டேன்.

நாராயணன்: சௌகர்யம்தான். என் மைத்துனன் ஐந்தாறு பெரிய பொம்மைகள் வாங்கி அனுப்பச் சொல்லி எழுதியிருந்தான். நவராத்திரி சீஸனிலே வாங்கி வைத்திருக்கிறேன். அதை அவனிடம் சேர்ப்பித்து விடும்.

பஞ்சாமிர்தம்: எக்ஸ்க்யூஸ் மீ மிஸ்டர் நாராயணன்! இந்தத் தடவை என்னாலே ஒரு சாமானும் கொண்டு போக முடியாது. இன்னொரு தடவை....

நாராயணன்: (எழுந்துகொண்டே)ரொம்ப சரி! பரவாயில்லே! உமக்குக் கல்கத்தாவிலிருந்து சுப்பாமணி என்பவர் இரண்டு ரசகுல்லா டின் கொண்டுபோகச் சொல்லி என் பையனிடம் கொடுத்திருக்கிறாராம். அவன் அடுத்த வாரம் வருகிறான். அவைகளை அடுத்த தடவை வரும்போது கொண்டு வந்தால் போதும் என்று எழுதிவிடுகிறேன்.

பஞ்சாமிர்தம்: கோபித்துக் கொள்ளாதீர்கள் மிஸ்டர் நாராயணன்! பொம்மைகளைத் தனித் தனியாக எனக்குத் துணையாக அனுப்பாமல் நன்றாகப் பாக் செய்து கொடுங்கள். கொண்டு போகிறேன்!

[நாராயணன் போகிறார்]

பஞ்சாமிர்தம்: டேய்! பம்பாய் போவதற்குள் பத்துப் பேருக்கு இலவசப் போர்ட்டர் வேலை பார்க்கணும் போலிருக்கு! எல்லாவற்றுக்கும் ஒரு லிஸ்ட் எழுது! ரகுபதி கடைசியில் குழவியையாவது கொண்டு போக வைத்து விடுவார்.

ராஜு: பணம் அவர்கிட்டேதானே புரண்டது!

பெரியநாயகி: இதே ஞாபகத்தில் உங்க அப்பா அங்கே மகாநாட்டிலே போய், இளங்கோ சொன்னான், பாரதி எழுதினான் என்பதற்குப் பதிலாக, ரகுபதி கொடுத்தார்; நாராயணன் அனுப்பினார் என்று உளறி வழியப் போகிறார்.

[பஞ்சாமிர்தத்தின் மைத்துனன் சிதம்பரம் மூட்டை முடிச்சுகளுடன் ஊரி லிருந்து வருகிறான்.]

சிதம்பரம்: (பெட்டியைக் கீழே வைத்து விட்டு) என்ன? இங்கே ஒரு கான்பெரன்ஸ் நடக்கிறாப் போலிருக்கு!

ராஜு: ஆமாம்! பம்பாயிலே இந்த வாரக் கடைசியிலே நடக்கவிருக்கும் அகில உலக ஹிந்தி சம்மேளனத்துக்கான பூர்வாங்கக் கூட்டம் நடக்கிறது.

சிதம்பரம்: வாட்! (தலையைச் சொறிந்து கொண்டு) அகில உலக ஹிந்தி சம்மேளனமா? பம்பாயிலா?....வாட்....?

பஞ்சாமிர்தம்: என்னடா மனுஷனைப் போட்டு வாட் வாட்டுன்னு வாட்டறே!

சிதம்பரம்: அந்தச் சம்மேளனம் போன வருஷமே கோவிந்தா ஆயிடுத்தே!....

பஞ்சாமிர்தம்: நான்சென்ஸ்!

சிதம்பரம்: அத்திம்பேர்! நன்றாக நினைவு வருகிறது. அந்தச் சம்மேளனத்திலே பெரிய லடாய் * வந்து போன வருட மகாநாட்டிற்கப்புறம் கலைந்து விட்டது. அழைப்பில் வரவேற்புக் கமிட்டித் தலைவர் யார் என்று போட்டிருக்கிறது.?

பஞ்சாமிர்தம்: பிரேம்நாத் பட்டாச்சாரி.

சிதம்பரம்: நாசமாப் போச்சு! அவன் பிராணனை விட்டு ஆறு மாசமாச்சே!

பஞ்சாமிர்தம்: என்னடா இப்படி அபத்தப் பஞ்சாங்கமாய் வாசிக்கிறாய்?

சிதம்பரம்: அத்திம்பேர்! அந்த இன்விடேஷனை எடுங்கள்!

[பெட்டிக்குள் தாம் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் இன்விடேஷனைப் பஞ்சாமிர்தம் எடுத்துக் காண்பிக்கிறார்]

சிதம்பரம்: (இன்விடேஷனைப் பார்த்து மடமடவென்று சிரித்துக் கொண்டு) அத்திம்பேர்! உடனே போய் உங்க மூக்குக் கண்ணாடியை மாற்றிக் கொண்டு வாருங்கள்! போன வருட மகாநாட்டு இன்விடேஷன் அத்திம்பேர் இது! ...62ம் வருஷம்! 63-ம் வருஷம் இல்லே. அதைப் பார்க்காமல் அமர்க்களம் பண்ணுகிறீர்களே. இந்த இன்விடேஷன் உங்களுக்கு வந்ததும் இல்லே. போன தடவை நான் வந்திருந்தபோது பக்கத்துத் தெரு ஹிந்திப் பண்டிட்டிடமிருந்தது. இன்விடேஷன் பார்க்க அழகாயிருக்கிறது என்று நான் வாங்கி வந்தேன். மகாபாரதப் புத்தகத்தில் பக்க அடையாளத்துக்காக வைத்தேன். அப்புறம் மறந்தும் விட்டேன்!

ராஜு: அட ராமச்சந்திரா!... அப்பா ஒரு வருஷம் பின்னாலே போய்ப் பிற்போக்கு எழுத்தாளராயிட்டார்.

பஞ்சாமிர்தம்: இந்தப் பஞ்சாமிர்தம் ஒரு நாளும் முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டார்! இப்பவே சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போய்....

ராஜு: டிக்கட்டைத் திருப்பிக் கொடுத்துப் பணத்தை வாங்கி வாருங்கள்.

பஞ்சாமிர்தம்: ஆமாம்! அதற்குள் நீ பம்பாய் புறப்படவிருக்கும் அயலார் வீட்டுச் சாமான்களைத் திருப்பி அனுப்பு. (போகிறார்)

ராஜு: இளங்கோவடிகளையும் பாரதியையும்....

மீனு: அப்பா விடுவாரா? உள்ளூர்ப் பிரசங்கத்தில் அமிழ்த்து விட்டுப் போகிறார்!

[சிரிப்பொலி எழுகிறது.]

பண்டிட் P.S. ராமசாமி ஐயரின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல். சகல கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விவரம்

தங்கும் இடங்கள் வழக்கம்போல். மற்ற விவரங்களுக்கு எழுதவும்

ஊர்	தேதி	நேரம்
தாராபுரம்	1	காலை 8-30 to 9-30
பழனி	1	காலை 10-30 to 11-30
உடுமலைப்பேட்டை	1	மாலை 3 to 4
பொள்ளாச்சி	1	மாலை 5 to 6
பாலக்காடு	2	காலை 9 to 11
,,	2	மாலை 3 to 5
கோயமுத்தூர்	3	காலை 9 to 11
,,	3	மாலை 2 to 4
மேட்டுப்பாளையம்	3	மாலை 5 to 6
சத்தியமங்கலம்	4	காலை 8 to 9
கோபி	4	காலை 10 to 11
பவானி	4	மாலை 2 to 3
மேட்டூர் அணை	4	மாலை 4-30 to 5-30
ஈரோடு	5	காலை 9 to 11
திருப்பூர்	5	மாலை 4 to 5-30
திருச்சி	6	காலை 11 to மாலை 6
தஞ்சாவூர்	7	காலை 7 to 9
கும்பகோணம்	7, 17, 27	காலை 10 to மாலை 5
சீர்காழி	8	காலை 7 to 8-30
மாயூரம்	8	காலை 9 to 11
நன்னிலம்	8	மாலை 2 to 3
நாகப்பட்டினம்	8	மாலை 5 to 6-30
திருவாரூர்	9	காலை 7-30 to 9-30
விஜயபுரம்	9	காலை 10 to 11
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2 to 3-30
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 to 6-30
புதுக்கோட்டை	10	காலை 8 to 1
பொன்னமராவதி	10	காலை 11-30 to 12-30
தேவகோட்டை	10	மாலை 2-30 to 3-30
காரைக்குடி	10	மாலை 4-30 to 6
பரமக்குடி	11	காலை 8 to 10
ராமநாதபுரம்	11	மாலை 3-30 to 4-30
சிவகங்கை	11	காலை 8-30 to 10
மதுரை	11	காலை 11 to 12-30
,,	11	மாலை 3 to 6
கோவில்பட்டி	12	காலை 8 to 9

ஊர்	தேதி	நேரம்
திருநெல்வேலி ஜங்.	12	மாலை 3 to 5
திருநெல்வேலி டவுன்	12	மாலை 5 to 6
அம்பாசமுத்திரம்	13	காலை 8 to 9-30
தென்காசி	13	மாலை 3 to 5
ராஜபாளையம்	14	காலை 9 to 10
ஸ்ரீவில்லிபுத்தூர்	14	காலை 10-30 to 11-30
பெரியகுளம்	14	மாலை 3 to 4-30
திண்டுக்கல்	15	காலை 8 to 9-30
நாமக்கல்	15	மாலை 3 to 4-30
ராசிபுரம்	15	மாலை 5-30 to 6-30
சேலம்	16	காலை 9 to 11
,,	16	மாலை 3 to 5
சேலம்: செவ்வாய்ப்பேட்டை	16	மாலை 1-30 to 2-30
தருமபுரி	17	காலை 9 to 10-30
கிருஷ்ணகிரி	17	மாலை 3-30 to 5
திருப்பத்தூர் (N.A.)	18	காலை 8-30 to 10
குடியாத்தம் (N.A.)	18	மாலை 2 to 3-30
சித்தூர் (ஆந்திரா)	18	மாலை 5 to 6-30
வேலூர் (N.A.)	19	காலை 9 to 11
பெரிய காஞ்சீபுரம்	19	மாலை 3 to 5
சென்னை	20	காலை 9 to 11
,,	20	மாலை 3 to 5
செங்கற்பட்டு	21	காலை 9 to 10-30
திண்டிவனம்	21	மாலை 2-30 to 4
விழுப்புரம்	21	மாலை 5 to 6
திருவண்ணாமலை	22	காலை 8-30 to 10
திருக்கோவிலூர்	22	காலை 11 to 12
கடலூர் (N.T.)	22	மாலை 4 to 5-30
சிதம்பரம்	23	காலை 9 to 10-30
விருத்தாசலம்	23	மாலை 3-30 to 5
கள்ளக்குறிச்சி	24	காலை 8-30 to 9-30
ஆத்தூர்	24	காலை 11 to 12
துறையூர்	24	மாலை 3-30 to 5
மல்லேஸ்வரம் பெங்களூர் - 3	26	காலை 9 to 11
		மாலை 3 to 5

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலை H. O. கரூர்

கிளைகள் :
1. 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்
2. 2332, 5th கிராஸ், மல்லேஸ்வரம், பெங்களூர் – 3

குறிப்பு : குழந்தைகளுக்குக் கட்டி வராமல் தடுக்கவும் கக்குவான் இருமலைக் குணப்படுத்துவதற்கும், தொண்டை சதை வளர்ச்சியை (TONSILS) ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்துவதற்கும் எங்களிடம் நல்ல மருந்துகள் கிடைக்கும்.



பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.
மதராஸ்-17



காந்தரால்
சுகந்த காந்தரைடின் கூந்தல் வளரும தைலம
கல்கெமிகோவின்
காந்தராலில் சுத்தமான
ஆலிவ் எண்ணெய்
கலந்திருக்கிறது
அதனால்
கூந்தலின்
வளர்ச்சிக்கு
பல வகையிலும்
அனுகூலமாகிறது
புதிய அழகிய
சிறிய பாட்டில்
களில் கிடைக்கும்
பெரிய சைஸ்
புதிய பாட்டில்கள்
விரைவில் வரும்
Kantharol
தி கல்கத்தா கெமிகல் கோ. லிட்.
தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1



உலக மார்க் ஷண்முகம்
பட்டணம் பொடி
100
வருடங்களுக்கு மேல்
பிரக்யாதி பெற்றது.
ORIGINA.. SHUNMUGAM SNUFF (ESTD.1839) Co.
ᐧOS' ◦OX No.140. MADRAS-1
SHUNMUGAM
MADRAS

"நான் பண்ணின பாவமோ, நாட்டாரிட்ட சாபமோ சோறு வயிற்றுக்குச் சேரமாட்டேங்கிறது. விஷமாப் போயிடுத்து" என்று அலுத்துக் கொள்வோரைக் கண்டிருக்கிறோம்.

"ஹோட்டலில் இட்டிலி தின்றவருக்கு அபாயம். ஆஸ்பத்திரியில் பரபரப்பு" என்று கொட்டை எழுத்தில் தலைப்புக்களையும் பருப்பில் குற்றமிருந்ததாகத் துப்புத் துலக்கப்பட்டதென்றும், பாயஸத்தில் தேள் செத்துக் கிடந்ததாகவும், ரஸத்தில் செத்துக் கிடந்த பாம்பு கண்டெடுக்கப்பட்டதென்றும் வரும் செய்திகளையும் படிக்கிறோம்.



"வேலை வெட்டி என்று ஊர் ஊராகச் சுற்றுகிறவனுக்கு ஹோட்டல் சாப்பாடு தானே ஸார் கதி! எந்த ஹோட்டலை நம்பி என்னமாச் சாப்பிடுவது? இல்லை, பட்டினி தான் கிடக்க முடிகிறதா? நித்ய கண்டம் பூர்ணாயுசு என்ற பிழைப்பு" என்று ஒருவர் ஹோட்டல்காரர் எல்லோரையும் ஒன்றாக்கிப் பழிக்கிறார்.

ஹோட்டல்காரரோ...? "ஒரு சாமான் அசலாக நம்பி வாங்கி வர முடியல்லையே! எதுலே எடுத்தாலும் கலப்படம், போலி. கண்டுபிடிக்கத்தான் முடிகிறதா? என்னென்னமோ 'அனலிஸன்' அது இது என்றெல்லாம் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் இந்தத் தில்லுமுல்லுகளும் வளர்ந்து கொண்டேதான் போகின்றன" என்று ஒருவர் ஒப்பாரி வைக்கிறார்.

"காய்கறிகள்தான் என்ன? இளமை புதுமை சொட்டச் சொட்ட எங்கே கிடைக்கின்றன? முற்றி நெற்றாய்ப் போனவை, அல்லது வாடி வதங்கி, ருசி, மணம் ஒன்றுமே இல்லாதவை தான் கிடைக்கின்றன" — இப்படி ஒரு சாரார் அலறல்.

"என்னத்தைத் தின்று தொலைத்தாலும், இப்படி வயிறு கெட்டு ஒன்று போனால் இன்னொண்ணுன்னு படுத்துகிறது" என்று சொல்லும் அன்பர்களையும் காண்கிறோம்.

மொத்தத்தில் சொல்லப் போனால் விஷம் கலந்த உண்டிகள் அல்லது உண்டது விஷமாகிவிடுதல் என்ற இரு வகையில் ஏற்படும் கோளாறு இனந்தெரியாமல் ஏற்படுகிறது.

இது எதனால்? எந்த நிலையில் கலப்படம் அல்லது அஹித நிலை ஏற்படுகிறது? இதைக் கண்டுபிடிப்பது எப்படி? இது உண்டிப் பொருள்களை மட்டும் சம்பந்தித்ததா அல்லது உண்பவனின் உடல்நிலையும் காரணமாகுமா என்றெல்லாம் சிந்திக்க வேண்டும்.

முதலாவதாக எந்தப் பொருளில் விஷாம்சம் அல்லது அஹிதாம்சம் கலந்திருந்தாலும் கண்டுபிடித்து விடலாம். "ஆமாம்! இதற்குப் பரிசோதகர், ஆராய்ச்சியாளர் என்பவரைத் தேடிக் கொண்டு போவது சாத்தியமா? கடைக்குப் போகிறோம், சாமானை வாங்கி வந்தோம், சமைத்தோம். நாலு பேருக்குப் போட்டு, நாமும் சாப்பிட்டோம் என்றிருக்க வேண்டாமோ?" என்கிறீர்களா? பாமரரே சந்தேகிக்கப்பட்டுத் தணிக்கக் கூடிய பரீட்சை முறைகளைத் தெரிவிக்கிறேன். பலசரக்குச் சாமான்களிலிருந்து — நெய், எண்ணெய், பால், மோர், தயிர், காய்கறிகள் என்பவைகளை — ஸ்தூலமாக நல்லது கெட்டது என்று தெளிந்து கொள்ளலாம்.

பாமரபரமான பரீட்சைகள் மூலம் ஒரு சந்தேகத்தையாவது உண்டாக்குமளவுக்கு ஓரளவு அறிவு விரும்பத்தக்கது அல்லவா?

ஐயா, அதில் எப்படியோ தப்பிவிட்டது. விஷமுள்ள பண்டத்தை வாங்கி வந்தாயிற்று. விஷமுள்ளது என்று தெரியாது. பிறகு? சமைக்கும்போது தெரிந்து கொள்ளலாம். இது இரண்டாவது உபாயம். அல்லது சமைத்தும் ஆயிற்று. அதை உண்பதற்காக விளம்பித் தரும்போது தெரிந்துகொள்ளலாம். இது மூன்றாவது உபாயம்.

இதிலும் கவனம் போதாத நிலையில் சமைத்ததைச் சாப்பிடவும் தொடங்கிவிட்டான். வாயிலிட்டதும் தெரிந்துகொள்ளலாம். வயிற்றில் சென்றதும் தெரிந்து கொள்ளலாம் என்பது நான்காவது உபாயம். அப்படித் தெரிந்ததும் செய்யக் கூடிய சிகிச்சை? அதுவும் எளிதுதான்.

இப்படியாக உண்டிப் பொருள்களையும் பிறவற்றையும் ஹிதாஹிதம் அறிய வாய்ப்புண்டு. ஆகவே, விஷான்னத்தில் ஏற்படக் கூடிய விபரீதங்களை ஏன் தவிர்த்திடலாகாது? அது மட்டுமா? உண்டிப் பொருள்களில் சிலவற்றுடன் சேர்த்து உண்ணப்படுமானால் அவ்விதக் கூட்டுப் பொருளே ஒரு வகையில் விஷான்னமாகத் தீரலாம். அப்படியானால் எத்தெந்த வஸ்துக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தால் விஷங்களாய்த் தீரும் என்பதைச் சுருக்கமாகவாவது அறிய வேண்டியது அவசியமல்லவா?

அவ்வாறே உண்பவனிடத்தில் சில கோளாறுகள் காரணமாக உண்ட உணவு விஷமாகலாம்.

கேவலம், மளிகைக் கடைக்காரரோ, காய்கறிக்காரரோ, ஹோட்டல்காரரோ மட்டுமல்ல, இவ்வித நிலை ஏற்படுவதற்கு.

சாப்பிடுவதிலும் சில க்ரமங்கள் உண்டு. அவை தவறினாலும் உண்ட ஆகாரமே விஷமாய்த் தீர்ந்திடும்.

ஆகவே, இவை யாவற்றையும் அறிந்து விஷான்ன போஜனத்தால் ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கவும் மாய்க்கவும் முயற்சி செய்வது போற்றத் தக்கதாகும்.

தீபாவளி விசேஷ விற்பனை

உங்களுக்குத் தேவையான

பட்டுச் சேலைகள், பாவாடைகள் சோளிகள் முதலியன

வாங்க நம்பிக்கையான இடம்

P. B. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்

(ஏர் - கண்டிஷண்ட் — ஷோ ரூம்)

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள், வியாபாரிகள்

109, ஐயா முதலித் தெரு சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2 போன் : 86966	307, லக்கம்ஸீ நாப்பு ரோட் (உடுப்பி போர்டிங் அடியில்) மாதுங்கா C. R. பம்பாய்-19

3 & 10-11-63 ஞாயிற்றுக்கிழமைகளில் விற்பனை உண்டு

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு (பிரைவேட்) லிட்.,

(ரிஜிஸ்டர்டு)

"விஜய விஹார்", 17-A, ஸயான் - மாதுங்கா எஸ்டேட்

(கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்)

Post Bag No. 6759. பம்பாய் — 22 தந்தி : "GROWRICH"

போன் 471485

25 மாதங்கள்	குறுகிய கால ஏலச் சீட்டுகள் 2-வது ஞாயிற்றுக்கிழமை ஏலங்கள் 1963 நவம்பர் மாத ஸீரிஸ்	25 அங்கத்தினர்கள்

சேரக் கடைசி தேதி 9-11-1963 ... முதல் ஏலத் தேதி 10-11-1963

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	F	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	G	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	J	ரூ. 10/-	ரூ. 250/-

நீண்டகால ஏலச் சீட்டுகள்

சேரக் கடைசி தேதி 9-11-1963 ... முதல் ஏலத் தேதி 10-11-1963

50 மாதங்கள் 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	குறித்த தள்ளுபடி
C	ரூ. 200/-	ரூ. 10,000/-	ரூ. 1,000/-
A	ரூ. 100/-	ரூ. 5,000/-	ரூ. 500/-
B	ரூ. 50/-	ரூ. 2,500/-	ரூ. 250/-
D	ரூ. 20/-	ரூ. 1,000/-	ரூ. 100/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

வெள்ளிக்கிழமை (வார விடுமுறை நாள்)


வேலை நேரம் : காலை 8 முதல் 11 மணி வரை : மாலை 4 முதல் இரவு 8 மணி வரை

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

தலைமை ஆபீஸ் : மதராஸ் - 5

இதர கிளைகள் :
1. 70, முதல் மாடி, 5வது மெயின் ரோடு, ஸ்ரீனிவாச பில்டிங் காந்தி நகர், பெங்களூர் - 9
2. "கார்ல்ஸன் ஹவுஸ்", 1/24, ஆஸப் அலி ரோடு, புது டெல்லி-1
3. 4/73, கிருஷ்ணா மார்க்கெட், N. E. A., கரோல்பாக், புது டில்லி - 5
4. 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி, புது டெல்லி-3
5. 48, லேக் பிளேஸ், கல்கத்தா-29

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



காதல் மாளிகை

ராஜம் கிருஷ்ணன்

துரை தம்மை மறந்து நின்றார். நாற்புறமும் சூழ்ந்த மலைத்தொடர்களுக்கு நடுவே, வானுலகின் ஒரு துண்டு சிதறி விழுந்திருக்கிறதோ என்று ஐயுற்றார். நடுவே ஓர் அருவி உள்ளம் கொள்ளும் பாங்குடன் ஓடியது. அதன் கரைச் சரிவெல்லாம் பூமித் தாய்க்கு வண்ண வண்ண ஆடைகள் உடுத்து விட்டாற் போல் விளை நிலங்கள். விளை நிலங்களை ஒட்டி, வெள்ளை வெள்ளையாய்க் காணப்பட்டதொரு கிராமம். அருவிக் கரைகளெல்லாம் ஒரே மலர்க் குவியல்கள். மரங்களெல்லாம் நீலமும் சிவப்பும் மஞ்சளுமாகப் பூத்துக் குலுங்கும் கோலாகலக் காட்சி....

பைனாகுலரை எடுத்து அருவிக்கு இக்கரையில் பார்த்தார் அவர்.

பச்சைச் சரிவிலே ஒரு தட்டுப் போல் சதுர மைதானம் ஒன்று தெரிந்தது. அதன் மூலையில் ஒரு சைப்ரஸ் இனத்தைச் சேர்ந்த மரம் இருந்தது. அதைச் சுற்றிலும், அழகிய மண் மேடை. அவர் பார்த்துக் கொண்டே இருக்கையிலே, அங்குமிங்கும் மருண்ட பார்வையால் நோக்கிக் கொண்டே ஒரு புள்ளி மான் வந்தது. ஆகா, ஒன்று, இரண்டு, மூன்று.... புள்ளி மான்களின் கூட்டம்!

இந்திய மண்ணின் கபடற்ற அறியாமையிலும் ஏதோ ஓர் உயிர்ப்பு நெஞ்சோடு சிலிர்க்கச் செய்யும் நிமிஷங்கள் பலவற்றைப் பல சமயங்களில் துரை அநுபவித்திருக்கிறார். அத்தகைய நிமிஷங்களில் இதுவும் ஒன்றாயிற்று.

பைனாகுலரைக் கண்களிலிருந்து எடுத்துவிட்டு அவர் குதிரையின் லகானை இழுத்தார்.

அடுத்தும் நாலைந்து புரவிகளில் துரைமார்கள் இருந்தார்கள். தலையில் பெரிய தலைப்பாகையும் பெரிய சந்தனப் பொட்டும், சார்ஜ் கோட்டுமாக, மலைவாசியான மல்லண்ணன், உள் நாட்டு வேட்டைக்காரர்களான ராஜுவீரன் முதலியோர் சூழ்ந்த பரிவாரம்தான் அது. ஆயினும், செவ செவத்துச் சூரிய ஒளியில் விளங்கிய அந்தத் தலைவனின் ஆகிருதியை விளக்கும் தோற்றத்துக்கு எவருமே ஈடாக வில்லை.

துரை வேட்டைக்கு வருகையில் இறங்கும் பங்களா வேறு பக்கமாக அல்லவோ இருக்கிறது? கிராமத்துப் பாதையில் எங்கே செல்கிறார்? மல்லண்ணன் வியந்தான். எனினும் கேட்க முடியுமா? கானகத்துப் பாதையிலே பட்சிகள் எல்லாம் படபட வென்று இறக்கைகளை அடித்துக் கொண்டு சென்ற அரவம் உண்டாயிற்று. புதர்களிலெல்லாம் சலசலப்பு.

அந்தச் சதுர மைதானத்தில் மரத்தின் அருகில் துரையின் குதிரை வந்து நின்றது.

அவருக்கு உடல் சிலிர்த்தது. மைதானம் மொட்டையாக இல்லை. அங்கு ஓர் அழகிய மாளிகை எழும்பி நிமிர்கிறது. இங்கிலாந்துச் சீமையின் அழகிய நாட்டுப்புறத்தின் பழைய மடாலயத்தைச் சார்ந்த பாணியில் எழும்பியுள்ள அந்த மாளிகையினின்றும், பொன்னிறக் குழற் கற்றைகள் தோள்களிலெல்லாம் புரள, நீலம் ஆழமாகப் பாயாத மலர் விழிகளில் ஆவலும் ஆசையுமே பொங்க, கனவுக் கன்னி போல் அவள் இறங்கி வருகிறாள். கையிலே ஒரு மலர்க்கொத்து.

துரை குதிரையினின்றும் இறங்கி, அந்தக் காதலியைப் பரவசமாக நெருங்கியபோது தான் காட்டுரோஜாக் கொடி என்று புலனாகிக் கையிலே முள் குத்தியது.

அவர் கண்களைக் கசக்கிக் கொண்டு பெருமூச்செறிந்தார்.

காலை இளங் கதிர்கள். அழகிய மலைப் பிரதேசக் காட்சிகள். மொட்டை மைதானம். மரம். மாளிகையும் இல்லை, அவளும் இல்லை.

அந்தக் காதலி நாடு விட்டு வர மனமின்றி அங்கேயே தங்கி விட்டாள்.

இது பகற்கனவின் காட்சியாகவே அவருக்குத் தோன்றவில்லை.

ஆகா! என்ன உணர்வு! உடல் உள்ளமெல்லாம் புல்லரித்தது.

"ஸாம்....?"


குள்ள உரு உடைய ஸ்டுவர்டு துரை முன்னே வந்து பணிந்தான்.

"இந்த இடத்தை நமக்குப் பெற ஏற்பாடு செய். இங்கே நாம் ஒரு மாளிகை கட்டுவோம்!" என்ற உத்தரவு பிறந்தது.

ஆளும் சர்க்காரின் பெரிய துரை, அருகே கானகத்துப் பங்களாவில் வந்து இறங்கியிருக்கிறார் என்றால், கிராமத்தில் பரபரப்புக்குக் கேட்க வேண்டுமா? பாலும் வெண்ணெயும், தேனும் — தினையும் — கோழிகளும் குஞ்சுகளும் 'காணிக்கை' சென்றன.

கிராமத் தலைவரைத் துரை காண விரும்புவதாகச் செய்தி வந்திருக்கிறது. அவர் துரையைப் பார்க்கக் கிளம்பிவிட்டார்.

காரியண்ணா, அந்தப் பெரிய துரைக்குச் சரியாக நிற்கக் கூடிய உருவினர்தாம். முது



மைப் பிராயத்தை எட்டியிருந்தாலும், மண்ணிலே உழைத்து மண்ணின் உரமும் உறுதியும் உடற் கட்டிலே பெற்றிருந்ததால் கம்பீரத்துக்குக் குறைவேயில்லை. பெரிய தலைப் பாகை. அகன்ற நெற்றி. அஞ்சாத பார்வையுடைய விழிகள். செவிகளிலே பொன் வளையங்கள். கழுத்தோடு மூடும் நீல சர்ஜ் கோட். தூய வெள்ளை வேட்டி. வெள்ளிப் பூண் போட்ட கைத்தடி. நடையிலும் விரைவுதான்.

காரியண்ணா துரையின் பங்களாவுக்கு வருகையில் பிற்பகல் குறைந்து மாலை வந்து கொண்டிருந்தது. துரை கண்ணாடிக் கதவுக்கு வெளியே சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். சித்திரை மாசத்து வெம்மை தெரியாத மலைச் சூழலிலும் காதலியின் நினைவு மூட்டிவிட்ட விரகத் தீயிலே சோர்ந்து, சுங்கானைக்கூட மறந்திருந்தார்.

மல்லன் அருகிலே நின்றான். இரு மொழி தெரிந்த கௌரவம் அவனுக்கு உண்டு.

முதியவர், துரையின் முன் கைகட்டி, வணங்கி, ''கூப்பிட்டீர்களாமே?'' என்ற பாவத்தில் நின்றார். துரையின் சொற்களைக் காரியண்ணாவுக்கு மல்லன் கூறினான்.

''அந்த இடத்தைச் சர்க்கார் வாங்கிக் கொள்கிறது. துரைக்கு அந்த இடம் மிகவும் பிடித்தமாக இருக்கிறது. அங்கே அவர் வந்து வாழ விரும்புகிறார். இதைப் பெரியவருக்குத் தெரிவிக்கவே துரை கூப்பிட்டார்கள்.'' காரியண்ணா அதிர்ந்தாற்போல் நின்றார்.

''அந்த இடம் தெய்வ மரம் இருக்கும் புனித மைதானம். உனக்குத் தெரியாதா மல்லா?''

மல்லனுக்குச் சங்கடமாக இருந்தது. எனினும் ஆள்வோரின் வல்லமையை அறிவான்.

''துரை.... இஷ்டத்துக்குக் குறுக்கே நிற்க முடியுமா? அவர்களுக்குப் பதில் ..... ஏதானும் சொல்லுங்கள் மாமா....''

துரை...! துரை தெய்வத்தை விடப்பெரியவரா?

முதியவரின் எழுச்சி சொற்களாக வரவில்லை. ஆனால் உடலெங்கும் பரவித் துடிதுடித்தது.

''அது நமக்குத் தெய்வம். புனித மரம். அந்த இடத்துக்கு எவரும் வந்து வாழுவது சரியில்லை. துரை அவர்களுக்கும் ஒரு தெய்வம் உண்டல்லவா? அவர்களிடம் சொல்லு, மல்லண்ணா! நான் வருகிறேன்.''

துரை பதில் பேச வேண்டும் என்றுகூடக் காத்திருக்காமல் அவர் திரும்பினார்.

அவர் துரையின் முன், அவர் விருப்பத்தை மறுத்து விட்டுச் செல்லும் துணிவு கண்ட மல்லனுக்கு நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

துரை புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

''என்ன சொல்கிறார்?......''

''துரை சாகேப்!... அவர்... அவர்... அது தெய்வ மரம். அங்கே....'' மல்லண்ணன் தடுமாறுகையில் துரை சுங்கானை வாயில் வைத்துக் கொண்டு, ''கூப்பிடு அவரை!'' என்றார்.

காரியண்ணா ஒடுங்கி விடவில்லை.

''பெரியவரே! உங்கள் தெய்வத்தை வேறு மரத்துக்கு மாற்றிக் கொள்ளுங்கள். இத்தனை பெரிய காட்டில் அந்த ஒரு மரத்தில்தானா உங்கள் தெய்வம் இருக்கிறது?''

துரையின் கேள்வியை முதியவருக்கு மொழி பெயர்க்க வேண்டிய அவசியமே இருக்கவில்லை. நேராகவே துரையைப் பார்த்துத் தம் மொழியில் பதில் கொடுத்தார் காரியண்ணா.

''துரை சாகேப்! இத்தனை பெரிய காட்டில் அந்தத் தெய்வ மரத்தின் மைதானம்தானா

உங்களுக்கு வேண்டும்? நீங்கள் வருவதற்கு முன்பிருந்தே அது எங்களுக்குப் புனித இடமாக இருக்கிறது....''

மல்லண்ணனுக்கு இதை மொழி பெயர்த்துச் சொல்லும் துணிவு இல்லை.

''என்ன சொன்னார்? வேறு மரம் இல்லையா, ஸைப்பிரஸ் மரங்கள் எவ்வளவு இருக்கின்றன, மேன்!''

மல்லன் சமாளித்தான். ''துரை சாகேப், அந்த இடத்தில்... தங்களுக்கு ஏதேனும் தீங்கு வருமோ என்று பெரியவர் அஞ்சுகிறார்.''

துரை புகையை விட்டுக் கொண்டு சிரித்தார். ''அதை விடுவதற்கில்லை என்று கூறிவிடு, மல்லா!''

தீர்மானமாகத் தடியை எடுத்துக் கொண்டு அவர் கிளம்பிப் போனார் காரியண்ணா.

துரையின் நெற்றியில் கீற்றுக்கள் தோன்றி மறைந்தன. பெருமூச்சு விட்டார்.

அப்போதுதான் பணிவுடன் ஸாம் அங்கு வந்து நின்றான்.

''பிரபுவே.... கவலை வேண்டாம். தங்கள் எண்ணத்தை நிறைவேற்றலாம்....''

''எனக்கு.... அங்கு ஒரு 'வில்லா' கட்ட வேண்டுமே? இடத்தையே இந்தக் கிராமவாசி மறுக்கும் போது....''

''அந்தப் பொறுப்பை என்னிடம் விடுங்கள் பிரபுவே...'' குள்ள துரையின் கண்களிலே வஞ்சகம் ஒளிந்து பளிச்சிட்டது.

கதிரவன் அந்தச் சொர்க்க பூமிக்கு மஞ்சள் முழுக்காட்டும் வேளை. சிக்கம்மா தெய்வ மரத்தைச் சுற்றியுள்ள இலைச் சருகுகளைக் கூட்டிச் சுத்தமாக்கிக் கொண்டிருந்தாள். நேரமாகி விட்டது. சுள்ளிக் கட்டுகளுடன் அவள் வீடு திரும்ப வேண்டும். தோழிகள் எப்போதோ பிரிந்து சென்றனர். இடை இடையே அவள் பார்வை உயர்ந்து மேலே நோக்குகையில் மல்லண்ணனைச் சந்தித்து விட்டது.

ஆங்கிலத் துரைமார்களுடன் பேசும் மொழி கற்று உயர்ந்திருந்த மல்லன் எப்போதுமே கோட், தலைப்பாகையுடன்தான் தென்படுவான். சிக்கம்மாவுக்கு அந்தப் பெருமைக்குரிய காதலனை நிமிர்ந்து நோக்கவே வெட்கம். ஆனால் இன்று அவள் விழி





''டேய்! போன வாரம் உனக்குத் தோசை கொடுத்தேனே இப்ப வந்துட்டாயே?''

''இப்பதாங்க அது ஜீரணம் ஆச்சு. அதனாலே முன்னாடி வரமுடியவில்லே!''

கனில் கோபம் கடர் தெறித்தது. ஒரு வெட்டு வெட்டி விட்டுப் 'பரக் பரக்'கென்று வேகமாகப் பெருக்கலானான்.

மல்லண்ணன் குறுநகையுடனே அவனருகில் வந்தான். ''டார்லிங்.....!'' கோபம் அதிகமாயிற்று. தெய்வ மரத்தையும், மைதானத்தையும் துரைக்கு விட்டுவிட, இவர் உடந்தையாக இருக்கிறாராமே? சிக்கம்மாளைப் பொறுத்த வரையிலும் அந்த மரத்திலே அவளுடைய அன்னையே இருந்தாற்போல் நம்பிக்கை. கடைசியாக அவளுடைய அம்மையின் உயிர் அங்கேதான் பிரிந்தது. விளை நிலத்திலே வேலை செய்து கொண்டிருந்த போது, மயங்கி விழுந்தாள். மைதானத்தில் கொண்டு போட்டதுமே உயிர் நீங்கி விட்டது. அம்மையின் நினைவை அவள் அங்கிருந்து அகற்றவே முடியாதபடி தொடர்பு கொண்ட இடம் அது. தெய்வ மரம் அவர்கள் பூசை போட்டு வழிபடும் காவல் மரம்.

''டார்லிங் என்றழைத்ததனால் கோபமா? துரைமார்கள் தம் அன்புக்குரியவர்களை அப்படித்தான் அழைப்பார்கள் சிக்கம்மா....!''

சிக்கம்மா பொறிகள் பரக்க நிமிர்ந்து நோக்கினாள். ''இந்தப் பாவம் செய்தால் உங்களைத் தேவர் மன்னிக்க மாட்டார்.''

''கோபப்படாதே, கண்ணே! உன் ஐயன் அப்படி முட்டாள்தனமாக நடந்து கொண்டாரே! இந்த வெள்ளைக்காரர்கள் நமக்கு மேலே நின்று ஆள்கிறார்கள். அவர்கள் வேறு மரத்தைத் தேவர் மரமாக்கிக் கொள் என்றால் நாம் அப்பால் போவதுதான் உசிதம்.''

''தேவர் இங்கிருப்பது உண்மையானால் துரையின் எண்ணம் நடக்காது'' என்றாள் அவள் சீறிச் சினந்து.

''சிக்கம்மாவுக்கு, அவர்கள் தெளிவு களிவு சாமர்த்தியங்களெல்லாம் எப்படித் தெரியும்? ஐயனுக்கே தெரியவில்லையே? அவர்கள் ஒருகால் மரத்தை எவரும் அறியாமல் வெட்டி விட ஏற்பாடு செய்தால்....''

சிக்கம்மா செவிகளைப் பொத்திக் கொண்டு கத்தினாள். ''முடியாது.... முடியாது... கிராமமே விட்டாலும் ஐயன் விட்டாலும் இந்தச் சிக்கம்மா விட மாட்டாள்.... ஆமாம்!''

அவளுடைய ஆவேசம் தெய்வமே வந்து விட்டாற் போல் அவளுடைய உடலைச் சிலிர்க்கச் செய்தது. சிக்கம்மா அதே வேகத்துடன் கள்ளிக் கட்டைச் சுமந்து கொண்டு சரிவில் இறங்கிப் போனாள்.

ஆனி மாசத்து முற்பகுதியெல்லாம் வானடைத்துப் பொழிந்தபின் அன்று வெளிவாங்கியிருந்தது. வானமுதம் உண்ட நிறைவிலே பசுமை பூரித்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. அந்தக் காட்டுப் பங்களாவின் வராந்தாச் சாய்வுநாற்காலியில் குள்ள துரை லாம் அமர்ந்திருந்தான். அருகில் துரைசானியும் இருந்தாள். காலடியில் பெரிய சடை நாய் உராய்ந்து கொண்டு கிடந்தது.

காரியண்ணாவுக்கும் மல்லனுக்கும் அழைப்பைக் கொண்டு சென்ற ஆள் அப்போதுதான் வந்தான். பெரியவரான கிராமத் தலைவர் மட்டுமே கைத்தடியுடன் வந்து கொண்டிருந்தார்.

''ஸலாம்.....''

''உக்கார் மேன்!'' என்று குள்ள துரை எதிரேயிருந்த ஸ்டூலைக் காட்டி உபசரித்தான்.

''ஓல்ட் மேன், உங்க மியூஸிக் துரைக்குக் கேட்க ஆசை. இங்கே வந்து பைப் ட்ரம்மெல்லாம் கொண்டாந்து பாடிக் காட்டணும்...''

காரியண்ணா இதை எதிர்பார்க்கவேயில்லை.

இந்த வெள்ளைக்காரர்களுக்கு இதெல்லாம் அதிசயம்தான். அவர்களுடைய அழல் மிதி விழாவில், அறுவடைப் பண்டிகையில் துரைமார்கள் பார்க்க வருவது புதிதில்லை.

எனவே, ''செய்யலாம்'' என்று காரியண்ணா தலையை ஆட்டினார்.

''பெரிய துரைக்கு உங்க மேலே அந்த இடம் கொடுக்கலேன்னு கொஞ்சம் கோபம். ஆனால் மியூஸிக்கெல்லாம் அவருக்கு ரொம்ப இஷ்டம். இங்கே வந்து பாட வைக்கிறேன்னு சொல்லிட்டேன். எப்ப வர்தீங்க?....''

''துரை எப்ப சொன்னாலும் வருகிறோம். பெரிய துரை எங்கள் பாட்டைக் கேட்பதில் எங்களுக்கும் சந்தோஷம்'' என்றார் பெரியவர். குள்ள துரை அவரைப் பாராமலே வெற்றிப் புன்னகை புரிந்தார். வெளியே நின்ற மல்லண்ணனுக்கு அது சூழ்ச்சிப் புன்னகை என்பது புரிந்தது.

அன்றிரவு அந்தப் பங்களாவுக்குள் ஒரே பரபரப்பாக இருந்தது. 'பிகிரி' எனப்படும் குழலும் மத்தளமும் வந்தன. பாடல் கோஷ்டியாரைத் தவிர கிராமத்திலேயுள்ள ஆண்கள் எல்லோருமே உற்சாகமாகக் குழுமியிருந்தார்கள் அந்தக் கூடத்தில். சீமை எண்ணெய் விளக்குகளும் வத்திகளும் ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தன. சிம்னியில் தகதகவென்று கற்பூரக் கட்டைகள் எரிந்து, இதமான வெம்மையைத் தந்து கொண்டிருந்தன. பெரிய துரை, சின்ன துரை, துரைசானிகள் எல்லோரும் ஒருபுறம் அமர்ந்திருந்தனர். குள்ள துரை மதுப் புட்டியை உற்சாகமாக உடைத்துக் கொண்டு, ''ஆகட்டும்!'' என்று கை காட்டினான். மத்தளமும், குழலிசையும் ஒலிக்கத் தொடங்


இயற்கை நெசவின்
இன்பமான இயல்பு
சான்போரைஸ்ட் பாப்ளின்ஸ்:
ஷர்ட்டிங்ஸ்:
ஸ்டிரைப், டாபி, செக்ஸ், பைஜாமா
தோதிஸ்:
ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல், ப்ளாடினம், காம்ராத்
ஸூட்டிங்ஸ்
ப்ரின்ட்ஸ்:
SANFORIZED
Arvind
Quality
FABRICS
அரவிந்த்
மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்

ரங்கன்: நான் இறந்துவிட்டால், நீ துக்கம் விசாரிக்க வருவாய் அல்லவா?

கந்தன்: அதென்ன அப்படிக் கேட்டுவிட்டாய்? கட்டாயம் வருவேன். ஆனால் ஒரு நிபந்தனை!

ரங்கன்: என்ன நிபந்தனை?

கந்தன்: நான் இறந்துவிட்டால், நீ துக்கம் விசாரிக்க வரனும். வாக்குறுதி கொடு.

னை. மல்லண்ணன் உற்சாகத்துடன் எழுந்து துரை அருகில் வந்து பாடலைப் பற்றி விளக்க முயன்று கொண்டிருந்தான்.

பங்களாவுக்குள் இசையும், இதம் தரும் வெம்மையுமாக இருக்கையிலே, வெளியே மூன்று உருவங்கள் தெய்வ மைதானத்தை நோக்கி நடந்தன. சாரலும், தூற்றலுமாகச் சிலிர்க்கும் இரவு அது. மலை எது, வான் எது என்று தெரியாத மூட்டம். கரிய துகிலுக்குள் மறைந்து கிடந்த மரங்கள், செடி, கொடிகள் சற்றைக்கொரு முறை எதையோ நினைத்துச் சிரித்தாற் போல் பூந்துளிகளை மணிகள் போல் உதறிக்கொண்டிருந்தன.

"அ...ண்...ணே...!" என்று வீரன் எனப் பேர் பெற்றவன் கோடரி நழுவ இன்னொருவன் மீது சாய்ந்தான் நடுக்கத்துடன்.

ராஜு நன்றாகக் கூடேற்றிக் கொண்டிருந்தான். மதுவின் மணம் இன்னமும் அவனிடம் மாறவில்லை. "பயங்கொள்ளி, போடா போடா!" என்று தள்ளிவிட்டான்.

அட்டகாசமாகச் சிரித்துக் கோடரியால் போட்டான்.

"ஆ...." என்ற அலறல் ஒலி கேட்டது.

"மரத்தைச் சுற்றிப் பிசாசு கட்டுதடா... போடு!...."

குப்பி மதுவின் வெறியில் மற்றவர்களின் அச்சமும் விலகின.

"முடியாது... முடியாது... நீ... தெய்வ மரம்...." என்ற கூச்சல் அவர்கள் வெறியில் எடுபடவில்லை.

மரம் சாய்ந்தது.

"அம்மா....!" என்ற ஒலி மலைக் கானகங்களிலெல்லாம் மோதி எதிரொலித்தது.

"அம்மா..." என்ற அந்தக் குரல் கேட்டாற்போல் உடல் சிலிர்த்தது மல்லண்ணனுக்கு. 'முடியாது... முடியாது...' என்ற அவன் வெறிக் குரலும் அவன் நினைவில் பாய்ந்துவிட்டது. கைஜாலரை விட்டெறிந்து விட்டு அவன் ஓட்டமாக வந்தான்.

சாரல் தூற்றலிலே தன்னை மறந்து, காட்டு வழியே ஓடினான்.

இசை குழம்பியது; மத்தளம் நின்றது. குழல் தடுமாறியது.

"என்ன? ஏன்? மல்லண்ணன் ஏன் ஓடினான்? புலியா?..."

புலி என்று யாரோ உச்சரித்ததும் பெரிய துரை சிலிர்த்துக்கொண்டு எழுந்தார்.

பந்தம் கண்ட தேன் கூடு போல், காவலாளிகளும், கிராம மக்களும் சிதறினர்கள்.

வன விலங்குகளெல்லாம் அஞ்சியோடும் பரபரப்பும் கலகலப்பும் எழுப்பின.

தெய்வ மைதானத்தில் ஒரே கூட்டம். அருவிக்கப்பால் விளை நிலங்களின் காவற்பரணிலிருந்த கிராமத்தான் கையில் பந்தத்துடன் அருவி தாண்டி இக்கரையில் ஓடி வந்தான்.

பந்தத்தினொளியில் வெட்டுண்ட தெய்வ மரம் தெரிந்தது. அடியிலே நசுக்குண்ட வெள்ளை ரோஜா பூவைப் போல் அவள், சிக்கம்மா கிடந்தாள். குருதித் துளிகள் மரத்துக்குப் பூசனை செய்த மலர்களைப் போல் சிதறிக் கிடந்தன. மல்லண்ணனைக் கண்டதுமே அந்தப் பாதகர்கள் கோடரியை வீசிவிட்டு எங்கோ ஓடி ஒளிந்து விட்டார்கள்.

மல்லன் கதறினான்; கூவினான்; சிக்குண்ட காதலியை மீட்டு வாரிப் போட்டுக் கொண்டு புலம்பித் துடித்தான்.

மரத்தை வெட்டித் தெய்வ மைதானத்தை வசமாக்கிக்கொள்ளும் சூழ்ச்சிக்காகவே கிராமத்தார்களை வலை வீசிப் பங்களாவுக்குள் அழைத்திருந்தான் சின்னதுரை என்று மல்லன் அறிவான். ஆனால் அவர்கள் வலியவர்கள். எதிர்த்தால் வழியில்லை.

"சிக்கம்மா!:.. உனக்கு அந்தச் சூழ்ச்சி தெரியும். நீ இப்படிப் பலியாவாய் என்று அறியாமல் போனேனே? முடியாது.....முடியாது... என்று உயிரைக் கொடுத்துவிட்டாயே? ஓ சிக்கம்மா பேசு. நீ பேசு...."

காரியண்ணனின் தாயற்ற மகள் அவள்.

அந்தச் சோகக் காட்சி அவரை அங்கேயே அந்த அடியற்ற மரத்தைப்போல் வீழ்த்தியது.

துரை அந்தக் கோரத்தைக் கண்ணுற்றார். நெஞ்சை இனமறியாப் பாரம் அழுத்தியது.

அந்த மைதானம் பிறகு வெகு நாட்கள் வெறிச்சிட்டுக் கிடந்தது. சிக்கம்மாளின் மறைவுக்குப் பிறகு காரியண்ணன் வெகு நாட்கள் உயிருடன் இல்லை. மல்லண்ணன் கொஞ்ச நாட்களுக்கு அந்தப் பிராந்தியத்தில் பைத்தியம் பிடித்தவன்போல் உலவிக் கொண்டிருந்தான். பிறகு அவனையும் காணவில்லை. கிராமத்து மக்கள் அருவி தாண்டி அதிகமாக இக்கரை வருவதேயில்லை.

காலமென்னும் பேட்டிக்குள் அந்தக் கலவரச் சம்பவங்கள் புதையலாயின. ஒரு நாள் சின்ன துரை குதிரை மீதேறி அந்தப் பக்கம் வந்தான். புதிய மணியக்காரன் போனான். பிறகு ஆட்கள் வந்தார்கள்; கற்கள் வந்தன. காரையும், மணலும் சுண்ணும்பும் குவிந்தன. சரசரவென்று மரம் அறுக்கும் ஓசை கேட்டது.

மாளிகை ஒருபுறம் எழும்புகையில், அந்தத் தெய்வ மரம் இருந்த இடத்திலே ஒரு புதிய கன்று துளிர்த்தது. சுற்றிப் பச்சையாகக் கொடிகள் மண்டி வளர்ந்தன. அந்தப் புதரில் மெல்லிய பட்டுத் துளிர்கள் கொத்துக் கொத்தாக மொட்டுக்கள்விட்டன.

அருவிக்கு அப்பாலிருந்த மக்கள் கானகத்தின் நடுவே இவ்விதம் ஓர் அழகிய மாளிகை எழும்பியதைக் கண்டார்கள்; அதிசயித்தார்கள். கொத்துக் கொத்தான மொட்டுக்களில் புறவிதழ்கள் சற்றே அகல, குருதித் துளிகள் வாரிச் சிதறினாற்போலிருந்தன. புதர் நடுவே.. அந்தத் தெய்வ மரம் துளிர்த்திருந்தது.

பார்க்க வந்தவர்களின் கண்களில் கண்ணீர் துளித்தது.

"யாத்திரை முடிந்துவிட்டது பிரபுவே!" என்று குழைந்து நின்றான் லாம்.

ஏதோ ஒரு கனவினின்றும் திடுக்கிட்டெழுந்தாற் போல் நிமிர்ந்து நோக்கினார் துரை. அவர் மடியில் அந்தக் கடிதம் இருந்தது. கனவில்லை. இது நினைவேதான். ஆம்.

"அன்பே... இதுவே கடைசிக் கடிதம். நானும் உறுதி செய்து கொண்டுவிட்டேன். இந்திய மண்ணிலே அடி வைக்க வருகிறேன். தாங்கள் கனவு மாளிகை ஒன்று எனக்காகவே எழுப்புவதில் உளம் மகிழ்ந்து சிலிர்க்கிறேன். அன்புக்குத்தான் எத்தனை மகத்தான சக்தி! எனக்காகவே அல்ல - சுயநல மென்னும் தோடு கழல, அன்புக்காகவே தாங்கள் எழுப்பியிருக்கும் மாளிகையில் அன்புப் பணி செய்ய ஒருத்தியாகி வருகிறாள் உங்கள் விலா. அவள் அன்பால் இணைந்தவள். அவள் உலகைச் சுவர்க்கமாக்க வரப் போகிறாள். அன்று கண்ட கனவு பொய்யில்லை.

உலகெங்கும், உயிர்களிடமெல்லாம் அன்பு விளைந்து கொண்டே இருக்கிறது. தழைத்துக்கொண்டே இருக்கிறது; பெருகிக் கொண்டே இருக்கிறது...

துரையின் புரவி முன்னே கம்பீர நடை போட்டு வந்தது. பின்னே குள்ள துரை பரிவாரங்கள். துரை குதிரையினின்றும் இறங்கியதும், அவருக்கு நேராக அந்த ரோஜாப் புதரே கவனத்தைக் கவர்ந்தது.

பட்டுக் கருஞ்சிவப்பு ரோஜாக்கள்; கொள்ளை எழிலுடன். அள்ளும் மனமுமாகப் பூத்துக் குலுங்கி யிருக்கின்றனவே! எவ்வளவு பெரிய பூக்கள்! இம் மலையிலே இப்படி வாசம் வீசும் அபூர்வ — அற்புத மலர்களை யாருமே கண்டதில்லையே!

"லாம்....? இந்த ரோஜாப் புதர் இப்போது பயிராக்கியதா?"

"அருவாகவே வளர்ந்திருக்கிறது பிரபு!"

துரை அருகிலே பார்க்கிறார். அங்கே ஒரு தெய்வ மரக் கன்றும் துளிர்த்திருக்கிறது. ரோஜாப் புதர் அழகிய பூக்களைச் சொரிந்து அதைக் தழுவி நிற்கிறது.

அன்றைய காட்சி அவர் நினைவில் பூத்து விட்டது. அந்தக் காதலன் காதலியை மடியில் போட்டுக் கொண்டு அலறிய அந்தக் குரல் அவர் செவிகளுக்குக் கேட்டாற் போலிருந்தது. அந்தக் குருதித் துளிகளே பூத்துக் குலுங்குகின்றனவோ?

"இது... கிராமவாசிகளின் தெய்வ மரமல்லவா, லாம்?"

"ஆம், பிரபுவே! கிராமவாசிகள் இப்போதும் இந்த மரத்தைத் தொழ வருகிறார்கள். அவர்களைத் தடை செய்வதில்லை."

"அற்புதம்...."

அவர் கூறி வாய் மூடுமுன் அங்கு ஓர் அற்புதமே நிகழ்ந்தது.

வானிலிருந்து இறங்கும் தேவதைகளின் வரிசை போல் வெள்ளை உடை தரித்த கன்னிமார்களும், குருமார்களும், அந்தக் காலைப் பாதையில் இறங்கி வந்ததை அவர் கண்டார். தேவ கீதங்களாய் அவர்களின் இன்னிசை அவர்கள் செவியை நிரப்பியது. பட்டுச் சிவப்பு இடையில் கட்டி முதலாக வரும் புனிதர் கையிலே சிலுவை தாங்கிய பெம்மானின் திருவுருவை ஏந்தி வருகிறார்.

புது மலை புகும் விழாவுக்காக இந்தப் புனிதர்களை அழைத்திருந்தார்கள். இறங்கி இறங்கி, வானிலிருந்து வையத்திலே வந்த அந்த இசையோடு தேவ கன்னிகள் போன்ற தூய மங்கையர் வருகின்றனர்.

அந்தக் கோஷ்டியிலே முதலாவதாக வருபவள்.... விலா... விலா அல்லவோ?

கன்னி வடிவே அழகு வடிவோ? அந்த அழகு வடிவே அருள் வடிவோ? அருள் வடிவே அன்பு வடிவோ? அன்பு வடிவு, அவள் வடிவோ?

அந்தக் கடிதத்தின் வரிகளெல்லாம் ஏதோ ஞானத் திறவுகோல் கொண்டு பிரிக்கப் பட்டாற் போன்று பொருள் புலனாயிற்று.

சுயநலத்தின் தோடு கழன்று — எனக்காகவே அல்ல — அன்புக்காகவே அன்புப் பணி செய்யும் ஒருத்தியாகி விட்டாள்.

பொன்னிறக் கற்றைகள் ஆசை என்னும் தோடுகளாய் அகன்று விட்டன. வெள்ளைச் சிறகுகள் போன்று தோள்களிலே துவண்டு படிய அவள் கடைசிப் புன்னகை பூக்கிறாள். அந்த ரோஜாவில் ஒன்றைக் கிள்ளி, குருநாதர் மாளிகையின் முன் பீடத்தில் வைத்திருக்கும் பெம்மானின் திருவடிகளில் வைக்கிறாள்.

சில கணங்களின் சிலிர்க்கும் அநுபவத்தில் தன்னை மறந்து அந்த உயரத்தில் நின்ற துரையின் கண்களிலே நீர் அருவியாய் வழிந்தது. உல்லாச மாளிகை உயர்ந்து உயர்ந்து தெய்வத் திருமாளிகை ஆயிற்று.

அடுத்த இதழில்

போர்முனைக் கதை :

தோல்வி என்பது தெரியாது

—வி. ராஜேந்திரன்

★

கலைவளர்க்கும் கோயில்கள் :

தெ யின் கல்லூரி

★

மர்மக் கதை : காப்பாற்றியது யார்?

—கஸ்தூரி

நெடுங்கதை

பொன்முடி எழுதும்

தூங்கும் நினைவுகள்

குழந்தை வளர்ப்பில் கண்டிப்பு



அனுசுயா

"அடுப்பங்கரையில் என்ன செய்கிறாய்?" என்று சிலரை விசாரித்தால் அவர்களுக்கு அது பிடிக்காது. 'காஸ் அடுப்பங்கரையில் என்ன செய்கிறாய்?' 'பிரெஷர் குக்கர்கரையில் என்ன செய்கிறாய்?' 'எலக்ட்ரிக் ஹீட்டர் கரையில் என்ன செய்கிறாய்?' என்று கேட்கக் கூடாதா என்று எண்ணிக் கொள்வார்கள். ஏனென்றால், அவர்களிடம் அந்த அடுப்பெல்லாம் இருக்கும்.

அவர்கள் மிகவும் சுத்தமாக இருப்பார்கள். எதைத் தொட்டாலும் பிறகு ஸோப் போட்டுக் கழுவி விடுவார்கள். இடுப்பில் ஒரு பெரிய கைக்குட்டை செருகிய வண்ணமிருக்கும். எந்தச் சாமானையும் கரண்டியாலோ ஸ்பூனாலோதான் எடுப்பார்கள். இவ்வளவு கடுமையாகச் சுத்தமாக இருப்பவர்கள் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் அதைப் பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை.

கறிகாய்கள் வாங்குவதில்தான். அநேகமாகப் பல இடங்களில் கறிகாய்க் கடைகள் தெருக்களின் ஓரமாகத்தான் இருக்கும். கடை என்றால் கீழே கோணியை விரித்து அதன் மீது கறிகாய்களையெல்லாம் கொட்டியிருப்பார்கள். சிலசமயம் அவை தட்டுக்களிலுமிருப்பதுண்டு. அந்தக் கடைகள் தெருக்களின் இரண்டு ஓரங்களிலுமிருக்கும். அந்த ஓரப் பாகங்கள் எவ்வளவு சுத்தமாயிருக்குமென்று சொல்ல வேண்டியதில்லை. சென்னை தியாகராய நகரில் ரயில்வே ஸ்டேஷனை யொட்டி ராமநாதன் தெரு என்றிருக்கிறது. அது இத்தகைய சாக்கடைப் பக்கக் கறிகாய்க் கடைகளுக்குப் பெயர் போனது.

அந்தத் தெருவில் சமீபத்தில் ஒரே கலாட்டாவாக இருந்தது. ஒன்றுமில்லை. சென்னை கார்ப்பரேஷன் எல்லைக்குள் வீடு கட்டுபவர்கள் சுற்றிலும் பத்தடி விட்டுக் கட்ட வேண்டும் என்று சட்டம் உண்டு. அப்படி இடம் விட்டுத்தான் வீடுகளைக் கட்டினார்கள். ஆனால் இடம் வீணாகப் போகிறதே என்று அதில் கடை வைக்கும்படியாய்ச் சின்னக் கட்டடங்கள் கட்டினார்கள். மழை பெய்தால் கடைக்குள் சாரல் அடிக்கும். அதற்காக வெளியிலே சார்ப்பு போட்டார்கள். இப்படி செய்யக் கூடாதென்று கார்ப்பரேஷன் அதிகாரிகள் ஆட்சேபித்தார்கள். போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு வந்து சார்ப்புகளைப் பிரித்து எறிந்தார்கள். கட்டடங்களை இடிப்பது பற்றி வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

ஸ்திரீகளுக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டு. ஆகையினால்தான் அதைப் பற்றிச் சொல்கிறேன். அநேகமாக அவர்கள்தான் "இத்தனை இடம் காலியாகக் கிடக்கிறதே ஒரு கடையைக் கட்டி வாடகைக்கு விடக் கூடாதா? ஏதோ வந்த வரையில் லாபம்!" என்று புருஷர்களைத் துளைத்து எடுத்து விடுவார்கள்.

சில பெரிய அழகான பங்களாக்களில் பார்த்திருப்பீர்கள். முன் பக்கத்தில் தோட்டத்தின் ஓரமாக ஒரு தையல் கடையோ, அல்லது வெற்றிலை பாக்கு பங்கோ இருக்கும். இவை வீட்டின் அழகைக் கெடுப்பதோடு இல்லை. இவற்றைப் பிரித்து எடுத்துக் கொண்டு போகச் சொல்வதற்குள் போதும் போதுமென்றாகி விடும். தவிர வேறு விதமான பல தொல்லைகளும் உண்டு. ஏதோ பத்து ரூபாய்க்கு ஆசைப்பட்டுக் கொண்டு வாடகைக்கு விடாமல் இருப்பது நல்லது.

* * *

தன் குழந்தைகள் என்றால் எந்தத் தாயாருக்கும் உயிர்தான். படித்த தாயார்கள் ஒரு விதம், படிய



காதவர்கள் இன்னொரு விதம் என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் படித்த பெண்கள் தங்கள் குழந்தைகள் மீது அதிகப்படியான ஆசை வைத்திருப்பது போலத் தோன்றும்.

காரணம் இதுதான்: பழைய காலத்தவர்களும் 'அம்மான் கொல்லையிலே ஆனையும் பூனையும் வந்து புல் மேய்கிறது' என்று பாடிவிட்டு 'அடித்தாரின் பெயரையும், ஊரையும் சொல்லிவிட்டு'ச் சாவகாசமாக அழச் சொல்வார்கள். படித்த தற்காலப் பெண் நல்ல சினிமாத் தாலாட்டுப் பாடுவாள். சொந்த சாகித்தியம் கூடக் கிளம்பும். கொஞ்சுவதற்கும் விதம் விதமான வார்த்தைகளை உபயோகிப்பாள்.

அவள் குழந்தைகளுக்கு வேளா வேளை மணி, நிமிஷப்படி பால், ஆகாரம் முதலியன கொடுப்பாள். அதுவும் அளவாகக் கொடுப்பாள். குழந்தை உடம்பு சுடுகிறது போலிருக்கிறது என்று யாராவது சொன்னாலும் போதும், உடனே டாக்டரிடம் எடுத்துக் கொண்டு ஓடுவாள்.

அவள் குழந்தைகளை சாஸ்திரீய முறையில் வளர்ப்பதைப் பற்றி எத்தனையோ புத்தகங்கள் படித்திருக்கிறாள். பிறரைக் கேட்டும் விஷயங்களைத் தெரிந்து கொள்ளுகிறாள். குழந்தையை வளர்ப்பதில் ஏனோ தானோ என்று இருப்பதில்லை. அதை ஒரு கலையாகவே கருதிக் காரியங்கள் செய்கிறாள்.

ஆனாலும் குழந்தை வளர்ந்து நான்கு ஐந்து வயது ஆகும்போது அவள் கவலைப் படும்படியான நிலைமை ஏற்பட்டு விடுகிறது. குழந்தைகள் வியாதி வெக்கையின்றி நல்ல பலமுள்ளதாக இருக்கும். பின்னே? நடந்து கொள்ளும் விதத்தைப் பற்றித்தான் கவலை.

''நான் இந்தக் காலத்திலே இல்லாமல் இருபது வருஷங்களுக்கு முன்னாடி இருந்திருந்தால் கவலைப் பட்டிருக்க மாட்டேன். குழந்தை விஷமஞ் செய்தால், சொன்னபடி கேட்கா விட்டால் நாலு தட்டுத் தட்டுவேன். ஏன், என் கை தானாகவே அடித்துவிடும். அடிக்கிறதைப் பற்றி மனசு கஷ்டப்படாது. இப்போதோ அடிக்கிறது என்ற எண்ணமே சகிக்க முடிகிறதில்லை. குழந்தையின் பிடிவாதமும், விஷமமுமோ நாளுக்கு நாள் அதிகமாகின்றன. என்ன செய்கிறதென்று தெரியவில்லை'' என்று அவள் கவலைப்படுகிறாள்.

மற்றவர்கள், அதுதான் கணவனும் பாட்டி, தாத்தா முதலியவர்களும் — குழந்தையின் விஷமத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொன்னால் ரோஷம் பொத்துக் கொண்டு வந்துவிடும். ஓரொரு சமயம் குழந்தையை முரட்டுத்தனமாக அடித்து விட்டுத் தானும் நாலு போட்டுக் கொள்வாள். பல படித்த இளம் தாயார்களை இத்தகைய நிலைமைக்குள்ளாக்கிய பொறுப்பாளி டாக்டர் ஸ்பாக் என்பவர்.

டாக்டர் ஸ்பாக் ஒரு குழந்தை வைத்திய நிபுணர். அமெரிக்கா தேசத்தவர். குழந்தையைப் பெறுவதற்காகப் பிரசவ வைத்திய சாலைக்குக் கிளம்புவது முதல், அதைப் பெற்றெடுத்து வந்து நாலைந்து வயது வரை வளர்ப்பதைப் பற்றி ஒரு பெரிய புத்தகம் எழுதி யிருக்கிறார். பதினேழு வருஷங்களுக்கு முன்னர் வெளியான (Baby and Child care) என்ற அந்தப் புத்தகம் இருபத்தேழு தேசங்களில் ஒன்றரைக் கோடி பிரதிகள் விற்பனையாயிற்று. குழந்தை வளர்ப்பைப் பற்றிய வேதாந்தம் அதுதான். தமிழில் வெளிவரும் பல குழந்தை வளர்ப்புப் புத்தகங்கள் அதை அடிப்படையாகக் கொண்டவை.

கலியாணம் செய்து கொண்ட பெண்களும், கருத்தரித்த பெண்களும் இந்தப் புத்தகத்தைத் தாங்களே வாங்கிக் கொள்கிறார்கள். வளைகாப்பின் போதும், சீமந்தத்தின் போதும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசாகவும் கொடுக்கிறார்கள்.

அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் குழந்தைகளை அடிக்கக் கூடாது என்பது பற்றியும், இதமாகச் சொல்லியும் தாஜாப் படுத்தியுமே திருத்த வேண்டும் என்பதையும் சற்று வற்புறுத்திக் கூறியிருக்கிறார். அந்தப் போதனை இளம். தாயார்களின் மனத்தில் நன்றாகப் பதிந்து விட்டிருக்கிறது.

இளம் தாயார்கள் குழந்தைகள் எது செய்தாலும் கண்டிக்கக் கூடாது. கையை விளையாட்டுக்கும் ஓங்கவும் கூடாது என்றிருக்கிறார்கள். அது விஷயத்தில் அவர்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார்கள்.





காலநிலை அறிவிப்பு அலுவலகத்தி லிருந்து பத்திரிகைக் காரியாலயத் துக்கு வந்த செய்தி: கால நிலை சீர் கெட்டிருப்பதால் கால நிலை பற்றிய அறிவிப்புத் தாமதித்து வரக்கூடும்.

"குழந்தை ஒரு சிறிய நெருப்புப் பந்தத்தை வைத்துக் கொண்டு விளையாடுகிறது. அப் போது என்ன செய்கிறது?"

"என் கண்ணே! என் மாணிக்கமே! என் களித்திருக்க வந்த செல்வமே! அதைக் கொஞ் சம் கீழே வைத்து விடுகிறாயா? நான் பெற் றெடுத்த செல்வமே!" என்று கொஞ்சிக் கொண்டிருக்க முடியும்?

அமெரிக்காவில் பொதுவாகக் குழந்தை களுக்குப் பெற்றோர் சொன்னபடி கேட்கும் பழக்கம் கிடையாதாம்! பிடிவாதமும் விஷம மும் அதிகரித்து வருகின்றனவாம். அதைப் பற்றி டாக்டர் ஸ்பாக் கவலைப்பட்டுக் கூறி யிருப்பது சமீபத்தில் 'லைப்' பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது.

"நான் குழந்தைகளை வளர்ப்பதைப் பற்றி எழுதியது முழுவதையுமே எல்லாரும் படிக்க வில்லை. அவசியமானபோதும், கட்டுப்பாட் டுக்குடன்படச் செய்யவும் அவர்களிடம் கடு மையாய் நடந்து கொள்ள வேண்டும் என்றே எழுதியிருக்கிறேன்..... ஏன், நானே என் குழந்தைகளை அடிப்பதுண்டு.... இப்போது சிறுவர்களால் பெற்றோர்கள் தொந்தரவுக் குள்ளாகி வருகிறார்கள். அதற்காகப் 'பெற் றோர்களின் பிரச்னைகள்' என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன்" என்று கூறுகிறார்.

கோதுமைக்கு யோகம்

சென்ற வாரம் சென்னை ராஜ்ய ஸ்திரீகள் உணவு சங்கத்தில் சத்து உணவு நிபுணரான டாக்டர் மிஸ் கராட் பேசினார். அந்தச் சங்கம் கிராமாந்தரங்களில் சத்துண வுப் பிரசாரம் செய்ததைப் பற்றி ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் கூறினார். தென்னிந் தியர்கள் கோதுமையை அதிகம் சேர்த்துக் கொண்டு வர வேண்டும் என்று பலர் அந்தக் கூட்டத்தில் பேசினார்கள்.

சென்ற யுத்த சமயத்தில் அரிசி ரேஷன் ஏற் பட்ட போது வேறு வழியின்றிக் கொஞ்சம் கோதுமையையும் போனால் போகிறதென்று சேர்த்துக் கொள்ளத் தொடங்கினோம். இப் போது நமது வீடுகளில் கோதுமை மாவினால் பூரி, ரொட்டி, சப்பாத்தி முதலியன செய்வது சர்வ சாதாரணமாகி விட்டது. கோதுமைப் பூரி முதலியன தின்றால் பசி தாங்க முடிகிறது. ஆகவே பெரியவர்கள் இதை விரதத் தினங் களுக்குக் கைகண்ட பலகாரமாக உபயோகிக் கிறார்கள். அன்று அநேகமாக அரிசி முகத்தில் விழிப்பதில்லை.

தானியங்களின் மன்னன்

கோதுமை சாப்பிடுகிறவர்கள்தான் உல கத்திலேயே மிகுந்த பலசாலிகள் என்ற பல்ல வியை நான் பாடப் போவதில்லை. காந்திஜி அதைத் தானியங்களின் மன்னன் என்று புகழ்ந்திருக்கிறார். இருந்தும் அதுவும் அரிசி யும் அதே விலைதான். சப்பாத்தி ரொட்டியைப் பற்றியும் சில புது முறைகளைப் பற்றியும் குறிப்புக்களைத் தமது ஹரிஜன் பத்திரிகையில் வெளியிட்டு வந்தார் காந்திஜி. அவற்றைப் பற்றிப் பிறகு எழுதுகிறேன். இப்போது இரண்டு, மூன்று குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண் தனது நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்த சில கோதுமை - மா தயாரிப்புக்களை அப்படியே தருகிறேன்:

செய்யும் விதம்:

சப்பா கோதுமையை ரவையாக உடைத்து வைத்துக் கொள்ளவும். ரவை யுடன் சிறிது பயத்தம்பருப்பு சேர்த்து இரண்டு ஸ்பூன் நெய் விட்டுக் கொதிக்கும் நீலத்தில் விட்டுச் சிறிது கிளறவும். பிறகு அதைக் குக்கரில் வைத்து வேக விட்டு எடுத் துக் கொள்ளவும். இப்படிச் செய்தால் மிகவும் நன்றாகப் பக்குவமாக வெந்திருக்கும். கூட்டும் சாதமுமாகக் குழந்தைகளுக்குக் கொடுத்துப் பழக்கப் படுத்தலாம்.

இந்தத் தினை முறை குழந்தைகளுக்கு இப் படிச் சிறுகச் சிறுகக் கொடுத்துப் பழக்கி வந் தால் அவர்களுக்குக் கோதுமை உணவில் ஆசை ஏற்படும். முக்கியமாகப் பள்ளிக்கூடத் துக்குப் போகும் சிறுவர் சிறுமிகளுக்குக் கொடுத்து வந்தால் அவர்கள் சீக்கிரம் சோர் வடையாமல் இருப்பார்கள்.

இன்னுமொரு பாகம்:

கோதுமையை நன்றாகப் புடைத்து விட் டுப் பிடிபிடியாகப் போட்டுப் பொன்னிறமா வறுத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு இயந் திரத்தில் நன்றாக மாவாக அரைத்து வைத்துக் கொள்ளவும். ஒரு டம்ளர் பானம் வேண்டு மென்றால் இரண்டு மூன்று ஸ்பூன்கள் மாவைப் போட்டு அதில் கொதிக்கும் தண்ணீரை விட் டுச் சிறிது நேரம் மூடி வைக்கவும். பிறகு அதில் பாலும் சர்க்கரையும் சேர்த்துக் கொண்டு குடிக்கலாம்.

இந்த 'மா' நமது நாட்டு 'சத்துமா' தான். ஆனால் அதில் உண்மையாகவே அதிகமான சத்து இருக்கிறது. சிலருக்கு இந்த மாதிரி செய்வதற்குச் சிரமமா யிருக்கலாம். இப்படி அரைத்துக் கரைத்து வேக விட்டுக் கொண் டிருக்க விரும்பாதவர்கள் 'கோதுமை பிளேக்' வாங்கி உபயோகிக்கலாம். புதுப் பெயராக இருக்கிறதே என்று நினைக்காதீர்கள். இது கோதுமை அவல். கோதுமை மாவை நன்றாகக் கரைத்துச் சூடான இயந்திர உருளைகளின்மீது பாயச்செய்து தயாரிக்கிறார்கள். குழந்தைகள், பெரியவர்கள் எல்லாருமே இதைப் பாலும் சர்க்கரையும் சேர்த்தோ, மோர் விட்டுக் கலந்தோ சாப்பிட்டு வரலாம். கோதுமை பிளேக் பெட்டிகள் கடைகளில் கிடைக்கும்.

நோபின் நல்ல நோவு-நிவாரண களிம்பு.
அதனை சரியாக உபயோகித்து சிறந்த பலன் அடையுங்கள்!

நோபின் ஒரு சுகமான சூடுள்ள தோலை சமனம் செய்கிறது— வேர்வையையும் அசுத்தத்தையும் தாராது.

நோபின் சருமத்திற்கு எரிச்சலையோ, கொப்புளங்களையோ அல்லது மருந்தின் வழுக்கத்தையோ உண்டாக்காது.

நோபினின் செய்முறை வைத்திய நிபுணர்களாலும் விஞ்ஞானிகளாலும் நிட்டப்படுத்தினது. அது வசீகிட்ட டியூபுகளில் எப்பொழுதும் தோத்தியாக இருக்கும்.



நோபின்

நோவு-நிவாரண களிம்பு

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட், கல்கத்தா-29.

தென் இந்திய ஆபீஸ் 5/149, பிராட்வே, சென்னை-1

காலம் கடப்பதற்கு முன்

இப்பொழுதே இன்ஷ்யூர் செய்யுங்கள்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு — கப்பல் — விபத்து

ஆஸ்திகள் ரூ. 1 கோடிக்குமேல்

தலைமைக் காரியாலயம் பாண்டியன் பில்டிங், மதுரை-1

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர் ஆமதாபாத், லூதியானா, கோயமுத்தூர், கொச்சி, கோவில்பட்டி

சமைக்கும்போதே இளைப்பாறலாம்

இந்த அற்புத மண்ணெண்ணெ அடுப்பு கண்டு பிடிக்கும் வரையில் சமையல் என்றாலே மிகக் கஷ்டமான காரியம் என்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது நீங்கள் சமைக்கும்போதே இளைப்பாறலாம். கரி உடைக்கும் கஷ்டமோ அடுப்பூதும் சிரமமோ, கண்ணில் புகை மண்டுதலோ இல்லை. சமையலறையில் புகைக்கரி பிடிக்காது. இந்த அடுப்பு துப்புரவானது. எளிதானது. எளிமையானது.

- தூசி, தும்பு, புகை, சத்தமில்லை
- சிக்கனமும் பாதுகாப்புமுள்ளது
- ஸ்பேர் பாகங்கள் கிடைக்கும்



மண்ணெண்ணெ அடுப்பு

[illegible] ஜனதா

சுவையான சமையல் | கலப்பமான சமையல்

தயாரிப்பாளர்கள் :

தி ஓரியண்டல் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

77 பௌபஜார் தெரு, கல்கத்தா-12

ருசிக்கும்
தரத்திற்கும்
புகழ் பெற்றது

அம்பீஸ்

காண்டிமெண்ட்ஸ்

சுவை மிகுந்த

சாம்பார் பொடி,
ரசப் பொடி
கறிப் பொடி.



தயாரிப்பாளர்

அம்பீஸ் கபே

6, பிராட்வே : சென்னை-1

PARAMOUNT/AC-21

விற்பனைக்கு ரசாயனப் பொருள்கள்

ஸோடியம் ஸல்பைட்
நாப்தலின் பவுடர் &
உருண்டைகள்

விசாரிக்கவும் :

ASHOKE CHEMICAL INDUSTRIES

6, KARBALLA MOHAMMED STREET
CALCUTTA-1

●

கீழ்க்கண்ட ரசாயனப் பொருள்களையும் தயாரிப்பவர்கள்

நாப்தலின் பவுடர் & உருண்டைகள்
ஸோடியம் சல்பைட், ஸிங்க் ஆக்ஸைட்
ஸிங்க் குளோரைட் (ஸாலிட் & பியூஸ்டு)
பொட்டாஸியம் ஸிட்ரஸ் நைட்ரிக் மற்றும்
ஹைட்ரோகுளோரிக் ஆஸிட் முதலியன



நிமிஷக் கதைகள்

அப்பொழுதுதான் ரகுராமன் புத்தம் புதிதாக வக்கீல் தொழிலை மேற்கொண்டிருந்தான். பலதடவைகள் பிறரை மோசடி செய்து ஏமாற்றிப் பிழைத்த ஓர் ஆள் அவனை வழக்காட அமர்த்திக் கொண்டான்.

நீதிமன்றத்துக்கு வந்த ரகுராமன், சர்க்கார் வக்கீலைப் பார்த்து, ''நான் எத்தனை தூரம் என் கட்சிக்காரன் விஷயத்தில் வாதம் செய்யலாம்?'' என்று கேட்டான்.

''உங்கள் கட்சிக்காரன் குற்றவாளி என்பதில் லவலேசமும் சந்தேகம் இல்லை. அவனுக்கு எப்படியும் சிறைத் தண்டனை கிடைக்கவே போகிறது. நீங்கள் எத்தனைக்கெத்தனை அதிக நாள் வழக்கை இழுத்துக்கொண்டு போகிறீர்களோ, அத்தனைக்கத்தனை அதிக நாள் அவன் சிறையில் அடைபடாமல் தப்பலாம். அது தங்கள் சாமர்த்தியத்தைப் பொறுத்தது'' என்றார். ரகுராமன் ஒரு நிம்மதியான நீண்ட பெருமூச்சு விட்டான். இந்த ஒரு வழக்கிலேயே தன் வாழ்நாளை ஓட்டி விடலாம் என்ற நம்பிக்கை அவனுக்குப் பிறந்துவிட்டது போலும்!

பதினொரு மணி யிருக்கும். மந்திரி ஒருவர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியைப் பார்வையிடப் போயிருந்தார். அங்கு போன பின்தான் அவருக்கு அதே நேரத்தில் முக்கியமான ஒரு விஷயம் பற்றி முதல் மந்திரியைப் பார்க்க வருவதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.



உடனே அருகில் இருந்த தொலைபேசியை எடுத்து எக்ஸ்சேஞ்சைக் கூப்பிட்டார். பலமுறை கூப்பிட்டும் பதில் வராமற் போகவே அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அதே நேரத்தில் டெலிபோன் ஆபரேட்டர் ரிஸீவரை எடுத்து, ''என்ன வேண்டும்?'' என்றார்.

'முதல் மந்திரியின் நம்பரை இணைக்கவும்!' என்று கூறிவிட்டு அழைப்பை எதிர்பார்த்தார் மந்திரி. ஒன்று, இரண்டு என்று பல நிமிஷங்கள் ஓடியும் பதில் வராமற் போகவே, மீண்டும் தொலைபேசியை எடுத்தார். 'ஹலோ' என்று குரல் வந்தது. 'இன்னும் முதல் மந்திரி அலுவலகத்தை இணைக்கவில்லையே!' என்று கடிந்தார்.

அதே போன்ற மௌனம் மீண்டும் நீடிக்கவே, ''நான் பேசுகிறது யார் தெரியுமா? இம்மாதிரி அஜாக்கிரதையாக இருப்பதற்குச் கட்டுவிடுவேன், கட்டு! என்னை யாரென்று எண்ணினாய்?'' என்று கோபித்தார்.

''நீங்கள் யாரோ, எனக்குத் தெரியாது. ஆனால் எங்கிருந்து பேசுகிறீர்கள் என்று தெரியும். அதனால் இணைப்புத் தர முடியாது'' என்று பதில் வந்தது டெலிபோன் ஆபரேட்டரிட மிருந்து.

தீபாவளிக்குப் பின் குண்டுச் சீமாச்சுவைச் சோனிச் சீனு சந்தித்தான். சீமாச்சு தைத்துப் போட்டுக் கொண்டிருந்த சட்டை மிக அழகாக இருந்தது. சீனுவினால் தீபாவளி மும்முரத்தில் வாங்கின துணியைச் சட்டையாகத் தைத்துக் கொள்ள முடியாமற் போய்விட்டது. சீமாச்சு தைத்துக் கொண்ட தையற்காரனிடம் நாமும் சட்டை தைத்துக் கொண்டால் என்ன என்று தோன்றவே, ''ஏண்டா சீமாச்சு! இந்தச் சட்டை யார் தைத்தது? அந்தத் தையற்காரனின் பெயரையும், விலாசத்தையும் எனக்குச் சொல்லேன்!'' என்றான்.



''சொல்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை!'' என்றான் சீமாச்சு.

''என்ன? நீ சிபாரிசு செய்தாய் என்று உன் பெயரைச் சொல்லி அவனிடம் தைத்துக்கொள்கிறேன். அவ்வளவுதானே?'' என்றான் சீனு.



''கெடுத்தாயே குடியை! நீ தாராளமாக அவனிடம் போய்த் தைத்துக் கொள். எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் என் பெயரையும், விலாசத்தையும் அவனிடம் சொல்லித் தொலைக்காதே. அப்புறம் தையற் கூலி கேட்க என் வீட்டுக்கு வந்து விடப்போகிறான்!'' என்றான் சீமாச்சு.

ஊ ஊ ஃ

ஒருவர் (ரயில்வே சிப்பந்தியிடம்): வண்டிகள் மணிக்கணக்கில் தாமதித்து வரும்பொழுது இந்தக் கால அட்டவணைகளெல்லாம் போட்டுப் பொதுப்பணத்தை வீணாக்குவானேன் ஐயா?

ரயில்வே சிப்பந்தி (பொறுமையாக) வண்டிகள் எல்லாம் சரியான சமயத்துக்கு வந்துவிடுகின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். நாளைக்கு நீங்களே இந்தப் பிரயாணிகள் விடுதிகளை எதற்காக ஐயா கட்டிப் பொதுப் பணத்தை வீணாக்குகிறீர்கள் என்று சண்டைக்கு வருவீர்களே!

பொன் விலங்கு



43வது அத்தியாயம்

சத்தியமூர்த்தியின் கேள்விக்குத் தோட்டக்காரனும் புண்பட்ட மனத்தோடுதான் பதில் சொன்னான். ''இந்த அழுகைக்கு எங்கே விடிவு பொறக்கப் போகுது? இதை நீங்களும் நானும் கேட்டு ஒண்ணும் ஆகப் போகிறதில்லீங்க...தெய்வம் இருக்குதே தெய்வம்... அதுக்குக் காதுன்னு ஒண்ணு இருந்தா அது செவி சாய்ச்சுக் கேட்க வேண்டிய அழுகை இது! இந்த வயித்தெரிச்சலைக் கேட்காதீங்க.... இது இன்னொரு கண்ணுவிக் கதை....'' என்று தொடங்கிக் குரலைத் தணித்துக்கொண்டு ஏதோ ஆவேசம் வந்தவனைப் போல் மேலும் மேலும் மனக் கொதிப்போடு பேசலானான் அந்தத் தோட்டக்காரன்:

''சாரோ! சாரு! உங்களைத்தானே? உங்களுக்கு ஏன் இல்லாத வம்பெல்லாம்?...உலகத்திலே — இந்தப் பாழாப் போன உலகத்திலே இப்பிடி ரொம்ப நாளா ரொம்ப அநாதைங்க அழுதுக்கிட்டிருக்குதுங்க. சாமிக்குக் காதிருந்து கேட்டுக் கண் திறந்தால்தான் இவங்களுக்கு விடிவு உண்டு..... 'மோகினி'ன்னு கிளியாட்டமா இந்த ஊர்லே ஒரு டான்ஸ்காரப் பொண்ணு — இருக்குதே — அதான் சார் — அந்தப் பொண்ணோட அம்மாக்காரிகூடக் கொஞ்ச நாளைக்கு முன்னே கார் விபத்துலே செத்துவச்சாளே — அந்தப் பொண்ணை இங்கே...கொண்டாந்து தங்க வச்சிருக்கார் எங்க ஜமீன்தார்.... ரொம்ப நாசுக்காச் சொல்லணுமானா ஜெயில் இருக்குதே ஜெயில் அதிலே கைதியைப் பிடிச்சு வச்சமாதிரி வச்சிருக்காரு.... அந்தப் பொண்ணுக்குத் துணையாயிருக்கணும்கிற பேரிலே ஒரு ஆயாக் கிழவியையும் காவலாப் போட்டிருக்காரு. உள்ளே எட்டிப் பாரு சார்! எங்கியாவது இந்த அநியாயம் நடக்குமா? அந்தப் பொண்ணு தலைவிரிகோலமாகக் கீழே தரையிலே கிடக்கிற வீணையிலேயும் தம்புராவிலேயும் தலையை மோதிக்கிட்டுக் கதறிக் கதறி அழுவுது. ஆயாக் கிழவியோ ஜமீன்தாருக்குப் பயந்து கிளியைக் கூட்டிலே பிடிச்சு அடைச்ச மாதிரி அந்தப் பொண்ணை

மணிவண்ணன்



உள்ளார வச்சுக் கதவையே வெளியே பூட்டிப்புட்டார். ரொம்பத் தங்கமான பொண்ணு சார்... அசோக வனத்துலே சீதையைக் கொண்டாந்து வச்ச மாதிரி எங்க ஜமீன்தாரு இந்தப் பொண்ணை இங்கே கொண்டாந்து வச்சிருக்காரு....'' என்று கூறிக் கொண்டே மாளிகையின் முன்புறம் பூட்டப்பட்ட அறையின் திறந்த ஜன்னலருகே சத்தியமூர்த்தியை அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தான் தோட்டக்காரன். உயிருள்ள மங்கல வாத்தியமொன்று உயிரில்லாத மர வாத்தியங்களைத் தழுவியபடியே தாங்க முடியாத சோகத்தால் தளர்ந்து துவண்டு கிடப்பதைச் சத்திய மூர்த்தி அப்போது அந்த அறைக்குள் பார்த்தான். மோகினி தலைவிரி கோலமாகக் கிடந்தாள். அவளுடைய மூடிய கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அவளுடைய வாத்தியம் —

அவனுக்கு ஆத்ம சமர்ப்பணமான பரிசுத்த வாத்தியம் அங்கே சிறைப்பட்டு அழுது கொண்டிருப்பதை அவன் தன் கண்களாலேயே கண்டான்.

மனத்தை நெகிழச் செய்து தவிக்க வைக்கும் அந்தச் சோகக் காட்சியைப் பார்த்தபின் அவனுடைய கால்கள் அங்கிருந்து நகர மறுத்தன. 'பூபதியாவது விமான விபத்தில் ஒரேயடியாக இறந்து போய் விட்டார். இவளுக்கோ வாழ்க்கையே பெரிய விபத்தாக இருந்து ஒவ்வொரு நாளும் இவளைச் சிறிது சிறிதாகக் கொன்று கொண்டிருக்கிறது. விரும்பியபடி வாழ முடியாமல் போவதும், வாழ்வதில் விருப்பமில்லாதபடி ஏனோதானோ என்று இயங்குவதும்கூட ஒரு வகைச் சாவுதான். மனத்தைக் கொன்று விட்டு உடம்பால் மட்டும் வாழ முடியுமானால் அந்த வாழ்க்கையே அப்படி வாழ்கிறவர்களுக்கு ஒரு சாவாக இருக்கும்!' என்று நினைத்தான் சத்தியமூர்த்தி.

''என்ன சார், அப்படிப் பார்க்கிறீங்க? இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?'' என்று சத்தியமூர்த்தியைக் கேட்டான் தோட்டக்காரன்.

''தெரியும்! இந்தத் துர்ப்பாக்கிய சாலியைத் தெரிந்த துர்ப்பாக்கியசாலிகளில் நானும் ஒருவன். சிறிது நேரத்துக்கு முன்னால் நீ கூறினாற் போல் கடவுளே கண் திறந்து இரக்கப்பட்டால் தான் இவளுக்கு விடிவு பிறக்கும் போல் இருக்கிறது. ஆனால் கடவுள் மிகப் பல நல்ல சமயங்களில் கொஞ்சமும் இரக்கமில்லாதவராயிருந்து விடுகிறார். சாதாரண மனிதர்களைப் போல் சில வேளைகளில் அவரும் நம்ப முடியாதவராகி விடுகிறார்'' என்று கண்ணும் மனமும் கலங்கிய நிலையில் நாத் தழுதழுக்கச் சொன்னான் சத்தியமூர்த்தி. இதைக் கேட்டு விட்டுச் சிறிது நேரத்தில் தன் வேலையைக் கவனிப்பதற்காகத் தோட்டத்துப் பக்கமாகப் போய்விட்டான் அவன்.

அவர்களுடைய பேச்சுக் குரலினால் கவரப்பட்டுச் சோர்ந்தாற் போல் தளர்ந்து கண் மூடிக் கிடந்த மோகினி விழித்துக் கொண்டு விட்டாள். ஜன்னலுக்கு அப்பால் மோகினி சத்தியமூர்த்தியைப் பார்த்தாளோ இல்லையோ, அவளுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. எழுந்து நின்று ஜன்னலின் கம்பிகளுக்கு நடுவே தெரிந்த அவனுடைய முகத்தை நன்றாகப் பார்த்தாள் அவள். புகைபடிந்த ஓவியத்தைப் போல் அழுது அழுது ஒளி மங்கியிருந்த அவளுடைய சுந்தர முகத்தை அவனும் பார்த்தான். சோகமும் மௌனமுமே நகர்வது போல் நகர்ந்து வந்து ஜன்னலின் உட்புறம் அவனெதிரே நின்று பய பக்தியோடு கைகூப்பினாள் அவள். அவளிடமிருந்து நீங்கிப் போய் விலகிய வாழ்க்கையின் சுகங்களைப் போல் அந்த வீணை தரையில் தனியே கிடந்தது. பேச வார்த்தைகள் கிடைக்காமலோ கிடைத்த வார்த்தைகளைக் கொண்டு பேச முடியாத அளவற்ற வேதனையினாலோ அவளையே இமையாமல் பார்த்துக் கொண்டு அமைதியாக நின்றான் சத்தியமூர்த்தி. அவள் அவனுடைய கம்பீரமான முகத்திலும் கண்களிலும் ஒளிர்ந்த தூய்மையைக் கௌரவிப்பது போல் அவனை நிமிர்ந்து பார்க்க நாணித் தலை குனிந்தாள்.


''கடைசியில் நான் இந்த நரகத்துக்கே வந்துவிட்டேன். சொல்லாமல் கொள்ளாமல் ஆஸ்பத்திரியிலிருந்து திடீரென்று 'டிஸ்சார்ஜ்' செய்து என்னை இங்கே கொண்டு வந்து தள்ளி விட்டார்கள். பழைய வீட்டுக்கும் இனிமேல் போக முடியாது. அங்கேயிருந்து சாமான்களையெல்லாம் இங்கே ஒழித்துக் கொண்டு வந்தாயிற்று'' என்று குமுறிக்கொண்டு வருகிற அழுகைக்கு நடுவே ஒலி தளர்ந்து நலிந்த சொற்களால் பேசினாள் அவள்.

''அந்த வீடும் ஜமீன்தாருடையது தானாமே?'' என்று அப்போது அவளைக் கேட்டுவிடுவதற்காக நாவின் நுனி வரை வந்துவிட்ட ஒரு கேள்வியைக் கேட்காமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விட்டான் அவன். மோகினியின் தாய் முத்தழகம்மாள் எந்த எந்த விதத்திலோ மஞ்சள்பட்டி ஜமீன் குடும்பத்துக்கு ஆட்பட்டு வீடு வாசல், உணவு, உடை எல்லாம் ஜமீன்தாரிடம் ஏற்பாடு செய்து கொண்டிருந்தால் அதற்குப் பேதை மோகினி என்ன செய்வாள்? 'மோகினி அவளுடைய நாட்டியக் கலையில் மட்டுமே ஞானி! மற்றவற்றில் எல்லாம் அவள் வெறும் பேதை. பேதைகளை அதிகம் புண்படுத்துவது பாவம்' என்று எண்ணியது அவன் உள்ளம். அவளே மேலும் அவனிடம் பேசினாள்:

''நேற்று என் மேல் உங்களுக்குக் கோபம் போல் இருக்கிறது! ஜமீன்தாரும் மற்றவர்களும் காலையில் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த போது நீங்கள் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே அங்கிருந்து போய் விட்டீர்கள்.'' — சத்தியமூர்த்தி இப்போது அவளுக்குப் பதில் கூறலானான்: ''உன்மேல் கோபப்பட்டு என்ன பயன்? நீ ஒரு பேதை! உன்னைச் சந்திக்காமலிருந்தால் நானும் என்னுடைய வாழ்க்கையில் ஓர் அழகிய பேதை

சிந்தால் வருஷங்கள்





இளமைப் பருவம்

ஒரு அழகுப் பெண்மணி யாகத் திகழ தயார் செய்துகொண்டிருக்கி றீர்களா? உங்கள் இடைக்கால வருடங்களில் தான் மேனி எழிலுக்கு அதிகப்படியான பராமரிப்பு மிகவும் தேவை.

லட்சக் கணக்கானவர்களால் உபயோகிக்கப்பட்டு நம்பிக்கைக்குப் பாத்திரமான, இந்தியாவிலேயே பிரமிக்கச்செய்யும் **ஜி–11*** சேர்ந்த ஒரே சோப்பான **சிந்தால்** உபயோகித்து உங்கள் மேனியெழிலைப் பராமரிப்பதைவிட வேறு சிறந்தவழி யேது? சாதாரணமாக சருமத்தில் களங்கத்தை உண்டுபண்ணும், துர்நாற்றத்தை எழுப்பும் கிருமிகளை **ஒழித்துக்** களங்கமற்ற பரிசுத்தமான மேனி யெழிலோங்க **சிந்தால்** உறுதி செய்கிறது.



வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளங்கச்செய்யும் சோப்

மிருதுவனப்பிற்கும், பூரணப் பாதுகாப் பிற்கும் இனிய மணங்கமழும், வியர்வை நாற்றத்தைப் போக்கி ஆறுதல் அளிக்கும் **ஜி-11** அடங்கியுள்ள கோத்ரெஜ் **சிந்தால்** டாய்லெட் பவுடர் உபயோகியுங்கள்.

கோத்ரெஜ் **ஹேர்டானிக்** கிலும் **ஜி-11** அடங்கியுள்ளது.

* விவரமான "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு 'கோத்ரெஜ், பம்பாய்-12', என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

Godrej கோத்ரெஜ் **சோப்புகளில் முதன்மையான பெயர்**



பின்னியின் தூய **சில்க் புடவை**

அணிந்து ராணிபோல் காட்சியளியுங்கள்

நீங்கள் பின்னியின் பலரக ஜார்ஜெட்டுகளையும், மிருதுவான தூய சில்க் புடவைகளையும் எங்கள் ஷோரூம் நெ. 1லிருந்து தேர்ந்தெடுக்கலாம்

வெங்கடேஷ் வஸ்திராலயா

ஸ்தாபிதம் 1932

ஷோரூம்கள் நெ. 1 & 2 மைசூர் பாங்க் பில்டிங்
மதராஸ் (ஹைகோர்டுக்கு எதிரில்)

பார்ட்னர்கள் : S. வெங்கடேஸ்வர அய்யர் & V. சிவராமன்

JWT/VV-172a Rev

யின் அவலங்களை நினைத்து இப்படிக் கண் கலங்க நேர்ந்திருக்காது.''

''அப்படிச் சொல்லாதீர்கள்! உங்களைச் சந்திக்காமலிருந்தால் நான் வாழவே நேர்ந்திருக்காது!''

''வாழ்வதும், சாவதும் நம் கையில் இல்லை மோகினி! பூபதி — சிறப்பாகப் பேரோடும் புகழோடும் வாழ்வதற்குத் தான் பத்ம ஸ்ரீ விருது வாங்கப் பறந்து போனார். பாவம் ஒரேயடியாக உலகத்தை விட்டே போய்விட்டார். அவர் சாக வேண்டும் என்று நினைக்கவேயில்லை. ஆனால் வாழ முடியாமல் போய் விட்டது.''

''செய்தி தெரிந்தபோது எனக்கு ரொம்பப் பாவமாயிருந்தது. அவருடைய பெண் இங்கே கதறி அழுத குரல் கேட்டுக் காலையில் நான் பயந்தே போனேன்'' என்று மோகினி கூறிய போது, ''நீதான் ஜமீன்தாருக்கே பயப்படுகிறவளாயிற்றே? வெறும் அழுகுரலைக் கேட்டு ஏன் பயப்பட மாட்டாய்?'' என்று சத்தியமூர்த்தி நடுவில் குறுக்கிட்டு அவளைக் கேட்டான். இதைக் கேட்டு அவள் முகம் மேலும் வாட்டமடைந்தது. இந்தச் சொற்களால் அவளுடைய மென்மையான இதயம் தாக்கப்பட்டு விட்டது.

''இப்போது நீங்கள் கூறியதற்கு என்ன அர்த்தம்?''

''நீ கெட்டவர்களைக் கண்டு பயப்படுகிறாய் என்று அர்த்தம்.''

''கொடிய புலிகளைப் பார்த்துப் பலமில்லாத மான்கள் நடுங்குவது தவறா?''

''நடுங்கலாம். ஆனால் கோழையாயிருக்கக் கூடாது. கோழைகள் எதையும் தீர்மானமாக விரும்புவதற்கும் வெறுப்பதற்கும் கூடத் தகுதியற்றவர்கள். அவர்களால் எப்படித் தைரியமாகக் காதலிக்க முடியும்?''

''நான் உங்களை விரும்பித் தொழுவதற்குத் தைரியமில்லாமல் தொழவில்லை. நீங்கள் ஆஸ்பத்திரிக்கு என்னைத் தேடிக்கொண்டு வருவது பிடிக்காமல் தான் ஜமீன்தார் அவசரம் அவசரமாக என்னை இங்கே கொண்டு வந்து தள்ளினார். அதனால் என் இதயத்தில் தளர்ச்சி வந்து உங்களைத் தொழுகிற தொழுகையை நான் நிறுத்தி விடவில்லையே?''

''அப்படியானால் மனம் ஒப்பி இந்த நரகத்துக்கு நீ ஏன் வந்தாய்?''

''சொர்க்கத்துக்கு அழைத்துக் கொண்டு போக நீங்கள் இன்னும் அருகில் நெருங்கி வரவில்லை. நீங்கள் இல்லாதபோது, பாவிகள் என்னைப் பயமுறுத்தி, மிரட்டி இங்கே கொண்டு வந்து தள்ளியிருக்கிறார்கள். நான் விரும்பியா இந்த நரகத்துக்கு வந்தேன்? எனக்கு உங்களைத் தவிர வேறு உலகம் இல்லை. இந்த நிமிஷமே — வெளியே பூட்டியிருக்கிற இந்தக் கௌரவமான சிறைக் கதவைத் திறந்துவிட்டு உங்கள் வலது கரத்தை முன்னால் நீட்டி என்னைக் கைப்பற்றி அழைத்துச் செல்லுங்கள். நான் உங்கள் வழியில் நடந்து வரத் தயார். ஆனால் என்னை அழைத்துப் போகிற உங்களுக்கு நானே அதன் பிறகு ஒரு பெரிய தளையாகி விடுவேன். ஜமீன்தாருடைய ஆட்கள் உங்களைக் கருவறுக்க வேண்டுமென்று துரத்திக் கொண்டு புறப்படுவார்கள். வசந்த சேனையும், மாதவியும் வாழ்ந்த காவிய காலத்தில் நாம் வாழவில்லை. ஆனால் அதே உயரிய ஆசை எனக்கும் உங்களுக்கும் இருக்கிறது. நம்மைச் சுற்றியிருக்கிற உலகில் எல்லாத் துன்பமும் உண்டு. இன்றைய உலகத்திலோ என்னுடைய பழிகள் — நான் பிறந்த இடத்தின் பழிகள் — எல்லாம் விட்டு விடாமல் ஞாபகப் படுத்தப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. என் கலையை உலகம் அங்கீகரிக்கும். பிறப்பை அங்கீகரிக்குமா, அன்பரே?''

பொன் விளக்கு

பரிசுத்தமான அன்பு என்பது மனம் நெகிழ்ந்து உருகும் தூயவர்களின் கண்ணீரால் உலகில் நிரூபிக்கப்படுகிறது.

''வழிபாட்டுக்கு உரிய தாமரைப் பூக்கள் சேற்றில்தான் பூக்கின்றன. வாசனை மிக்க சந்தன மரம் மண்ணில் தான் முளைக்கிறது! பிறப்பு எல்லா உயிர்க்கும் ஒன்று. சிறப்புத்தான் வேறு வேறாக வந்து வாய்க்க முடியும்!''

''பயத்தையும் நிராதரவையும் தவிர என்னைப் போன்ற பேதையின் வாழ்வில் வேறென்ன சிறப்பு இருக்கமுடியும்....?''

''அப்படிச் சொல்லாதே! நீயே ஒரு சிறப்புத்தான். நீ பேதையாயிருக்கிறாய் என்பது உனக்கு இன்னும் ஒரு சிறப்பு. பேதைகள் சுலபமாக மனத்தைப் பறி கொடுக்கிறார்கள். புத்தியும் தந்திரமும் உள்ளவர்களால் இன்னொருவருடைய மனத்தைப் பறித்துக் கொள்ள முடியுமே தவிர இன்னொரு



காதலி: அன்பே! உங்கள் துயரங்களிலும் நான் பங்கு கொள்ள விரும்புகிறேன்.

காதலன்: எனக்குத் துயரம் ஏதும் இல்லையே!

காதலி: இப்பொழுது இல்லை என்பது உண்மை. கல்யாணம் ஆகிவிட்டால் எத்தனையோ துயரங்கள் தொடங்கிவிடுமே!

வருடைய மனத்துக்கு விட்டுக் கொடுக்க முடியாது.''

''நான் யாரிடம் மனத்தைப் பறிகொடுத்திருக்கிறேனோ அவர் என் மோதிரத்தைத் தான் அணிந்துகொண்டு தன் மோதிரத்தை எனக்கு அணிவித்துத் தெய்விகமாகவும் அந்தரங்கமாகவும் என்னை மணந்துகொண்டிருக்கிறார். அப்படி மணந்துகொண்ட விநாடியிலிருந்து மனத்தினாலும் பாவனைகளினாலும் நான் அவருடைய மனைவியாகவே இருந்து வருகிறேன். உலகத்துக்குத் தெரிந்து வாழ முடிந்தாலும், உள்ளத்தினால் உணர்ந்து வாழ முடிந்தாலும் நான் அவருக்காகத்தான் வாழ்வேன்! நீண்ட நாட்களுக்கு முன் ஒரு சமயம் கோயிலில் என்னைச் சந்தித்தபோது 'வயிறு நிரம்ப வேண்டுமானால் யார் சொல்கிறபடி யாவது கேட்டுத்தான் ஆக வேண்டும். கேட்கவும் ஒப்புக்கொள்ளவும் கசப்பாயிருந்தாலும் இதுதான் வாழ்க்கையைப் பற்றிய உண்மை' என்று என்னிடம் கோபமாகச் சொல்லியிருக்கிறீர்கள் நீங்கள். வயிற்றை நிரப்பிக் கொண்டு எங்கேயாவது வாழ வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. உங்களைத் தவிர இன்னொருவர் இந்தக் கையைத் தொடுகிறபோது என்னுடைய உடம்பில் உயிர் இருக்காது. இது வெறும் வார்த்தையில்லை. உங்கள் ஆணையாகச் சத்தியம்....'' என்று கூறி ஜன்னல் வழியே கையை நீட்டி அவனுடைய வலது கையைத் தன் கையோடு சேர்த்துக் கொண்டு அந்தச் சத்தியத்தை நிரந்தரமாக்குவது போல நிச்சயித்தாள் மோகினி. அப்போது சத்தியமூர்த்தி அவளைக் கேட்டான்.

''எப்படியும் நீ இந்த நரகத்தில் உன்னைத் தூய்மையாக வைத்துக்கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்குண்டு மோகினி! ஆனால் உன்னை இப்படி இந்த அறையில் தள்ளி அடைத்துப் பூட்டிச் சிறை வைக்கிற அளவு நீ யாருக்கு என்ன கொடுமை செய்தாய்? ஏன் இப்படிப் பாவங்களைக் கூசாமல் செய்கிறார்கள்?''

''அறையைப் பூட்டாமல் திறந்திருந்தாலும் எனக்கு இது சிறைக் கூடமாகத்தான் இருக்கும்! மனத்திற்குப் பிடிக்காத இடத்தில் கால்கள் நிற்பதே சிறைதான். நான் தப்பி ஓடிப் போய்த் தற்கொலை பண்ணிக்கொண்டு விடக் கூடாதே; அதற்காகத்தான் ஜமீன்தார் எனக்கு இத்தனை பாதுகாப்புப் பண்ணி வைத்திருக்கிறார். நான் செத்துப் போகவும் எனக்குச் சுதந்திரம் இல்லை.''

''கவலைப்படாதே! என்றாவது ஒரு நாள் நீ உன் மனம் விரும்புகிறபடி கௌரவமான வாழ்வை அடைய முடியும். தெய்வம் உன்னை வாழ வைக்கும்! உன் தூய நம்பிக்கைகள் என்றாவது வெற்றி பெறும்...''

''என் தெய்வம் நீங்கள்தான்! எப்போதும் இந்தக் கால்கள் உங்கள் பின்னால் நீங்கள் போகிற வழியில் நடந்து வரத் தயாராகத் துடித்துக் கொண்டிருக்கின்றன. என்னுடைய அழகும் கலைத் திறனும் எனக்குப் பெரிய பகைகள். நான் நினைக்கிறபடி வாழக் கொடுத்து வைக்கவில்லை. பிறந்ததிலிருந்து அழுகைதான் என்னுடைய சௌபாக்கியம்! என்னுடைய வாழ்வு ஓர் உறுதியில்லாத கனவாயிருக்கிறது. நீங்கள் என்னை வாழ வைப்பீர்கள். ஆனால் அப்படி முன்வருகிற உங்களை உலகமும் மற்றவர்களும் வாழ விடமாட்டார்கள்.''

''ஜமீன்தார் உன்னிடம் என்ன விதமான வாழ்வை எதிர்பார்க்கிறார்?''

''இந்தக் கேள்வியே மகா பாவம்! இதற்குப் பதில் சொல்கிற பாவத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை.''

''கேள்வி கேட்காமல் நான் எப்படி எதைத் தெரிந்து கொள்ள முடியும், மோகினி! ஆனால் நீயோ கேள்வி கேட்பதே பாவம் என்று சீறுகிறாய்!''


''சீறாமல் பின் என்ன செய்வேன்? பந்தல் போட்டு, சுற்றமும் உறவும் அழைத்து மேள தாளத்தோடு மாலை மாற்றிக் கொண்டால்தான் கலியா

ADV/GM-57-1-3 TAM.

ரூ. 2,000

பரிசுகளாக!
புதிதாகப் பிறந்த
குழந்தைகளுக்கென
மானேர்ஸ்

அதிர்ஷ்டக் குழந்தை விழா



- முதற் பரிசு: ரூ. 1,250 (மாதம் ரூ. 22.60 வீதம் 5 ஆண்டுகளுக்கு டெபர்டு ஆன்யுடி ஆயுள் இன்ஷூரன்ஸ் பாலிசியாக)
- 2-வது பரிசு: ரூ. 500 ரொக்கமாக அல்லது பிரைஸ் பாண்டுகளாக.
- 3-வது பரிசு: ரூ. 250 ரொக்கமாக அல்லது பிரைஸ் பாண்டுகளாக.

உங்கள் குழந்தை விழாவில் சேரும் விதம்: உங்கள் குழந்தை பிறந்த நேரம், தேதி, பெயர், உங்கள் விலாசம் முதலியவற்றை எங்களுக்கு அனுப்புங்கள். அத்துடன் மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் அட்டைப் பெட்டியின் மேற்புற மூடி ஒன்றையும் இணைத்து அனுப்புங்கள்.

தேர்வாளர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தேதி, நேரக் குறிப்பிற்கு மிக நெருக்கமாகப் பிறந்துள்ள குழந்தைகளே வெற்றிபெறுவார்கள்.

உங்கள் கடைக்காரரிடமிருந்து நுழைவுக் கூப்பன்களைப் பெறுங்கள். அல்லது காகிதத்தில் முழு விவரங்களையும் எழுதி அனுப்புங்கள். கூப்பன்களை அனுப்பவேண்டிய விலாசம்: லக்கி பேபி பெஸ்டிவல், தபால் பை எண், 10116, பம்பாய்—1.


முடிவுகள்: மானேர்ஸ் அதிர்ஷ்டக் குழந்தை விழா; 1963-ம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பிறந்த குழந்தைகளுக்கு அதிர்ஷ்ட நேரம் மற்றும் தேதி காலை 2.56, 1963 ஆகஸ்ட் 19ந் தேதி. முதல் பரிசு: பேபி ஜீனத், கோழிக்கோடு-1. இரண்டாவது பரிசு: பேபி வெங்கடகோபாலன் திருச்சி-8. மூன்றாவது பரிசு: பேபி அனந்தலக்ஷ்மி, பம்பாய்-71. அடுத்த விழா 1963 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பிறந்த குழந்தைகளுக்கு முடிவு தேதி 15-11-1963.

மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் குழந்தைகளைச் சிரித்த முகத்துடன் வைத்திருக்கிறது.





GEOFFREY MANNERS
& CO. LTD



பூரண வாழ்வு, உயர்ந்த வாழ்க்கைத்தரம்

"குடும்பக் கட்டுப்பாட்டை நான் பூரணமாக ஆதரிக்கிறேன். உயர்ந்து வரும் ஜனத்தொகை விகிதத்தைக் குறைப்பது, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் முக்கியமான கொள்கைகளில் ஒன்று. இது மிகவும் முக்கியம் எனினும் வேறு நோக்கங்களும் உள்ளன பூரண வாழ்வு, முக்கியமாக தாய்-சேயின் வாழ்வு, பொலிவுடன் விளங்கச்செய்வதும் முக்கியமான கொள்கை. ஒரு சிறிய குடும்பத்தில் இருக்கும் வாழ்க்கைத்தரம், கல்வி, முதலிய வசதிகள், நிச்சயமாக ஒரு பெரிய குடும்பத்தில் குறைவாகவே இருக்கும்

(பிரதம மந்திரி நேரு ஒரு செய்தியில்)

ஆனந்தம் ஆரோக்கியம் அடைய

குடும்பத்தைத் திட்டமிடுங்கள்

அருகிலுள்ள அரசாங்கம் அங்கீகரித்துள்ள

குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற்கு சென்று

ஆலோசனை பெறுங்கள்

ணமா? ஆண்டாள் அரங்கநாதரைப் பாவித்தது போல் உங்களை மணந்து, உங்கள் மனைவியாகவே என்னைப் பாவித்துக்கொண்டிருக்கிறேன் நான். உங்கள் மனைவியிடமே 'நீ யாரோடு வாழ விரும்புகிறாய்?' என்று நீங்கள் கேள்வி கேட்பது பெரிய பாவமில்லையா?''

அவளுடைய இந்தச் சொற்கள் அவனைப் புல்லரிக்கச் செய்தன. 'இந்தப் பேதையின் இதயத்தில்தான் எவ்வளவு உறுதியான அங்கீகாரம் நிரம்பியிருக்கிறது. 'நான் உங்கள் மனைவி' — என்று சொல்லிக்கொள்வதிலேயே இவளுக்கு வாழ்க்கையைப் பற்றிய சகல விதமான திருப்திகளும் கிடைத்து விடுவதாகப் பாவனை புரிய முடியுமானால் இது எவ்வளவு உயர்ந்த காதலாக இருக்க முடியும்? பரிசுத்தமான அன்பு என்பது மனம் நெகிழ்ந்து உருகும் தூயவர்களின் கண்ணீரால் இவ்வுலகில் நிரூபிக்கப்படுகிறது என்று சொல்வது இவளைப் பொறுத்தவரை எவ்வளவு பொருத்தமான வாக்கியம்?' என்று எண்ணி அவளுடைய தோற்றத்தையே ஒரு வியப்பாகக் கருதிக் கவனித்தான் சத்தியமூர்த்தி. அவன் வாசிப்பதற்காகவே அவனெதிரே காத்து நிற்கும் நிர்மல வாத்தியமாய் — அப்போது நின்று கொண்டிருந்தாள் அவள். வாழ்வில் இரண்டு நன்மைகளின் நடுவே நிற்கும் சாமானியமான பல தடைகளைப் போல் அவனுக்கும் அவளுக்கும் நடுவே ஜன்னல் கம்பிகள் இருந்தன.

''உன்னுடைய மங்கல நினைவுகள் வீண் போகாது, மோகினி!'' என்று உணர்ச்சிப் பெருக்கோடு தொடங்கி அவன் அவளிடம் ஆறுதல் கூறிக்கொண்டிருக்கும்போது, ''நீங்கள் எனக்கு ஓர் வாக்குறுதி செய்து கொடுக்க முடியுமானால் நான் அதிர்ஷ்டசாலியாக இருப்பேன்'' — என்று பிச்சை கேட்பது போன்ற குரலில் அவனிடம் ஒரு வேண்டுகோளைத் தொடங்கினாள் அவள். அந்த வேண்டுகோளைக் கேட்டு அவன் கண்ணீர் சிந்தினான். அவன் மனம் நெகிழ்ந்து உருகியது.

''இதென்ன அமங்கலமான வேண்டுகோள்?'' என்று அதைக் கேட்டு அவள் மேல் சீற்றம் கொண்டு கோபித்தான். ஆனால் அவளோ பிடிவாதமாக அந்த வேண்டுகோளையே வற்புறுத்தினாள்.

''உன்னுடைய வாழ்வின் திருப்தி இந்த மிக எளிமையான தேவைகளிலிருந்தே உனக்குக் கிடைத்துவிட முடியுமா மோகினி?'' என்று அவன் எதிர்த்து வினவியபோது அவளும் பதில்சொல்ல முடியாமல் பெரிதாக அழுதுவிட்டாள். ஆனால் அந்த அழுகையும் சில விநாடிகளில் நின்றது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் அவள் அவனைப் பார்த்தபோது அந்தப் பேதையின் முகம் கலக்கமில்லாத பேரமைதியோடிருந்தது.

அவளுடைய வேண்டுகோளைக் கேட்டுச் சத்தியமூர்த்தி கண் கலங்கிய அதே வேளையில் வாழ்க்கையின் சகல விதமான திருப்திகளையும் அடைந்து இதய பூர்வமாக அவற்றை அங்கீகரித்துக் கொண்டு விட்டாற்போலச் சலனமற்றிருந்தாள் அவள். மனத்தின் திருப்தியும் தியாகமும் தெரிகிற தூய பார்வையால் அவளுடைய கண்களின் அழகு அப்போது பெருகியிருந்தது. கண்களில் உள்ள மோகன மயக்கத்தாலும் கவர்ச்சியாலும் பெண்களுக்கு 'மதிராட்சி' என்று சில கவிகள் பெயர் சூட்டிப் புனைந்துரைத்திருப்பதை நினைத்தான் சத்தியமூர்த்தி. திராட்சை மதுவைப் போல் கண்கள் என்று பாடியவன் உணர்ச்சி மிக்க கவியாயிருக்க வேண்டும். மேல் வானத்து நீல முற்றத்தில் சில மாலை வேளைகளில் மிதக்கும் ரோஸ் மேகங்களைப் போல் சிவந்த அந்த முகமும், அந்த முகத்துக்குரியவளின் செம்மை பூவிரிக்கும் உள்ளங் கைகளும், செம்மை அரும்பிப் பளபளக்கும் இதழ்களுமாகப் பார்வையே பேசுவதாய் நின்றாள் அவள். அந்தக் கண்கள் அவனிடமிருந்து எதையோ கேட்டன. எதற்கோ ஏங்கின. சிரிக்க விரும்பாத சூழ்நிலைகளில் பழகிப் பழகிப் பழகிச் சோகமே நிரந்தர உணர்ச்சியாகிவிட்டாலும் அவளுடைய அந்த உதடுகளில் சிரிப்பு மறைவாய் உறங்கிக் கொண்டிருந்தது. புறப்படாத மோனமாக ஒரு புன்னகை அங்கே தயங்கி நின்றது. அவள் சற்று முன் அவனிடம் வாக்குறுதியும் வேண்டுகோளும் கேட்டிருந்த கோமளமான மெல்லிய குரல் இன்னும் அவன் செவிகளில் ராகமாய், அநுராகமாய் இனிமை கனிந்து ஒலித்துக் கொண்டிருந்தது. (தொடரும்)

டாக்டர்: நீங்கள் அருந்தக்கூடிய உணவில் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டே உயிர் வாழ்கிறீர்கள்.

நோயாளி: மற்ற இரண்டு பங்கு என்ன ஆகிறது டாக்டர்?

டாக்டர்: அதனால் நான் உயிர் வாழ்கிறேன்!

இன்றைய நாகரீகத்திற்கு ஏற்ப நூதனமான பார்டர்களில் பட்டுப் பாவாடைகள், சோளி பீஸ்கள், கண்கவர் வண்ணங்களில் காஞ்சிபுரம், தர்மாவரம் பட்டுப் புடவைகள் ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம். இன்றே ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.


காஞ்சீபுரம் ஸில்க் ஹவுஸ்

பட்டு, ஜவுளி வியாபாரம்

5/28-29, W.E.A. கரோல்பாக் (போன்: 53981) புது டெல்லி-5

ஸில்வர் எக்ஸைட்

ஒவ்வொரு முறையும் உடனடியாக என்ஜினைத் துவக்க




உங்கள் உள்ளூர் ஏஜண்டு:

தி ஜெனரல் எலக்டிரிக் கோ. ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட். சென்னை

கிளைகள்: பெங்களூர், கோயமுத்தூர், சிகந்தராபாத்

EBSC-65 TM

கோபால் பல்பொடி



பல் வலி, பல் அரணை, வாய் நாற்றம் பல்லில் இரத்தம் வடிதல், முதலிய பல் வியாதிகளை குணப்படுத்தி பல்களுக்கு வெண்மையும் பலத்தையும் தருகிறது.



தயாரிப்பாளர்கள்:— எஸ்.பி.எஸ்.ஜெயம் அன் கோ.,
25, கீழ நாப்பாளையத் தெரு....... மதுரை.

MINERVA

அறிவுக் கனலே அருட் புனலே!

39

ரா. கணபதி

ஆசை முகம்தான் அது!

ராமகிருஷ்ணர் தேவியாக இருக்கும் போது மகாதேவனாக இருந்து அன்பு செய்யும் முகம் அது!

ராமகிருஷ்ணர் நாராயணனாக இருக்கும் போது அவனது இணைபிரியாப் பக்தனான நரனாக இருந்து தொழும்பு செய்யும் முகம் அது!

கடைசி கடைசியாக, பரம் பொருள் ஆனந்தச் சாருகப் பெருகி, பிறகு பாலனாக இறுகிற்று. அந்தப் பாலன் தியானத்திலிருந்த சப்த ரிஷிகளில் ஒருவரைத் தட்டி யெழுப்பினான். ''என்னோடு பூலோகத்துக்கு வரமாட்டே?'' என்று கேட்டு விட்டு உலகை உய்விக்கக் கமார்புகுரில் வந்து உதித்தான்.

தாம் தட்டி எழுப்பிய அந்த ரிஷி புங்கவருக்காகத்தான் இத்தனை நாளும் ராமகிருஷ்ணர் காத்திருந்தார்.

இன்று நரேந்திரனைக் கண்டதும் அந்த முனிவரின் ஆசை முகம் அவருக்கு நினைவுக்கு வந்து விட்டது.

இந்தத் தொடரின் முதல் அத்தியாயத்தில் இதையெல்லாம் படித்தது வாசகர்களுக்கு நினைவு வருகிறதோ?

ராமகிருஷ்ணருக்குத்தான் நினைவு வந்ததே தவிர நரேந்திரநாதனுக்கு எந்த விதமான பூர்வ ஞாபகமும் ஏற்படவில்லை. அன்பு என்கிற தத்துவம் ராமகிருஷ்ணருக்குக் காணுதனவெல்லாம் காட்டிக் கொடுத்தது. ஆனால் பகுத்தறிவு நரேந்திரனின் அகக் கண்களை அடியோடு மூடியிருந்தது.

அப்படிக் கண்களை மூடிக்கொண்டே தான் அவன் 'கடவுள் உண்டா? அவரைக் காண முடியுமா? அவரைக் கண்டவர் உண்டா?' என்றெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தான். மகான்கள் பலரிடம் சென்று, ''மஹாசய, நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?'' என்று கேட்டு வந்தான். அப்படிக் கண்டவர் யாரையும் நரேந்திரநாதன் காணவில்லை.



''அப்படியானால் கடவுள் என்றே ஒருவர் கிடையாதோ?'' என்று குழம்பிக் கொண்டிருந்த நிலையில்தான் இன்று தக்ஷிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தான்.

தன்னுள் கொழுந்து விட்டெரியும் கேள்வியை ராமகிருஷ்ணரிடம் கேட்கு முன் கானம் செய்தான். அறிவினால் அவன் அடைய முடியாததை இசையின் வழியே அவனது ஆத்மா உணர அந்த உணர்ச்சியைப் பாட்டாக வடித்தான்.

சாதுக்கள் சங்கம் சத்தியப் பாதையில்
சாவடியாய் நிற்கும் மடமனமே!
சாவடியில் தங்கி, சோர்வு தனை நீக்கிச்
சாந்தி கொள்வாய் எந்தன் மடமனமே!

என்பதாக, தனக்குரிய இடத்தைச் சேர்ந்தாகி விட்டது என்று பொருள் படப் பாடினான்.

ஆனால் பகுத்தறிவு மீண்டும் துருத்திக் கொண்டு வந்து அக உணர்வை விழுங்கியது.

ராமகிருஷ்ணர் அவனைத் தனியே இட்டுச் சென்று ''உனக்காகத்தான் காத்திருந்தேன்'' என்று கண்ணீர் விட்டதும், சென்று போன தங்கள் தொடர்புகளையெல்லாம் எண்ணிக் கரைந்ததும் அந்தப் பகுத்தறிவுவாதிக்குச் சற்றும் புரிபடாத செய்கைகளாகவே இருந்தன.

இவருக்குப் புத்தி சரியாகத்தான் இருக்கிறதா என்றே சந்தேகித்தான் அவன்.

எனினும் தான் சுமந்து வந்த கேள்வியை ஒருவாறு அவரிடம் கேட்டு விட்டான்!

''மஹாசய, தாங்கள் கடவுளைக் கண்டதுண்டா?''

பட்டுப் போன்ற குரலில் ராமகிருஷ்ணர் விடை பகர்ந்தார்:


''கண்டிருக்கிறேன் பிள்ளாய், கண்டிருக்கிறேன். இதோ உன்னை என் கண் முன்னே காண்கிறேன் அல்லவா, இதே போல அவனையும் கண்டிருக்கிறேன்...... இல்லை..... இது போல இல்லை.... உன்னை நான் காண்பதை விட இன்னமும் தெளிவாக, இன்னமும் அடர்த்தியான உணர்வுடன் அவனைக் கண்டிருக்கிறேன்.''

கடவுளைக் கண்டு விட்டோம் என்ற பெருமிதம் அந்த வார்த்தைகளில் தொனிக்கவில்லை. அன்புருவான ஆண்டவனின் அன்பை உணர்ந்த குளுமைதான் அச்சொற்களில் நிரம்பியிருந்தது. கனன்றெழுந்த நரேந்திரநாதனைத் தணிவிக்கும் குரலில் அவர் மேலும் சொல்வார்: ''நான் காண்பது மட்டுமல்ல. கடவுளை யாரும் காணலாம்; பரம்பொருளை யாருமே அநுபவிக்கலாம். நான் உன்னோடு உரையாடுவது போல அவனுடன் பேசலாம். ஆனால் அதற்கு யார் சிரத்தை கொள்கிறார்கள்? மனைவி மக்களுக்காகவும், சொத்து சுதந்திரங்களுக்காகவும் வெள்ளமாகக் கண்ணீர் பெருக்குகிறார்கள். ஆண்டவனுக்காக அழுபவர்கள் யார் இருக்கிறார்கள்? அவனுக்காக ஒருவன் அந்தரங்க சுத்தத்துடன் கதறி அழுதால் நிச்சயமாக அவன் தரிசனம் தருவான்.''

கடவுளைக் காண வேண்டும் என்று இதய பூர்வமாக அழ வில்லை நரேந்திரன். கடவுளைக் காண முடியுமா என்று புத்தி பூர்வமாக அறிவதற்காகக் கனன்றெழுந்தவனே அவன். அறிவில் பிறந்த அந்தக் கனலைவிட, அன்பில் பிறந்த கண்ணீரே ஆண்டவனிடம் இட்டுச் செல்லும் என்பதை அந்தச் சந்திப்பின் போதே சொல்லாமல் சொல்லி விட்டார் குருமகராஜ்.

அறிவுக்கனலையே அருட்புனலாக்கும் ரஸவாதத்தைத் தாம் செய்யப் போவதற்கு முன்னுரையாகப் பேசி விட்டார்.

இந்தச் சந்திப்பைப் பற்றி நரேந்திரன் எண்ணியதை ஸ்வாமி விவேகாநந்தரின் வாய் மொழியாகவே கேளுங்கள்: ''அவருடைய பேச்சு உடனேயே என் உள்ளத்தில் உண்மை எனப் பதிந்தது. 'கடவுளைக் கண்டிருக்கிறேன்' என்று நிரத்துடன் சொல்லக் கூடிய ஒருவரை, 'மதம் என்பது அநுபவ பூர்வமாக உணர வேண்டிய உண்மை; உலகை நாம் அநுபவிப்பதைவிட அனந்தமான மடங்கு ஆழ்ந்த உணர்வுடன் அநுபவிக்க வேண்டிய உண்மை மதம் என்பது' என்று கூறும் ஒருவரைக் கண்டு விட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டது. இவ்விஷயங்கள் அவருடைய உதட்டிலிருந்து வெளியாகும் போது, சாதாரணமான சமயப் பிரசாரகரைப் போல அவர் பேசவில்லை என்ற நம்பிக்கை எனக்கு உண்டாயிற்று. தம்முடைய மெய்யான உணர்வுகளின் அடி ஆழத்திலிருந்தே அவர் பேசுகிறார் என்று உணர்ந்தேன். எனினும் இப்படியெல்லாம் பேசியவர் என்னிடம் ஏன் அப்படி விசித்திரமாக நடந்து கொண்டார் என்பது மட்டும் எனக்குப் பொருத்தமாகப் படவில்லை. ஏதோ ஒரு பொருளிலேயே மனசை ஆழச் செலுத்திப் பித்துப் பிடித்துப் போனவர் — 'மேனியா'க்காரர் — அவர் என்றே முடிவு கட்டினேன். என்றாலும் அவ



அனைத்திலும் முக்கியமானது...

மாதம் பிறந்ததும் மளிகைக் கடைக்காரர், வீட்டுச் சொந்தக்காரர், ஜவுளிக்கடை மற்றுமுள்ள பலரின் கணக்குகளை நீங்கள் தீர்த்து வருகிறீர்கள். நீங்கள் இல்லாவிட்டாலும் கூட இவர்களின் கணக்கு மாதந்தோறும வந்து கொண்டிருக்குமல்லவா! ஆயுள் இன்சூரன்சுப் பாலிசி ஒன்று எடுத்து அதன் பிரீமியங்களை தொடர்ந்து செலுத்தி வருவதுதான் இத்தகையோரின் கடன்களை அடைக்க நீங்கள் உறுதி கொள்ளும் ஒரே வழி. ஆயுள் இன்சூரன்சு முகவருடன் (ஏஜெண்டு) கலந்தாலோசியுங்கள்.

ஆயுள் இன்சூரன்சு

போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை.

இந்திய அரசாங்கம்

பிரீமியம் பரிசுப் பத்திரங்கள் 1963

பண்டிகை தினங்களில்

வெகுமதி அளிக்க சிறந்த பரிசு

1963, டிசம்பர் 31ந் தேதி வரைதான் விற்பனை செய்யப்படும்.

இப்பொழுதே பத்திரம் வாங்கி அடுத்த ஆண்டு ஒரு கவர்ச்சிகரமான பரிசைப் பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

இதர விவரங்கள் பின் கண்ட இடங்களில் கிடைக்கும்.

ரிஸர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் எல்லா காரியாலயங்கள்,
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் அதன்
உப பாங்குகளின் கிளைகள்.
எல்லா தலைமை தபால் நிலையங்கள்
இலாகா உப தபால் நிலையங்கள்.

தேசீய சேமிப்பு நிறுவனம்

DA 63/310

ருடைய துறவின் மகத்துவத்தை என்னால் மதித்துப் போற்றாமல் இருக்க முடியவில்லை. 'அவர் பித்தராக இருக்கலாம். எனினும் பாக்கியசாலிகளான சிலரே இவ்வளவு துறவுணர்ச்சி பெற்றிருக்க முடியும். அவர் சித்தப் பிரமை பிடித்தவரா யிருக்கலாம்; ஆனால் இம் மனிதர் புனிதமானவர்களுக்கெல்லாம் புனிதமானவர், இவர் ஓர் உண்மையான சாது. அதற்காகவே மன்பதையால் பணிவுடன் போற்றத் தக்கவர்' என்று எண்ணமிட்டேன். போராடும் எண்ணங்களுடன் அவர் முன் தண்டனிட்டேன்; கல்கத்தாவுக்கு நான் திரும்புவதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டேன்.''


தெய்வம் உண்டா இல்லையா என்று நரேந்திரன் சந்தேகப்பட்டிருக்கலாம். ஹிந்து சமயம் சரியானதுதானா என்று சந்தேகப்பட்டிருக்கலாம். ராமகிருஷ்ண தேவர் புத்திசுவாதீனம் படைத்தவர் தானா என்பது பற்றியும் அவன் சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனால் காவில் நகம் முளைத்த நாள் முதலாக நரேந்திரன் சந்தேகப்படாமல் ஏற்ற இரண்டு தத்துவங்கள் உண்டு. அவை தூய்மையும் துறவுமேயாகும்.

ஆகையால், துறவறத்தையும், தூய்மையையுமே முக்கியமாக வைத்து, அவற்றின் மீது ராமகிருஷ்ணரின்பால் நரேந்திரன் கவரப்பட்டதில் வியப்பில்லை அல்லவா? தேனைச் சுவைக்காகப் பருகினாலும் அதன் மருத்துவ குணங்களால் பயன் பெறலாமல்லவா? ராமகிருஷ்ணரை வேறெதற்கோ நரேந்திரன் அணுகினாலும் அவரது பக்தியையும் ஞானத்தையும் எப்படிப் பெறாமலிருக்க முடியும்?

தட்சிணேசுவரச் சந்திப்பாகி ஒரு மாதம் வரையிலும் நரேந்திரனுக்கு மீண்டும் ராமகிருஷ்ணரிடம் செல்ல இயலவில்லை. எனினும் அந்த ஒரு மாதமும் முதல் சந்திப்பே அவனது மனசில் தொடர்ந்து நிகழ்ந்து வந்தது. அதனை நினைந்து நினைந்து வியந்தான் நரேந்திரன். 'பித்தர் என்று அவரை நான் கருதிய போதிலும் அவருடைய அண்மையில் எவ்வளவு புனிதம் பெற்றேன்?' என்று எண்ணிப் பார்த்தான். 'ஊசி காந்தத்தினை அணுகுதல் போலவே ஓர் உறவும் உன்னி உன்னி'ப் பார்த்தான் நரேந்திரன். 'தட்சிணேசுவரத்தில் எல்லாமே எத்தனை விசித்திரம் — பரமஹம்ஸ ராமகிருஷ்ணரிடம் பக்தி பூண்ட மக்களின் செய்கைகள், அவரது பரவச நிலை, அந்தச் சூழலில் கமழ்ந்த பாவனம், அவருடைய வாக்கு, அதனைக் கேட்டுத் தனது ஆத்மா உயரக் கிளம்பியது—இதெல்லாம் என்ன மாயம்?'

இரண்டாம் முறை தட்சிணேசுவரம் வந்த போது, பரமஹம்ஸர் விரும்பிய படி தனியாகவே சென்றான் நரேந்திரன்.

நேராக ராமகிருஷ்ணரின் அறைக்குச் சென்றான். தாம் சயனிக்கும் மெத்தையை அடுத்துப் போடப்பட்ட சிறிய மெத்தையில் அவர் அமர்ந்திருந்தார். எப்போதுமே அதில் அமருவதுதான் அவரது வழக்கம். நரேந்திரனைக் கண்டவுடன் அவனை மிகுந்த அன்புடன் அழைத்த அவர் தமக்கு அருகிலேயே அவனை மெத்தையில் அமரச் செய்தார். அடுத்த கணமே அவரது உணர்வுகள் ஓங்கி எழுந்தன. நரேந்திரன் மீது பதிந்த நோக்குடன், எதையோ முணுமுணுத்தவாறு அவனை நெருங்கினார் அவர். முன் சந்திப்பின் போது செய்த மாதிரியே அவர் விசித்திரமாக ஏதோ செய்யப் போகிறார் என்று எண்ணலானான் நரேன். ஆனால் அவரோ முன் சந்திப்பை விட அதி விசித்திரத்தை இம்முறை நிகழ்த்தினார். தமது வலது பாதத்தை நரேந்திரனின் உடலில் பதித்தார்.



சரித்திர வரலாறுகளைச்
சுவைபடச் சொல்வது
கல்கி

வாரந்தோறும் உங்கள் வீடு தேடி வர இன்றே
சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்

	வருஷ சந்தா	ஆறு மாதம்
இந்தியா, இலங்கை	15—00	7—50
பர்மா, மலேயா, வெளிநாடுகள்	18—00	9—00

தனிப் பிரதி விலை 30 நயா பைசா

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி.பி.பி. கிடையாது.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை - 10



பொருட் செல்வத்தை மாடாகவும், மனையாகவும், பணமாகவும், பூமியாகவும் பல விதங்களில் வழங்குவது போல் பரம ஞானச் செல்வத்தையும் பல விதங்களில் வழங்க முடியும். அருள் வாக்கால் வழங்கலாம்; திருநோக்கால் வழங்கலாம்; ஸ்பரிசத்தால் வழங்கலாம். இவற்றில் திருவடி தீக்ஷை என்பது மிக மிகப் பவித்திரமானதாகும். ஈசுவரனே தனது திருவடியை வன்றொண்டராகிய சுந்தரர் முதலிய பல மெய்யடியார்களின் சிரஸில் பதித்து ஞான தீக்ஷை அளித்திருக்கிறன். 'தாளிணை என் முடி சூட்டி' என்று தாயுமானவர் போன்ற பல அநுபூதிச் செல்வர்கள் பாடியுள்ளனர்.

திருவடி தீக்ஷை நரேந்திரனுக்குக் கிடைத்தது. ஆனால் சிரஸில் பாதம் பதித்து, சிரம் குறிக்கும் புத்தியை ராமகிருஷ்ணர் அருளுக்கு ஆட்கொள்ளவில்லை. நரேந்திரனின் கூரிய பகுத்தறிவுக்கு இன்னும் சிறிது வேலை கொடுக்க வேண்டும்; அவனது உதாரணத்தைக் கண்டு தீவிர பகுத்தறிவுவாதியும் தெளிவு பெற வேண்டும் என்று பரமஹம்ஸர் எண்ணினரோ என்னவோ ? அதனுல்தான் அவனது உடலில் பாதத்தைச் சூட்டினர்.

உடனே ஒரு மகத்தான விந்தை நிகழ்ந்தது. நரேந்திரனுடைய உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பு, ஒரு குதுகுதுப்பு ஏற்பட்டது. கண் முன்தெரிந்த சுவர்களும், அந்தச் சுவர்களுக்கு உட்பட்டிருந்த சகலமான பொருட்களும் சுழன்று சுழன்று சூனியமாகக் கரைந்தன. சுவர்களுக்கு அப்பாற்பட்ட தோட்டமும், துரவும், கங்கையும், அந்தக் கங்கையைத் தொடும் வானும் எல்லாமே சுழன்று சுழன்று சூனியமாகக் கரைந்தன. ஆகா, அது மட்டுமல்ல; நரேந்திரனுமே அந்த மகாசூனியத்தில் கரையத் தொடங்கினன்.

'முடியாது; கரைய முடியாது ; கூடாது, கரையக் கூடாது; மாட்டேன், கரைய மாட்டேன்' என்று அவனது உள்ளம் அலறியது. பயப்பிராந்தி அடைந்த நரேந்திரன், ''ஐயா, என்னை என்ன செய்கிறீர்கள்? எனக்கு வீடு வாசல் உண்டு; பெற்றோரும் உற்ரோரும் உண்டு'' என்று கூவினன்.

பரமஹம்ஸர் கடகட வென்று சிரித்தார். அவனது மார்பைத் தட்டிக் கொடுத்தபடி, ''சரி, இது முடிந்து போகட்டும். உரிய காலத்தில் தானே எல்லாம் நடக்கும்'' என்றார்.

அதென்ன, மாந்திரிக சக்தியா ? அவர் அவ்வாறு கூறியதுதான் தாமதம், நரேந்திரனின் அதிசயமான அநுபவம் அப்படியே மாய்ந்து விட்டது. நரேந்திரன் நரேந்திரனுனன். அந்தச் சுவர்களும், அவற்றுக்கு உட்பட்டிருந்த சகலமான பொருட்களும் அவை அவை ஆயின. அந்தச் சுவர்களுக்கு அப்பாற்பட்ட தோப்பு தோப்பாயிற்று; துரவு துரவாயிற்று; கங்கை கங்கையாயிற்று; தொடுவானம் தொடுவானமாயிற்று.

இந்தச் சம்பவத்தைப் பிற்காலத்தில் விவரித்த விவேகாநந்தர் கூறுவார்: ''நான் இந்த நிகழ்ச்சியை விவரிப்பதற்கு எவ்வளவு போது ஆகுமோ அதற்குள்ளாகவே இத்தனையும் நடந்தேறிவிட்டன. அவ்வளவு குறுகிய காலத்தில் நடைபெற்றாலும் அது என் அறிவை ஒரு புரட்டுப் புரட்டி விட்டது. இதற்கென்ன அர்த்தம் என்று நான் ஆச்சரியத்துடன் எண்ணலானேன். 'இத்தனை அற்புதமும் இந்த மனிதர் நினைத்தமாத்திரத்தில் நிகழ்கிறது. இவர் நினைத்த மாத்திரத்தில் மறைகிறதே, அதெப்படி? மெஸ்மெரிஸம் என்றும் ஹிப்னுடிஸம் என்றும் சொல்லப்படும் மாயாஜால வசீகரணத்தைச் சேர்ந்தது தானு இது?' என்று நான் என்னையே கேட்டுக்கொண்டேன். 'இருக்க முடியாது. இந்த ஜால வித்தைகள் எல்லாம் பலவீனமான மனசுள்ளவர்களைத்தான் மயக்கும். நானே இதற்கு நேர்மாறான மனப்போக்குள்ளவன் என்று பெருமைப்படுபவன் அல்லவா? அப்படி ஒன்றும் நான் ராமகிருஷ்ணர் என்ற அம்மனிதர் என்னைவிட சக்தி பொருந்தியவர் என்று எண்ணி அவரிடம் அதுவரை சரண் புகுந்து விடவும் இல்லையே! பித்தேறியவர் அவர் என்றுதானே நினைத்திருக்கிறேன்? இவ்வாறிருந்தும் நான் திடீரென இத்தகைய மாறுபட்ட அநுபவத்துக்கு ஆளானேன் என்றல் அதற்குக் காரணம் என்ன?' என்றல் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. நான் என்னை நன்கு கண்காணித்துக் கொள்ள வேண்டும்; மீண்டும் அம்மனிதர் தம் சக்தியை என் மீது பிரயோகிக்க இடமளிக்கக் கூடாது என்று உறுதி பூண்டேன்.

''என்னுடைய அதிசய அநுபவம், குழந்தையின் தூய்மையும் எளிமையும் ஸ்வச்சமாகக் கூடிய அந்த அசாதாரண மனிதர் — இரண்டின் உண்மையான இயல்பையும் அறிய மாட்டாமல் குழம்பினேன். விஷயங்களின் யதார்த்த நிலையை மதிப்பிடுவதில் நான் அடைந்த தோல்வியில் என்னுடைய பகுத்தறிவு மனப் போக்குக்குச் செம்மையான அடி விழுந்தது.''

தட்சிணேசுவரத்தில் நிகழ்ந்த இரண்டாவது சந்திப்பில் நரேந்திரன் இப்படியெல்லாம் உள்ள உணர்ச்சலுக்குஆளான போதும் ராமகிருஷ்ணரோ சர்வசகஜமாகவே அவனுடன் பழகத் தொடங்கினார். அன்புடன் உபசரணைகள் புரிந்தார். நரேந்திரனிடம் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் அவர் காட்டிய அக்கறை அவன் நெஞ்சை அள்ளிற்று. அவர்பால் அவன் இழுக்கப்பட்டான். பகல்போது முடிந்து மாலை வேளை தொடங்கிற்று. வீடு திரும்ப விடை கேட்டான் நரேந்திரன். ராமகிருஷ்ணரின் முகத்தில் உடனே துயர ரேகைகள் படர்ந்தன. எவ்வளவு விரைவில் மீண்டும் தட்சிணேசுவரம் வர முடியுமோ அவ்வளவு விரைவில் வருவதாக நரேந்திரன் வாக்களித்த பின்னரே அவர் பிரியாவிடை கொடுத்தார்.

சில நாட்கள் சென்றன.

மூன்றும் முறையாகத் தட்சிணேசுவரத்துக்கு வந்தான் நரேந்திர நாதன்.

தான் ராமகிருஷ்ணரின் மகத்தான சக்திக்கு ஆட்படலாகாது என்று அவன் எவ்வளவோ 'காபந்து' செய்து கொண்டும் அது பலிக்க வில்லை. சமுத்திரத்தில் விழும் நீர்த் துளி தனது உருவத்தைக் காத்துக் கொள்ள முயலும் அசாத்தியமான முயற்சியாகவே அது ஆயிற்று.

நரேந்திர நாதனையும் அழைத்துக் கொண்டு ராமகிருஷ்ணர் உலாவக்கிளம்பினார். யதுநாதமல்லிகரின் பூங்காவில் இருவரும் அமர்ந்தனர்.

ராமகிருஷ்ணர் பரவச நிலை அடைந்தார். அந்த நிலையிலேயே, அப்பூங்காவில் உள்ள மலர்களை யெல்லாம் விட மென்மை வாய்ந்த தம் கரமலரை நரேந்திரநாதனின் மீது வைத்தார்.

நீர்ச் சுழலில் அகப்பட்ட துரும்பினால் 'நான் சுழல மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிக்க முடியுமா? நரேந்திர நாதன் மேலே, மேலே செல்லலானான்.

முன் முறை அரை குறை சுயப் பிரக்ஞையாவது இருந்ததால் தன்னை அந் நிலையிலிருந்து விடுவிக்கும்படி அலற முடிந்தது. இம்முறையோ அகண்ட ஆனந்தத்தில் பரிபூரணமாகக் கலந்து விட்டார் நரேந்திர நாதர்.

(யாருக்கும் கிடைக்காத நிலை— அதனினும் உயர்ந்த நிலையில்லாத அத்வைதானுபவ நிலை — கைகூடப் பெற்ற வரை இனியும் ஒருமையில் குறிப்பிடுவது அபசாரமல்லவா?)

'சொல்லரிய தன்மையதா யான்றுனென்னத் தோன்றுதெல்லாம் விழுங்கும் சொரூபமாகிய' மெய்ப் பொருள் நரேந்திரனையும் அப்படியே விழுங்கி விட்டது. மீண்டும் நரேந்திரர் சுய உணர்வு பெறும் போது குருநாதர் அவருடைய மார்பைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

பல காலம் தவமிருந்தும், ஜபம் புரிந்தும், யோகம் செய்தும் எய்த இயலாத உன்னத சமாதி நிலை இவ்வளவு எளிதில் கிட்டவாவது என்று மலைக்க வேண்டாம்! மின்சார விசையைப் போடுவதும் அணைப்பதும் எத்தனை எளிய காரியம்? எனினும் இந்த எளிய செயலைச் செய்தவுடன் பிரம்மாண்டமான இயந்திரங்களெல்லாம் இயங்கவில்லையா ? அதே போல் அளப்பரிய வேகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் ராட்சத இயந்திரங்கள் செயலற்று விடவில்லையா? அவ்வாறிருக்க, ஞான மின்சார நிலைக்களன்களாகிய மகான்களின் ஒரு குளிர்ந்த கடாக்ஷம், ஓர் இன்சொல், அல்லது ஒரு ஸ்பரிசம் அற்புதங்களை நிகழ்த்துவதில் என்ன அதிசயம் இருக்கிறது?

நரேந்திர நாதர் சமாதிநிலை உறு முன்னர் பற்பல நிலைகளில் சஞ்சரித்தார். அப்போது தமது பிறப்புக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் கண்டு கூறும் உயர்நிலை கைவரப் பெற்றிருந்தார். அச்சமயத்தில்தான் ராமகிருஷ்ணர் தாம் நரேந்திரரைப் பற்றி என்ன எண்ணி யிருந்தாரோ அதனைக் கேள்விகள் கேட்டு விடைபெற்று நிச்சயப்படுத்திக் கொண்டார்.



கணவன்: ஒரு ஜோஸியம் சொல்லட்டுமா?

மனைவி: என்ன?

கணவன்: இன்று நீ என் கோட்டை உதறித் தூசி தட்டி மாட்டவில்லை.

மனைவி: அதெப்படி? நான் தூசி தட்டித்தான் மாட்டினேன்!

கணவன்: எதற்காகப் பொய் சொல்லுகிறாய்? நான் நேற்று வைத்திருந்த ஒரு ரூபாய் நோட்டு அப்படியே இருக்கிறதே!



வீட்டு எஜமானி *(திருடனிடம்):* உடனே இங்கிருந்து ஓடிவிடு. இல்லா விட்டால் என்னுடைய கணவரைக் கூப்பிடுவேன்!

திருடன்: பயமில்லை, தாராள மாகக் கூப்பிடுங்கள்! அன்றைக்கு ஒரு நாள் அவரிருக்கும்போது நான் வந்தேன். உங்களைக் கூப்பிடுவதாக அவர் பயமுறுத்தினார்!

பரம்பொருள் குழந்தையாகிப் பூவுலகுக்கு வந்து கமார்புகுரில் கதாதரனாகப் பிறந்தது அவருக்குத் தெரியும். தாம் அவதார புருஷர் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இப்போது அந்தக் குழந்தையின் வேண்டுகோளுக்கிணங்கி நில உலகில் பிறந்த மகரிஷி யார் என்பதையும் அவர் ஐயமறத் தெரிந்து கொண்டு விட்டார்.

பரவச நிலையில் இருவரும் இருக்க, பரமஹம்ஸர் வினாக்கள் வினவியதும், அதற்குத் தம்மையறியாமலே நரேந்திரர் விடை பகர்ந்ததும் எண்ணி எண்ணி ருசிக்க வேண்டிய நிகழ்ச்சியாகும். மகா சமுத்திரங்கள் இரண்டு பேசிக் கொண்டது போன்ற, உன்னத பர்வதங்கள் இரண்டு உரையாடிக் கொண்டது போன்ற அந்தச் சம்பவத்தை உள்ளவாறு எழுத யாரால் முடியும்? எழுத்தில் காண முடியாததை வாசகர்கள் தங்கள் கருத்தில் கண்டு பூர்த்தி செய்து கொள்வார்களாக!

நரேந்திரரிடம் அவருடைய பூர்வ சரித்திரம் பற்றியும், உலகில் அவர் ஆற்ற வேண்டியிருந்த தெய்வப் பணி குறித்தும், எவ்வளவு காலம் அவர் இந்த உலகில் வாழப் போகிறார் என்றும் பரமஹம்ஸர் கேட்டார். நரேந்திரர் தமக்குள்ளேயே ஆழமாக முங்கி, பொருத்தமான விடைகளைக் கூறினார். பரமஹம்ஸர் தாமாகவே நரேனிடம் என்னென்ன கண்டாரோ, அவரைப் பற்றி என்னென்ன அநுமானங்கள் செய்திருந்தாரோ அவற்றையே அவரது விடைகள் உறுதிப்படுத்தின.

இந்த வினா விடைகள் என்ன என்பது உலகுக்குத் தெரியாத ஓர் ஊமைக் கவிதையாகவே உள்ளது. ''அவை ரகசியமாகவேதான் இருக்கும். பூரணத்துவம் பெற்ற ஒரு முனிவன் அவன்; தியான யோகத்தில் தேர்ந்த அப்பியாசமுள்ளவன்; தன்னுடைய உண்மையான இயல்பை அவன் என்று உணருகிறானோ அன்றே அவன் தானாகச் சங்கற்பித்து யோக உபாயத்தின் வழியே தன் உடலை உகுத்து விடுவான் — என்பதையெல்லாம் நான் அறிந்தேன்'' என்று பிற்காலத்தில் ராமகிருஷ்ண தேவர் கூறினார்.

நரேந்திரருக்கே அப்போது என்ன நிகழ்ந்தது என்று தெரியவில்லை. ஸ்வாமி விவேகாநந்தரின் சரித்திரத்தை எழுதிய மேல்நாட்டு சிஷ்யர்கள் இவ்விடத்தில் கூறுவதாவது: ''நரேந்திரர் தமது பரவச நிலையில் என்ன நிகழ்ந்தது என்று அறிய முடியாததற்குக் காரணம் குருமஹராஜ் அவர்களின் சங்கற்பமாகத்தான் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் விட உயர்ந்த நிலையினை அவ்வளவு விரைவில் அடைந்ததைத் தமது சீடர் அறியக் கூடாது என்று அவர் எண்ணியிருக்கக் கூடும். அந்த நிலைக்கு நரேந்திரர் தயாராக இருக்கவில்லை. எனவே அதனைப் பற்றி அறிய அவர் அச்சம் கொண்டிருப்பார். நரேந்திரர் சமாதி நிலையில் இருக்கும் போது அவருடைய உள் மனசிலிருந்த எண்ணங்களை மனோதீதமான மார்க்கத்தில் பலவந்தமாகத் திருப்பி விட்டார் குருமஹராஜ். இதனால் நரேந்திரரின் மனசில் ஒரு மாபெரும் உருமாற்றத்தை உண்டாக்கி விட்டார். இது காரணமாக, ஸ்ரீ ராமகிருஷ்ணர் பித்தேறியவர் அல்லர்; உலகெங்கும் நிறைந்துள்ள எண்ணற்ற பித்தர்களிடையே இவர் ஒருவர் தான் பித்துப் பிடிக்காமல் இருப்பவர் என்று நரேந்திரர் சிறிது சிறிதாக உணரலானார்...... குருமஹராஜ் ஸ்பரிசித்த க்ஷணத்திலிருந்து அவருடைய உரிமைப் பொருளாக ஆகி விட்டார் நரேந்திரர். எனினும் பிறருக்கு உரிமையாகி விட்ட இந்த நிலையில்தான் நரேந்திரரின் ஆத்மாவுக்குப் பூரணமான சுதந்திரம் கிடைத்தது.''

என்ன அற்புதமான வாசகங்கள்!

**'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'**

என்ற பொய்யாமொழிக்கேற்ப, பந்தங்கள் நீங்கிச் சுதந்திரம் பெறுவதற்காக ராமகிருஷ்ணரிடம் பந்தம் கொண்டுவிட்டார் நரேந்திரநாத தத்தர். **(தொடரும்)**

உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு வேண்டுமா?
நீங்கள் வாங்குவது உயர்ந்ததாக இருக்கவேண்டுமா?
அதைப் பார்த்து எல்லோரும் வியக்க வேண்டுமா?

அப்படியாயின்

சாஸ்திரி கடைப் புடவைகளை வாங்குங்கள்

சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்
பட்டு ஜவுளி உற்பத்தியாளர் & வியாபாரிகள்
வடக்கு மாட வீதி-மயிலாப்பூர்- மதராஸ்-4

போன்: 71719 ஸ்தாபிதம்: 1902 தந்தி: சம்பூர்ணம்

வட இந்திய வாசிகளின் சௌகரியத்துக்காக:

கல்கத்தா: கேசவன்ஸ் லாட்ஜ், 34, Dr. சரத் பானர்ஜி ரோடு, கல்கத்தா-29
போன்: 46-6395

டெல்லி: 4/76, கிருஷ்ணா மார்க்கெட், W.E.A. கரோல்பாக், புதுடெல்லி-5

(தீபாவளிக்காக 3-11-63, 10-11-63 ஞாயிறுகளில் விற்பனை உண்டு)

லிட்கோவின் ஸ்ரீமத் ராமாயண வெளியீடுகள்

1. ஸுந்தர காண்டம்—ஸ்ரீ C. R. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களின் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத் தமிழ் மொழிபெயர்ப்பு—520 பக்கங்கள் ரூ. 12.50
2. தசா புக்திகளும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் — (ஸ்தோத்ரமாலையுடன்) 9 தசைகளுக்கான 9 புத்தகங்கள் ஒவ்வொன்றும் ... ரூ. 2.00
3. ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் திராவிட வேதங்களும் (ஸ்தோத்ரமாலையுடன்)—456 பக்கங்கள் ... ரூ. 3.75
4. **Srimad Ramayanam and All Round Success** (with prayers of Ramayana Deities)—Sargas for Parayana in Samscrit—572 Pages Rs. 9.00




பதிப்பகத்தார்:

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
சென்னை -17

எம். தாமோதரம் & கம்பெனி, அப்பர் பில்டிங்ஸ், சென்னை-1 என்னும் விலாசத்திலும், ஹிக்கின்பாதம்ஸ், சுதேசமித்திரன் ரயில்வே ஸ்டால்களிலும் மற்றும் எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

NALIN

படிக்கணுமா?



குறும்பன்

“சாமீ!”

“என்ன, இளங்காளி?”

“இன்னிக்கு நம்ம வீட்டுக்கு விறகு வாங்கப் போயிருந்தபொழுது வெளியிலே ரிக்ஷாக்காரங்க பேப்பர் படிச்சிட்டிருந்தாங்க. யாரோ பத்துமபூசணி பங்காருசாமியாம்; அவங்க வீட்டுக்கு ஒரு வேலையாள் தேவையாம். மாதம் அம்பது ரூபா சம்பளம் தருவாங்களாம். இங்கிலீசிலே விண்ணப்பம் அனுப்பணுமாம். நான் போவலாம்னு நெனக்கிறேன். உங்க தட்டெழுத்திலே ஒரு விண்ணப்பம் அடிச்சுத் தர்றீங்களா?”

தட்டெழுத்துத் தாமோதரனுக்கு 'ஜாப் டைப்பிங்'தான் பிரதான தொழில். இளங்காளி கூலிக்குச் சுமை சுமந்து பிழைத்தான் என்றால், தாமோதரன் நாலணா ஆறணாவுக்கு டைப் செய்து கொடுத்துப் பிழைத்து வந்தான்.

“இளங்காளி! உன் பிழைப்பும் என் பிழைப்பும் ஒரு மாதிரிதான். நீ கூலிக்கு விறகு சுமக்கிறாய். நான் கூலிக்கு டைப் அடிக்கிறேன். ஒரு குண்டு விறகு தூக்கி வந்தால் உனக்குப் பத்துப் பைசா கூலி. நான் ஒரு லெட்டர் 'டைப்' அடித்தால் எனக்கு முப்பத்தைந்து பைசா கூலி. நீயும் கூலிக்காரன், நானும் கூலிக்காரன். உன்னிடம் நான் கூலி வாங்கக் கூடாதுதான். இருந்தாலும் இந்த வயிறு இருக்குதே....”

“அதைப் பத்தி ரோசனை பண்ணாதீங்க, சாமி! உங்க நிலைமை எனக்கு நல்லாப் புரியுது. உங்க கூலியை நான் குறைச்சிட மாட்டேன். உங்களுக்கு விறகு தூக்கி வந்து போட்டே என் கடனை அடைச்சிடுவேன்!” என்றான் இளங்காளி.

முகதாட்சிண்யத்துக்காகத் தாமோதரன் அவனுக்கு ஒரு விண்ணப்பம் டைப் அடித்துக்கொடுத்தான்.

விண்ணப்பத்தைக் கையில் வாங்கிக் கொண்ட இளங்காளிக்குப் பங்காருசாமியின் வீட்டில் வேலை கிடைத்துவிட்டதாகவே நினைப்பு. அந்த மிதப்பில் பங்காருசாமியின் வீடு தேடிப் போனான்.

பங்காருசாமி வாசல் வராந்தாவிலேயே உட்கார்ந்திருந்தார். இளங்காளி பவ்யமாகப் போய் நின்று தன் விண்ணப்பத்தை நீட்டினான். படித்துப் பார்த்த பங்காருசாமி, ஒரு முறை இளங்காளியை ஏற இறங்கப் பார்த்தார். “சரி, எதுவரை படிச்சிருக்கே?” என்று கேட்டார்

“இஸ்கூல் கல்லையே நான் மிதிச்சதில்லீங்க. ஏதோ கோணாமாணான்னு கைநாட்டுப் போட வருமுங்க. அதுவும் தமிளிலே தானுங்க!” என்றான் இளங்காளி.

“இந்தக் கடுதாசி நல்லா அடிச்சிட்டு வந்திருக்கியே! இது யார் எழுதிக் கொடுத்தது?” என்று கேட்டார் பங்காருசாமி.

“அதுவா? எனக்கு வேண்டியப்பட்ட ஓர் ஐயா. அவங்களுக்கு இதுதான் பிழைப்புங்க.”

“எனக்கு நாலெழுத்துப் படிச்சவன் தானப்பா வேணும். எனக்குப் படிக்காத முட்டாள் வேலைக்குத் தேவையில்லை.”

“எசமான்! அப்படிச் சொல்லக்கூடாது. படிச்சவங்களுக்குப் படிக்காதவங்க மட்டம்னு நினைக்கக் கூடாது. எனக்கு உங்க ஊட்டிலே வேலை கொடுத்துப் பாருங்க. ஒரு குறைவுக்கும் இடம் வைக்காமல் நான் வேலை செய்யறேனா இல்லையான்னு கவனிச்சுக்குங்க. இந்த ஏழைக்கு வேலை கொடுத்தீங்கன்னா உங்களுக்குக் கோடிப் புண்ணியமுண்டுங்க!” என்றான் இளங்காளி.

“இந்தப் பத்மபூஷண் பங்காருசாமி சொன்னால் சொன்னதுதான்! எனக்குப் படிக்காத ஆள் தேவையில்லையப்பா!”

“எசமான்!”

“ஷட் அப்!” பங்காருசாமி இளங்காளியை அடிக்காத தோஷமாக விரட்டி அடித்தார். குனிந்த தலை நிமிராமல் வெளியேறினவன்தான் இளங்காளி. அதற்குப் பிறகு அவனை அந்த ஊரில் விறகு சுமப்பவனாக யாருமே பார்க்கவில்லை.

தமது அறுபதாவது ஆண்டு விழாவைப் பத்மபூஷண் பங்காருசாமி அதிவிமரிசையாகக் கொண்டாடினார். அதைக் காட்டிலும் விமரிசையாகக் கொண்டாடினார் இ. காளி என்னும் அதே நகரத்தில் உள்ள பிரமுகர், தமது ஐம்பதாவது ஆண்டு விழாவை.

பங்காருசாமிக்கும் அழைப்பு வந்திருந்தது. பெருந்தனக்காரரது மிடுக்குடன் போய் இறங்கினார்.

குளிர்பதன அறையிலே கோலாகலமான விருந்து. இ. காளியைச் சந்தித்துத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார் பங்காருசாமி. இ. காளி தாமே அருகில் நின்று அவரைப் பிரத்தியேகமாகக் கவனித்தார். பங்காருசாமிக்கு உச்சி குளிர்ந்தது. விருந்து முடிந்ததும் தமது மாளிகையைச் சுற்றிக் காட்டப் பங்காருசாமியைத் தாமே அழைத்துச் சென்றார் இ. காளி.

மாளிகையின் பணிக்கைப் பார்த்துவிட்டுப் பங்காருசாமி பிரமித்தே போய்விட்டார். தட்டெழுத்துக்காரர்களுக்கும் குறுக்கெழுத்துக்காரர்களுக்கும்கூட அல்லவா குளிர் பதன அறையும், அற்புதமான நாற்காலி மேஜைகளும் போட்டிருந்தார் இ. காளி.

ஒரு தட்டெழுத்துக்காரருக்குத் தனி அறை; அவர் அறைக்குள் தள்ளு கதவைத்

தள்ளிக்கொண்டு இருவரும் நுழைந்தபோது அவர் எழுந்திருக்க முயன்றார். "சாமி, அபசாரம்! நீங்க எழுந்திருக்கக் கூடாது!" என்று கூறி அவரை உட்கார வைத்தார் இ. காளி. "சார் பேர் தாமோதரம்! என் நலனில் ரொம்ப அக்கறை கொண்டவர்!" என்று கூறிப் பங்காருசாமிக்கு அவரை அறிமுகப்படுத்தி வைத்தார். பிறகு "இந்த ஊரிலேயே பெருந்தனக்காரர் இவர். பத்ம பூஷண் பட்டம் வாங்கினவர்" என்று பங்காருசாமியைத் தட்டெழுத்துத் தாமோதரத்துக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பிறகு இருவரும் அவ்விடத்தை விட்டு வெளியே வந்தனர். வீடு முழுவதும் சுற்றிப் பார்த்தாகிவிட்டது. பங்காருசாமிக்கு ஒரு வியப்பு. 'இத்தனை பெரிய பணக்காரர் தமது மாளிகையில் ஓர் அழகான நூல் நிலையத்தையும் ஏற்படுத்தி யிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!' என்று எண்ணினார். கடைசியில் வாய்விட்டும் சொல்லிவிட்டார். "இத்தனை பெரிய வீட்டுக்கு ஒரே ஒரு குறை!" என்றார்.

"என்ன?"

"ஏராளமான நூல்களைச் சேர்த்து நல்ல நூலகம் ஒன்று நிறுவியிருக்கலாமே!"

"நிறுவியிருக்கலாம். ஆனால் பயன்?"

"பொழுது போகாத வேளைகளில் புத்தகங்களை எடுத்துப் படிக்கலாம் அல்லவா?"

"படிக்கலாம். ஆனால் எனக்கு எழுதப் படிக்கத் தெரியாதே!"

"என்ன? எழுதப் படிக்கத் தெரியாதா?"

"ஆமாம். அதற்காக எழுதப் படிக்கத் தெரியாததை நான் இழிவாகக் கருதவில்லை!"

"அதற்குச் சொல்லவில்லை நான். இந்தச் சொத்துக்கள் உங்களுடைய சம்பாத்தியம்தானே?"

"ஆமாம். எப்படியோ தொடங்கிய வாழ்க்கை. அன்றாடம் சோற்றுக்குத் தாளம் போட்ட நாளும் உண்டு. ஆண்டவன் கண் திறந்தார். யாரையும் அறியாமல் இத்தனை பெரிய சொத்துக்கு அதிபதியானேன். யாரையும் மோசடி செய்து சம்பாதித்த பணம் இல்லை. சேர வேண்டிய காலம், சேர்ந்தது!" என்றார் இ. காளி.

"படிப்பில்லாமல் இருக்கும்பொழுதே இத்தனை சொத்து சேகரிக்க முடிந்திருக்கிறதே, உங்களால். படிப்பும் இருந்துவிட்டால் கேட்க வேண்டுமா?"


"படிப்பு இருந்துவிட்டால் நான் இந்த நிலைக்கு ஒரு நாளும் வந்திருக்க முடியாது."

"அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"ஆமாம். உங்கள் வீட்டு வேலைக்காரனாயிருந்திருப்பேன்! நான் சொல்வது உண்மையா இல்லையா என்று நம்ம தட்டெழுத்துத் தாமோதரம் சாமியை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள்!" என்றார் இ. காளி.

இ. காளி என்னும் இளங்காளி தம் வீட்டுக்கு ஒரு காலத்தில் வேலை தேடி வந்தவன் என்பது பத்ம பூஷண் பங்காருசாமிக்குத் தெரியாவிட்டாலும் இளங்காளிக்குப் பங்காருசாமியை நன்கு தெரிந்திருந்தது!

ஒரு கலைக் குடும்பம்



ஆங்கிலப் பட உலகில் 'லயோனல் பாரிமூர்' என்ற பெயர் மிகப் பிரபலமானது. இவரது சகோதரர் ஜாக். இருவரும் நடிகர்களாக விரும்பியதில்லை. பாரிஸ் நகரில் சித்திரக் கலை பயின்றார்கள். இவர்களது படங்களை எந்தப் பத்திரிகையும் வாங்கி வெளியிடவில்லை. சித்திரம் வரையும் ஸ்டுடியோ வைத்திருந்தார்கள். அங்கு உட்கார ஒரு நாற்காலி படுக்க ஒரு பாய் ஏதும் கிடையாது. தரையில்தான் படுத்தார்கள். ரொம்பக் குளிராக இருந்ததால் புத்தகங்களால் தங்களை மூடிக் கொள்ளுவார்களாம்!

இப்படி வறுமையில் வாடிய லயோனல் பாரிமூர் தமது இருபத்தி ஆறுவது வயதில் புகழேணியின் உச்சியிலே உன்னத நட்சத்திரமாக விளங்கினார். இவரது வனப்பு மிக்க சகோதரரான ஜான் பாரிமூர் உலகிலேயே அதிகத் தொகை வாங்கும் நட்சத்திரமாக விளங்கினார். இவர் சகோதரி எதில் பாரிமூர் பேரில் நியூயார்க்கில் பெரிய தியேட்டர் ஒன்று இருந்தது.


இப்படியாக ஒரு கலைக் குடும்பத்தில் தோன்றிய லயோனல் பாரிமூர் நாளடைவில் நடிப்பைத் துறந்து படங்களை டைரெக்ட் செய்யலானார். பத்திரிகைகளும் ரசிகர்களும், "அமெரிக்காவின் தலைசிறந்த நடிகர் தமது திறமையை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்!" என்று குற்றம் சாட்டின. ஆனால் லயோனல் இதனால் சலனமடையவில்லை. நாடக உலகில் முப்பது வருடங்களில் பெற்ற அறிவையும் திறமையையும் ஆற்றலையும் கொண்டு படங்களை டைரக்ட் செய்யலானார். படமெடுக்கும் போதே ஒலிப்பதிவையும் செய்யலாம் என்பதை முதன் முதலில் செயல்படுத்திக் காட்டியவர் லயோனல் பாரிமூர்தான். பேசும் பட உலகிலே பெரும் புரட்சியை உண்டாக்கியது இந்த முறை.

ஐம்பத்தி மூன்றுவது வயதில் இனி தான் நடிக்க லாயக்கில்லை என்று லயோனல் மனப்பூர்வமாக எண்ணிய சமயத்தில் நார்மாஷியரர் அவரை வற்புறுத்தி நடிக்கச் சம்மதிக்க வைத்தார். மறுபடி லயோனல் காமிராவின் முன்னால் போய் நின்றார். அந்தப் படத்தில் நடிப்புக்கு அகாதமி பரிசு பெற்றார். 'தேய்ந்த காசு' என்று ஒதுக்கிய தயாரிப்பாளர்களெல்லாம் மறுபடி வந்து மொய்க்கலானார்கள். படத்துக்கு மேல் படம்; வெற்றிக்கு மேல் வெற்றி! அதிசய மனிதர்தானே இவர்?

நெஞ்சு பொறுக்குதில்லை...



குமரன்



'இன்றைக்கு இரண்டிலொன்று முடிவு கட்டி விடுவது' என்ற உறுதியுடன்தான் நான் அவனுடைய ஜாகைக்கு என் ஸ்கூட்டரைச் செலுத்திக் கொண்டு போனேன். என் உடம்பெல்லாம் முறுக்கேறியிருந்தது. இதயம் 'படபட' வென்று உணர்ச்சி மிகுதியில் அடித்துக் கொண்டது.

நண்பன் — நண்பனா அவன்? இல்லை, துரோகி — துரோகி பாலை எனக்குப் பத்து வருஷங்களுக்கு மேலாகத் தெரியும். ஆனால் கடந்த எட்டு வருஷங்களாகத்தான் நாங்கள் இருவருமாகச் சேர்ந்து 'பால் அண்டு சலம்' என்னும் விளம்பர ஏஜென்ஸியை நடத்திக் கொண்டு வருகிறோம்.

கல்கத்தாவுக்கு வேலை நிமித்தமாக வந்ததும் அங்குள்ள வங்காளியரும் ஆங்கிலேயரும் சுலபத்தில் பெயர் சொல்லி அழைக்க வசதியாகப் பெயரை மாற்றிக் கொள்வதோ சுருக்கிக் கொள்வதோ பெரும்பாலான தமிழர்களின் வழக்கம். அதன்படி சேஷாசலமாகிய நான் சலம் ஆகியிருந்தேன். பாலுக்கு அவன் பெற்றோர் சூட்டிய பெயர் என்னவோ தெரியாது; நான் கேட்கவில்லை. கேட்டாலும் அவனுக்குப் பிடிக்காது; அவன் சுபாவமே அப்படி. பால் என்றே அனைவரும் அழைத்தார்கள். பத்திரங்கள் செக்குகள் எதுவானாலும் பால் என்றே கையெழுத்துப் போடுவான். அவனுடைய நடை, உடை, பாவனை, பேச்சு, தோற்றம், பெயர் இவையெல்லாம் பார்த்தால் அவன் ஓர் ஆங்கிலோ இந்தியனோ எனத் தோன்றும். ஆனால் எனக்கு மட்டும் அவன் முழுக்க முழுக்கத் தமிழன்தான் என்ற உறுதி ஏற்பட்டிருந்தது.

'பால் அண்டு சலம்' மிகக் குறுகிய காலத்தில் பிரமிக்கத் தக்க முன்னேற்றம் அடைந்திருந்தது. பால் காரியாலய நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வான். வர்த்தகப் பிரமுகர்களையும், தொழிலதிபர்களையும், ஓவியர்களையும், புகைப்பட நிபுணர்களையும், பத்திரிகையாளர்களையும் கண்டு பேசி எங்கள் விளம்பர ஏஜன்ஸிக்கு ஆதரவு தேடுவது என் வேலை. காலையில் எட்டு மணிக்குக் கிளம்பி ஊரைச் சுற்ற ஆரம்பித்தேனானால் இரவு எட்டு எட்டரை மணிக்குத்தான் வீடு திரும்புவேன் நான். ஞாயிற்றுக் கிழமை, விடுமுறை நாட்களிலும் எனக்கு ஓய்வு இடையாது. அன்று ஏதாவது ஒரு பார்ட்டி, டின்னர் என்று இருக்கும். பெரிய புள்ளிகளின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்ள, விடாமல் அழைத்த இடத்துக்கெல்லாம் போவேன்.

இதனால் என் மனைவிக்கு என்னிடத்தில் வருத்தம்தான். "வெய்யில், மழை என்றெல்லாம் பாராமல் நாளெல்லாம் சுற்றி அலைந்து ஓடாய் உழைக்கிறீர்கள்; உங்களுடைய நண்பர் மிஸ்டர் பால் ஜம்மென்று ஏர் கண்டிஷன் அறையில் உட்கார்ந்து பொழுதைக் கழிக்கிறார்" என்று அடிக்கடி குற்றம் சாட்டுவாள்.

அப்போதெல்லாம், "தயவுசெய்து உன் அபிப்பிராய சுதந்திரங்களை அடுப்பங்கரையோடு வைத்துக் கொள்கிறாயா?" என்று அடக்கி விடுவேன்.

ஆனால் இப்போது புரிகிறது எனக்கு, அவள் பொருமைப் பட்டதிலும் ஒருபொருள் உண்டு என்று.

அட்டைப் படக்கதை



ரொம்ப ரொம்ப உத்தமன் போல் என்னிடம் நடித்தே என்னை மோசம் செய்து விட்டான் பால். இத்தனை நாட்களாக எத்தனை ரூபாய்களை விழுங்கினானோ? மேலெழுந்த வாரியாகக் கணக்குப் பார்த்தாலும் ஒரு லட்சத்துக்குக் குறைவேயில்லை!

பாலுடைய ஜாகைக்கு எதிரே ஸ்கூட்டரை நிறுத்தி விட்டுக் கட்டடத்துக்குள் நுழைந்தேன். அந்த வீட்டின் ஓர் அறையை மட்டும் பால் முன்பு வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தான். ரொம்ப நாளைக்கு முன்னால் அந்த அறைக்குச் சென்றிருக்கிறேன். அதற்குப் பின் அவனும் அழைக்க வில்லை; நானும் அங்கு போனதில்லை. வேலைதான் சரியாக இருக்குமே எனக்கு.

இப்போது அவன் ஜாகையின் வாசல்புறம்—வெளித் தோற்றம் மாறியிருந்தது போலவே உள்ளேயும் சகலமும் மாறி யிருந்தன. ஒரே ஒரு அறை மட்டுமின்றிக் கீழ் போர்ஷன் முழுவதையுமே அவன் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருப்பது புரிந்தது. ஒருவேளை வீட்டையே விலைக்கும் வாங்கியிருக்கலாம், யார் கண்டது? என் பார்வைக்குத் தென்பட்ட அறைகள் சகலவிதமான நவீன வசதிகளும் கொண்டதாகப் பிரபுக்களின் இருப்பிடம் போல் காட்சியளித்தன. என்னை ஏமாற்றிப் பறித்த பணத்தை ஏராளமாகச் செலவழித்திருந்தாலும் எல்லாவற்றையும் கலாரசனையுடன் செய்திருந்தான் பால்.

ஆனால் அந்தச் சோபாவில் அவனும் அந்த நங்கையும் அமர்ந்திருந்த கோலத்தில் கலாரசனை இல்லை, ஆபாசமாய்த் தோன்றியது. நான் மெல்லத் தொண்டையைக் கனைத்தேன். அவர்கள் திடுக்கிட்டு எழுந்தார்கள். அந்தப் பெண்ணை அடிக்கடி எங்கோ பார்த்திருப்பது போல் எனக்கு ஞாபகம். எங்கே என்று உடனே நினைவுக்கு வரவில்லை. என்னை ஒரு முறை முறைத்துப் பார்த்து விட்டு அவள் வாசலை நோக்கி நடந்தாள். பால் அவளைப் பின் துரத்திக் கொண்டுபோய்ச் சமாதானப் படுத்த முயன்றான். அவள் கோபம் தணியாதவளாக அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டுச் சென்று விட்டாள்.

பால் என் பக்கமாகத் திரும்பி, ''வாசலில் 'காலிங் பெல் —' என்பதாக ஒன்றிருக்கிறதே, அது உன் கண்ணில் படவில்லையா?'' என்று இரைந்து கேட்டான்.

''என் ஆருயிர் நண்பனின் அறைக்குள் வர அனுமதி தேவைப்படும் என்று நான் எண்ணவில்லை'' என்றேன் ஏளனமாக. பின்னர் கடுமையை வரவழைத்துக் கொண்டு, ''பால்! இதெல்லாம் என்ன கூத்து?'' என்று அதட்டுவது போல் கேட்டேன்.

பால் சிரித்தான். ''தெரியவில்லையா, உனக்கு? எனது ம. ம. ம. திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்'' என்றான்.

''அப்படியென்றால்?''

''மது, மங்கை, மஞ்சம் திட்டம்!''

பால் திருமணத்தையே விரும்பாததன் காரணம் எனக்குப் புரிந்தது. கூடவே கோபமும் பொத்துக் கொண்டு வந்தது. ''உன்னுடைய சிரழியும் திட்டத்துக்காக நான் நாய் போலத் தெருத் தெருவாய் அலைய வேண்டும், இல்லையா? என்னுடைய உழைப்பினால் கிடைக்கும் செல்வத்தைக் கொண்டு நீ உப்பரிகையில் உல்லாச வாழ்க்கை நடத்த வேண்டும்! அப்படித் தானே?'' என்று ஆத்திரத்துடன்கத்தினேன்.

அப்புறம் எனக்கும் அவனுக்கு மிடையில்

மர்மக்கதை



பெரிய வாக்குவாதம் நடந்தது. ஒருவரையொருவர் தாறுமாறாகத் திட்டிக் கொண்டோம். நான் ரௌத்திராகார மடைந்தவனாய், திரும்பத் திரும்ப உள்ளங் கையால் மேஜையை ஓங்கி அடித்த வாறே, ''மேலே பேசாதே! உன்னைக் கொன்று விடுவேன்! கொன்றே விடுவேன்'' என்று அலறினேன். என்னை அறியாமல் நான் கூறிய பயங்கரமான வார்த்தைகளின் பொருள் என் மூளைக்கு எட்டியதும் நான் அசைவற்று நின்றேன். பாலும் அதே போல்தான் சிலையாகி நின்றான்.

அந்தக் கணத்தில் என்னை ஒருவித மனச் சோர்வும் உடல் சோர்வும் ஆட்கொண்டன. தள்ளாடியபடி நடந்து போய், ஏர்கண்டிஷன் செய்யப்பட்டிருந்த அந்த அறையின் கதவைத் திறந்தேன்.

அப்போது நான் கண்ட காட்சி சில விநாடிகளுக்கு என்னைத் திகைப்பில் ஆழ்த்தியது. கதவோரமாக ஒருவர், முதுகை வளைத்துத் தலையைச் சாய்த்து அறையில் எழும் சத்தங்களை உன்னிப்பாய்க் காது கொடுத்துக் கேட்கிற பாணியில் நின்று கொண்டிருந்தார். கதவை இலேசாகத் திறந்து வைத்துக் கூட அவர் கேட்டுக் கொண்டிருந்திருக்கலாம். அறையில் ரத்தினக் கம்பளம் விரித்திருந்தபடியால் நான் அவரை நோக்கி நடந்து வந்த ஓசை அவர் செவிகளுக்கு எட்டவில்லை போலும்.

இப்போது திடுக்கிட்டவராய் அவர் நிமிர்ந்தார். நெற்றியைத் தவிர அவர் முகத்தில் வேறு எதையும் பார்க்க முடியாதவாறு அடர்த்தியான தாடி மீசையும், அகலமான கறுப்பு மூக்குக் கண்ணாடியும் மறைத்தன. ''ஸாரி!'' என்று கூறி விட்டுத் தடியை ஊன்றியபடி 'டக் டக்' என்று நிதானமாய் நடந்து மாடியேறிப் போனார். அவருக்குக் கண் பார்வை இல்லை என்பதைச் சுலபமாக அனுமானித்து விட்டேன் நான். வாசலுக்கு வந்து ஸ்கூட்டரைக் கிளப்பினேன்.

அன்று இரவு நான் 'லாக்—அப்'பில் இருந்தேன். பாலுடைய கணக்கற்ற சிநேகிதிகளில் ஒருத்தி அவனைப் பார்க்க வந்து விட்டுப் பதறித் துடித்துப் போலீசுக்குப் போன் செய்தாளாம். போலீசார் துரிதமாக இயங்கினார்கள். நான்தான் அவனைக் கொன்றிருக்க வேண்டும் என்று சந்தேகித்துக் கைது செய்தார்கள். என் மனைவி கதறியதும், 'ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது; சீக்கிரம் திரும்பி விடுவேன். கவலைப் படாதே' என்று நான் அவளைச் சமாதானப் படுத்த முயன்றதும், பள்ளிக்கூடத்திலிருந்து கருணா வந்தால் 'அப்பா ஊருக்குப் போயிருக்கிறார். இரண்டு நாளில் வந்து விடுவார்' என்று சொல்லு'' என்றதும் முந்தின தினம் நடந்தவைதான் எனினும், என்றோ பல யுகங்களுக்கு முன்னால் நடந்தவை போல் தோன்றின.

என் நண்பரும் பிரபல வழக்கறிஞருமான பானர்ஜி என்னைக் காண வந்தார். போலீஸார் சாதாரணமாகத் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களை வெளியிடவே மாட்டார்கள். ஆனால் பானர்ஜி, ஆங்காங்கே அவருக்குள்ள 'தகவல் நிலையங்கள்' வாயிலாகப் பல விவரங்களைத் தெரிந்து கொண்டு வந்திருந்தார்.

பால் என்னை மோசம் பண்ணி நிறையப் பணத்தை அபகரித்து விட்டான் என்ற ஆத்திரத்தில் அவனை நான் கொன்று விட்டதாய்ப் போலீஸார் கருதுகிறார்கள். பாலுடைய அறையில் சுவரில் ஒரு படத்துக்குப் பின்னால் மறைவாகப் புதைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியில் ஏராளமான கரன்ஸி நோட்டுக்கள் இருந்தனவாம். காரியாலயக் கணக்கு வழக்குகளை ஆராய்ந்தால் மோசடி பற்றி மேலும் பல தகவல்கள் தெரிய வரும்.

பால் வசிக்கும் அதே வீட்டின் மாடியில் அறை எடுத்துக் கொண்டிருக்கும் ஒருவன் 'பாலைக் கொன்று விடுவேன்' என்று ஒரு குரல் பயமுறுத்தியதாகவும் பிறகு 'தட் தட்' என்று சத்தம் கேட்டதாயும் கூறுகிறான்.

''அது நான் மேஜையைத் தட்டிய சத்தமாயிருக்கும்'' என்று இடைமறித்துக் கூறினேன்.

''போலீசார், இரும்புக் கம்பியால் உன் நண்பனை நீ மண்டையில் அடித்த ஓசை அது என்று கருதுகிறார்கள். கம்பி யார் கண்ணிலும் படாதிருக்க அதை எங்கேயோ வீசியெறிந்து விட்டாயாம். சாதாரண ஜன்னல் கம்பியை விடச் சற்று மெல்லியதாக இருந்திருக்கலாம் என்று கூறுகிறார், பிரேத பரிசோதனை செய்த டாக்டர். வெளியே போய் விட்டுத் திரும்பிய அந்தச் சாட்சி ஏதோ ரகளை போல் இருக்கவே ஒட்டுக் கேட்டானாம். யாரோ தன் மீது முட்டி மோதிக் கொண்டு வெளியே சென்றார்கள் என்கிறான். பிறகு அவன் மாடியில் தன் அறைக்குப் போனானாம். சில விநாடிகளில் அவன் அறையிலிருந்த சுவர்க் கடிகாரம் மணி ஏழு அடித்ததாம். டாக்டரும் ஏறக்குறைய ஏழு மணிக்குத்தான் மரணம் சம்பவித்திருக்க வேண்டும் என்று அபிப்பிராயப் படுகிறார். நீ போலீசாரிடம் பேசிக் கொண்டிருந்த போது உன் குரலை 'டேப் ரிக்கார்ட்' செய்து சாட்சிக்குப் போட்டுக் காட்டியிருக்கிறார்கள். சாட்சி உன் குரலை அடையாளம் கண்டுபிடித்திருக்கிறான்.''

''ஒரு குருடனுடைய சாட்சியத்தை வைத்துக் கொண்டு என்னை என்ன செய்து விட முடியும்?''

''குருடன் என்று அலட்சியமாக நீங்கள் குறிப்பிடுகிறவர் 'லுக்' (பார்வை) என்ற பெயரில் பல ஆங்கிலப் பத்திரிகைகளுக்குக் கதை கட்டுரைகள் எழுதி வரும் நபர். ஆளை யாருக்கும் தெரியாதென்றாலும் அவர் எழுத்து ஜகப்பிரசித்தி பெற்றது!''

''நானும் படித்திருக்கிறேன், அவர் கதைகளை'' என்றபடியே மனமுடைந்து போய் உட்கார்ந்து விட்டேன்.

கண்ணீரும் கம்பலையுமாக என் மனைவி என்னைப் பார்க்க வந்தாள். ''கருணாவிடம் மார்க்கெட்டுக்குப் போவதாகச் சொல்லி விட்டு வந்தேன். போகும் போது ஞாபகமாய்க் காய்கறி வாங்கிக் கொண்டு போக வேண்டும். நாளைக்கு எட்டு தரம் 'அப்பா

தீபாவளி ஸ்பெஷல் ரகங்கள்

* ஜனதா ஸ்பெஷல்
* தேன்கூடு கட்டம்
* மணிபுரி சேலைகள்

தென்னிந்தியாவிலேயே பட்டுச் சேலைகளுக்கு நற்கியாதி பெற்ற ஸ்தாபனம்...



நல்லி சின்னசாமி செட்டி

பனகல் பார்க்

டெலிபோன் நெ. 41115

தியாகராயநகர் சென்னை-17

3-11-63 ஞாயிறன்றும் விற்பனை உண்டு

உங்கள் சருமத்தை சுத்தமாக வையுங்கள்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப் பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும் வழவழப்பாகவும் மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள், கட்டிகள் செந்நிறத் தழும்புகள் மேலாகப் பரவும் படை, படர்தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப் பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் அது இருக்கச் செய்யும் என்ற பூர்ண நம்பிக்கையுடன் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள்.



வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாகப் படிக்க, பேச, எழுத, சுலபமாகக் கற்க பெரிய புத்தகம். விலை தபால் செலவோடு ரூ. 6-25.

ஜீவனோபாயம் (குடிசைத் தொழில்)

சோப், இங்கி, பத்தி, ஸ்னோ போன்ற 206 புதுத் தொழில்கள் அடங்கியது. விலை ரூ. 4-00. வி. பி. 0-85.

தமிழ் ஹிந்தி சுபோதினி

தமிழ் மூலம் சுலபமாக ஹிந்தி படிக்க பேச, எழுத, கற்க முடியும். விலை ரூ. 2-25. வி. பி. 0-85.

குடும்ப இலகு வைத்தியம்

பச்சிலை மூலிகைகள் கொண்டு ஆரோக்கியம், பலம் பெற வழிகாட்டும். விலை ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.


மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)

கால்நடைகளின் நோய்களை போக்கும். விலை ரூ. 2. வி. பி. 0-85.

வாணி புக் டிப்போ (K)

3, மலையபெருமாள் கோ. ஆம் தெ. 5
சென்னை - 1

18 சிறந்த மூலிகைகள் கலந்து முதல்முதலாகதயாரிக்கப்பட்ட




ஆயுர்வேதிக்

பேஸ்ட்டும்,பௌடரும்

உலகத்தில் எல்லா டூத்பேஸ்ட்டும், பௌடரும் பற்களை சுத்தம் செய்கிறது. ஆனால், ஈறுகளை பலப்படுத்த என்னென்ன கலவைகள் அதில் சேர்க்கப்பட்டுள்ளன என்று யோசித்துப் பாருங்கள். முதல் முதலாக ஆயுர்வேதிக் 'விக்கோ வஜ்ரடன்தி' (பேஸ்ட்டும்,பௌடரும்) 18 சிறந்த மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டது. ஈறுகளை நன்றாக இறுகச்செய்து பற்களை மிகவும் பலப்படுத்துகின்றன. ஒரு முறை உபயோகித்து திருப்தியடையுங்கள்.

விக்கோ வஜ்ரடன்தி

பேஸ்ட்டும், பௌடரும்



VICCO LABORATORIES DADAR T.T., BOMBAY 14

ஸ்டாக்கிஸ்டுகள் :

மெஸர்ஸ் ஆர். எல். கௌடர் அண்டு கம்பெனி, சென்னை-1
மெஸர்ஸ் கே. எஸ். கௌடர் அண்டு கம்பெனி, பெங்களூர்-9
மெஸர்ஸ்என். தேசாய் கவுண்டர் அண்டு கம்பெனி, கோயமுத்தூர்-1

எப்போ வருவா?'' என்று கேட்டுக் கொண்டே இருக்கிறாள்.''

''ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்!''

''எவ்வளவோ ஜாக்கிரதையாக இருந்தாலும் திடீரென்று நினைத்துக் கொண்டு தெருவுக்கு ஓடி விடுகிறாள். நேற்று சாயங்காலம் கூட ஒரு கண்டம் தப்பியது. நல்ல சமயத்தில் அந்த மகானுபாவன் அவளைச் சட்டென்று இப்பால் இழுத்துத் தூக்கி அணைத்துக்கொண்டான். இல்லா விட்டால் லாரியாகரனுக்குக் குழந்தையைப் பலி கொடுத்திருப்பேன். இத்தனைக்கும் அவன் குருடு. கருணாவைத் தூக்கப் போனபோது கீழே விழுந்த தடி இருக்கும் இடம் தெரியாமல் தேடித் தடவினான். கருணா தான் அவன் கைத்தடியைத் தூக்க முடியாமல் தூக்கி எடுத்துக் கொடுத்தாள்.''—இதைக் கூறியபடியே மீனா புடவைத் தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

எனக்குப் பகீர் என்றிருந்தது. ''மீனா! அவன் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தானா? தாடி மீசையெல்லாம் இருந்ததா?''

''ஆமாம். எப்படி அவ்வளவு கணக்காகச் சொல்கிறீர்கள்?'' என்று அதிசயித்தாள் மீனா.

நான் நடந்ததை யெல்லாம் அவளுக்கு விவரித்து விட்டு, ''மீனா! ஏதோ நெஞ்சை உறுத்துவதால்தான் அவன் நம் வீட்டருகே சுற்றிக் கொண்டிருக்கிறான். அவனை நம்பாதே! பத்திரம்! ஒரு வேளை அவன் குருடே இல்லையோ என்னவோ? ஏதோ ஒரு காரணத்துக்காகக் குருடனாய் நடிக்கலாம். புனைபெயரைப் பார், 'லுக்' என்று! கபோதியாயிருந்தால் கருணாவைத் தக்க சமயத்தில் எப்படிக் காப்பாற்றியிருக்க முடியும்?'' என்றேன்.

மீனாவை எச்சரித்து அனுப்பி விட்டுப் பானர்ஜி வந்ததும் என் சந்தேகங்களை அவரிடம் வெளியிட்டேன்.

''கண் தெரியாதவர்களுக்குக் காது நன்றாய்க் கேட்கும். பல விஷயங்களை அவர்கள் செவியால் பார்ப்பார்கள். கார் வரும் ஓசையையும் குழந்தை கருணாவுடைய செருப்பு ஒலியையும் கேட்டு.....''

இடையில் குறுக்கிட்டு நான் பேசினேன்: ''உங்களோடு தர்க்கம் புரிய நான் தயாராயில்லை. எழுத்தாளர் 'லுக்'குக்கு அடிக்கடி மூளை பிசகாகி விடுகிறதென்றும் அச்சமயங்களில் அவர் கொலை வெறி கொண்டலைகிறார் என்றும் நான் நினைக்கிறேன். சரியான நினைவு திரும்பியதும் தாம் குருடனென நடித்தும் அதைக் காரணம் காட்டியும் சாமர்த்தியமாய்ப் பேசித் தப்பி விடுகிறார். ஒரு டாக்டரைக் கொண்டு நீங்கள் அவர் கண்களைப் பரிசோதிக்க வேண்டும், குறிப்பாக அவர் கைத்தடியைக் கூர்ந்து ஆராய வேண்டும். கைத்தடியைச் கருணா ரொம்பவும் சிரமப்பட்டுத் தூக்கியதாய் என் மனைவி கூறினாள்....''

நான் பேசி முடிக்கும் வரையில் காத்திராமல் பானர்ஜி எழுந்து போனார்.

மறு நாள் காலையில் பானர்ஜியுடன் இன்ஸ்பெக்டர் சந்திரமோகனும் வந்தார். ''மிஸ்டர் சலம்! நீங்கள் பேசாமல் இந்த விளம்பரம் சேகரிக்கும் தொழிலுக்குப் பதிலாக

பாங்குக் குமாஸ்தா (கிராமத்தானிடம்): இந்தச் செக்கை நீ காசாக்க முடியாது. உனக்குக் காசு வேண்டுமானால் யாராவது அறிமுகமானவரை அழைத்து வா.

கிராமத்தான்: இவருக்கு என்னை நல்லாத் தெரியுமுங்க.

குமாஸ்தா: ஆனால் எனக்கு இவரைத் தெரியாதே!

கிராமத்தான்: என் புத்தியைச் செருப்பால் அடிக்கணுங்க. வந்தவுடனேயே இவரை உங்களுக்கு அறிமுகப்படுத்தி யிருந்தால் தெரிந்து கொண்டிருப்பீர்கள் அல்லவா?

ஸி. ஐ. டி. இலாகாவில் சேர்ந்திருக்கலாம். இருந்த இடத்திலிருந்தபடியே பல துப்புக்களைக் கண்டுபிடித்துச் சொல்லுகிறீராமே?''


''என்ன நடந்தது?'' என்று ஆவலுடன் கேட்டேன் நான்.

''நீங்கள் ஊகிப்பதில் பாதி உண்மை. மிஸ்டர் லுக் நிஜமாகவே குருடர்தான். அவருக்கு மூளை பிசகவும் இல்லை. ஆனால் அவர் கைத்தடியைப் பற்றிச் சொன்னீர்களே அது உண்மை. உடை வாளை உறைக்குள் செருகுவது போல் அதற்குள் ஒரு கம்பி செருகப் பட்டிருந்தது. அதில் ரத்தக் கறையும் இருந்தது. அந்த ரத்தக் கறை பாலுடைய ரத்தத்தினால் ஏற்பட்டது தானா என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ளவும் விரல் ரேகைகள் ஏதேனும் அகப்படுகின்றனவா என்று பார்க்கவும் கம்பியைப் பரிசோதனைச் சாலைக்கு அனுப்பியிருக்கிறேன்.

''கைத்தடி ரகசியம் எங்களுக்குத் தெரிந்து விட்டது என்றதும் ஆள் நிலை குலைந்து போய் விட்டான். தான் டைப்ரைட்டரில் அடித்து வைத்திருந்த ஒரு கதையை எடுத்துக் கொடுத்தான். படித்தேன்; சுவாரசியமாக இருந்தது.''

''சுருக்கமாகச் சொல்லுங்கள்!''

''தமது ஒரே மகளாகிய தாயில்லாப் பெண்ணைத் தந்தை அன்பாக வளர்க்கிறார். கலியாணம் செய்து கொடுக்க நினைக்கும் வாலிபனுடன் தாராளமாக உறவாட விடுகிறார். திடீரென்று ஒரு நாள் அந்த வாலிபன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடுகிறான். பெண் கருவுற்றிருக்கிறாள். ஊராரின் ஏச்சுக்கு ஆளாகித் துன்பம் தாளாமல் தற்கொலை செய்து கொள்கிறாள். தகப்பனார் அந்தப் பையனைக் கண்டுபிடித்துப் பழி வாங்கியே தீருவேன் என்று சபதம் செய்து கொண்டு கிளம்புகிறார். துரதிர்ஷ்டவசமாக அவருக்கு இந்தத் தருணத்தில் ஏதோ காரணத்தால் கண் பார்வை போய் விடுகிறது. இருந்தாலும் பல ஊர்களுக்குப் போய் ஆளை அடையாளம் சொல்லி விசாரிக்கிறார். அவன் தன்னைக் கண்டதும் பதுங்கி விடுவான் என்பதால்



தாடி மீசை வளர்த்துக் கொண்டு கறுப்புக் கண்ணாடியும் அணிகிறார். இந்த வேஷத்தில் எத்தனையோ சிரமங்களைச் சமாளித்துப் பல வருஷங்களுக்குப் பின் கல்கத்தா வருகிறார். அங்கே வேறு பெயரில் உலவி வரும் அவனை எப்படியோ கண்டுபிடித்தும் விடுகிறார். தான் நினைத்தபடியே அவன் ஸ்திரீலோலனாக இருப்பதையும் உணர்கிறார். எனினும் கண் பார்வை இழந்த நிலையில் அவன் தம் பெண்ணின் மரணத்துக்குக் காரணமாயிருந்த பாவிதானா என்பதை அவரால் தீர்மானமாக முடிவு செய்ய இயலவில்லை. ஆகவே அவன் தங்கியிருக்கும் அந்த வீட்டிலேயே மாடியில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அவனுடன் பழகுகிறார்......

''கதை முற்றுப் பெறாமல் நிற்கிறது.''


''அதைப் பூர்த்தி செய்வது நமக்குச் சுலபம்தானே. பிரபல கதாசிரியராகத் திகழும் ஹுக் யார் என்பதை அறியாமல் பால் அவருடன் சிநேகமாயிருக்கிறான். பேச்சுவாக்கில் ஒரு நாள் பழங் கதையைக் கூறி விடுகிறான். பால் யார் என்பது நிச்சயமானதும் மிஸ்டர் ஹுக் அவனைப் பழி வாங்கி விடுகிறார்'' என்றேன் நான்.

''அப்படித்தான் சாதாரணமாக நினைக்கத் தோன்றும்; ஆனால் தாம் குருடனாகையால் திருடர்களுக்குத் தம் பணத்தையும் மற்ற உடைமைகளையும் கவருவது சுலபமென்றும், அதனால் திருடர்களிடமிருந்து தப்பத் தற்காப்புக்காக மட்டுமே அந்தக் கம்பியைத் தாம் கைத்தடியில் ஒளித்து வைத்திருந்ததாகவும் ஹுக் கூறுகிறார். பாலைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்த போதிலும் அதைத் தாம் செய்யவேயில்லை என்று சாதிக்கிறார்!''

''கொலை புரிந்தவன் வேறு எப்படிப் பேசுவான்'' என்றேன் நான். ''எனக்கு விடுதலை தானே? போய் வரட்டுமா?''

''மன்னிக்க வேண்டும்; உங்களை ரொம்ப நேரம் தாமதிக்க வைத்து விட்டேன். உங்கள் மனைவியும் குழந்தையும் ஆவலுடன் உங்களை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு விஷயம். உங்கள் மீது சந்தேகம் முற்றிலும் தீரவில்லை; ஆகவே நீங்கள் கல்கத்தாவை விட்டு எங்கும் போகாதிருப்பது நலம். அப்படிப் போனால் உங்கள் மீது சந்தேகம் வலுப்படும்.''

நான் சிரித்தேன். ''பயந்து ஓடிவிட மாட்டேன்; கவலைப்படாதீர்கள்!'' என்று கூறிப் புறப்பட்டேன். வீட்டை அடைவதற்கு முன் ஞாபகமாகச் சுகுணாவுக்கு ஒரு பொம்மையும் வாங்கிச் சென்றேன். ஊரிலிருந்து வாங்கி வந்ததாகச் சொல்லிக் கொடுத்தேன். அவள் குதூகலத்தைக் கண்டு மகிழ்ந்தேன். என்னைக் காப்பாற்றிய தெய்வம் அவள்தான். அவள் மட்டும் அன்று 'ஹுக்'குடைய கைத்தடியைத் தூக்கிப் பார்த்து அதன் கனத்தையும் உணர்ந்திருக்கவில்லையானால் இன்று என் கதி? இதையெல்லாம் பற்றி நான்



சுகுணாவிடம் பேசவில்லை. அந்தக் கொலைகாரனைக் குழந்தைக்கு நினைவூட்டுவானேன்?

இரண்டு நாட்கள் கழித்து இன்ஸ்பெக்டர் சந்திரமோகனும் பானர்ஜியும் ஒன்றாக வீடு தேடி வந்தார்கள்.

''கேஸ் முடிந்து விட்டதா?'' என்று விசாரித்தேன்.

''அநேகமாய் முடிந்தாற் போலத்தான். அந்தக் கம்பியிலிருந்த ரத்தக் கறை பாலுடைய ரத்தம்தான் என்று பரிசோதனையில் தெளிவாகி விட்டது. ஹுக்குடைய விரல் ரேகைகளும் அதில் இருந்தன. ஆனால் ஒரு விஷயம்தான் புதிராக இருக்கிறது.''

''என்ன அது?''

''குருடனால் அத்தனை குறி பார்த்துப் பாலுடைய மண்டையில் அடித்திருக்க முடியுமா? கம்பியை அவன் வீசினான்; முதல் அடியே பாலை அவன் மண்டையில் தாக்கியது; பால் கீழே விழுந்தான். அடுத்த அடி நியாயமாக மேஜை மீது விழுந்திருக்க வேண்டும், அல்லது பாலுடைய உடம்பில்பட்டிருக்க வேண்டும்; ஒரு டேபிள் விளக்கு உடைந்திருக்க வேண்டும்; இப்படியெல்லாம் ஏதும் நிகழ்ந்ததற்கான அடையாளங்களை அந்த அறையில் காண முடியவில்லை. ஒவ்வொரு அடியும் குறி பிசகாமல் பாலுடைய மண்டையிலேயே விழுந்துள்ளன........''

''அதனால்?......''

''இந்தக் காரியத்தை ஒரு குருடனல்ல, வேறு யாரோதான் செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். கொலைக் கருவியில் ஹுக்குடைய விரல் ரேகையைத் தவிர வேறு ஒருவரது விரல் ரேகையும் இருந்தது. அது ஒரு பெண்ணுடையதாக இருக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.''

''பாலுக்கு எத்தனையோ பெண்களைத் தெரியும். நான் அவனுடன் சண்டை பிடித்து விட்டு வந்த தினத்தன்றுகூட ஒருத்தி ரொம்பக் கோபத்துடன்தான் அவனைப் பிடித்துத் தள்ளி விட்டு வெளியேறினாள். விளம்பரங்களுக்குப் புகைப்படமெடுக்க 'போஸ்' கொடுப்பவர்களில் ஒருத்தி அவள் என்பது இப்போது நினைவு வருகிறது. அவளைப் போன்ற எத்தனை பேர்களை அவன் கெடுத்தானோ; யாருக்கு அவன் மீது வன்மமோ; யார் கண்டார்கள்?''

''அநேகமாகப் பாலுடன் பழகியுள்ள எல்லாப் பெண்களின் விரல் ரேகைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து விட்டோம்; பலனில்லை. இன்னும் ஒரே ஒருவர்தான் பாக்கி.''

''யார் அது?''

''உங்கள் மனைவி மீனா!''

''சீ! டாம் இடியட்!'' என்று இரைந்தேன்.

''உஷ்! சத்தம் போடாதீர்கள்! சுகுணா தூங்கிக் கொண்டிருக்கிறாள்'' என்றாள் மீனா, அறைக்குள் நுழைந்தவாறே. ''நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். இனி மேல் மறைப்பதில் பயனில்லை. இன்ஸ்பெக்டர் ஸார்! நான் தயார்! அழைத்துப் போங்கள் என்னை!''

''மீனா! மீனா! என்ன இது?'' என்று அலறினேன் நான்.

சுலேகா

ஸ்பெஷல்

பவுண்டன் பேனா

இங்க்



4 நிரந்தரமான கலர்களில்

கிடைக்கும்

• புளு பிளாக் •

• ராயல் புளு •

• கருப்பு •

• பிரவுன் •

சுலேகா ஒர்க்ஸ் லிட்.

கல்கத்தா



THANGABASPAM
TOBACCO

KARAIKUDI.

BS


மீனா விம்மலுக்கிடையே சொன்னாள் : ''உங்கள் நண்பர் பாலைப் பற்றிக் குறை சொன்னால் உங்களுக்குப் பிடிப்பதே இல்லை. உத்தமராகிய நீங்கள் உடலூனாக உழைப்பதையும் அந்த உழைப்பின் பயனாக அவர் சுகிப்பதையும் எனக்குக் காணச் சகிக்க வில்லை. பகல் முழுதும் நான் உங்களால் தனிமையில் விடப்பட்டேன். எனக்குப் பொழுதுபோகாது. அவர் ஜாகைப் பக்கமாகப் போய் அவர் உல்லாச வாழ்க்கையைப் பார்த்துப் பார்த்துப் பொறுமையையும் ஆத்திரத்தையும் வளர்த்துக் கொண்டேன். நாளடைவில் இதுவே எனக்கு முழு நேர வேலையாகி விட்டது.

''பாலுடைய நடவடிக்கைகளை என்னைப் போலவே ஒரு குருடனும் கவனிப்பதைப் பார்த்து அதிசயப்பட்டேன். விவரமறிய அவரிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்து நான் யார் என்ற உண்மையை வெளியிடாமல் பொய் சொல்லி அவருடைய நட்பைப் பெற்றேன். அவர் கதையை அறிந்து கொண்டேன். 'என்றாவது ஒரு நாள் அவனைக் கண்டு பிடித்து இதனால் தீர்த்துக் கட்டி விடப் போகிறேன்' என்று தம் கைத்தடியிலிருந்த இரும்புக் கம்பியை நாங்கள் தனித்திருக்கையில் அடிக்கடி உருவிக் காட்டுவார் அவர். இதன் பின் நான் அவருடைய கண்களாகவும் மாறினேன். அவர் பெண்ணைக் கெடுத்ததும் இந்தப் பாவிதான் என்று அடையாளம் சொன்னேன். அப்படியும் அவர் தயங்கினார். பாலிடம் எனக்கு ஏதோ வன்மம் என்றும் அதனால் பொய் அடையாளம் சொல்லிப் பாலைக் கொலை புரியுமாறு அவரை நான் தூண்டுவதாகவும் சொன்னார். தமக்கே நிர்மானமாகத் தெரிந்தாலொழிய ஏதும் செய்ய முடியாது என்றார்.

''என் உள்ளத்தில் வெறுப்பு கொந்தளித்தது. பாலைக் கொல்வதால் வெறுப்பு, பொறுமை, ஆத்திரம் போன்ற உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அவதிப்படும் எனக்கு மட்டுமல்ல; பெண் குலத்துக்கே — பெண்மைக்கே—விடுதலையளிப்பதாக எண்ணினேன்.

''மிஸ்டர் லூக் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சமயத்தில் அவர் அறியாதவாறு அவர் தடியை எடுத்துக் கொண்டு அந்த வீட்டில் பால் வசித்த பகுதியை அடைந்தேன். அப்போது அந்தப் பாதகன் மற்றப் பெண்களைப் போல் நானும் அவன் அழகில் கட்டுண்டு தனித்து வந்திருப்பதாய் நினைத்துப் பேசினான். என் நெஞ்சு பொறுக்க வில்லை. என் ஆத்திரம் எல்லையை மீறியது.

''அப்போதும் நான் அறிவை இழக்கவில்லை. சாமர்த்தியமாகக் கைக் குட்டையை உள்ளங்கையில் வைத்துக் கொண்டுதான் கைத் தடியையும் அதனுள்ளிருந்த இரும்புக் கம்பியையும் பிடித்தேன். இருந்தாலும் சிறிய கைக்குட்டையானதால் தவறிப் போய் விரல் ரேகை ஏதேனும் பதித்திருக்கலாம்.



''காரியம் முடிந்ததும் கைத் தடியை லூக்குடைய அறையில் முன்பிருந்தது போலவே வைத்து விட்டேன். என் மேலே ரத்தம் சிதறியிருந்தது. அதை மறைக்க லூக்குடைய மழைக் கோட்டை எடுத்து அணிந்து கொண்டேன். வீட்டுக்கு வந்ததும் நான் உடுத்தியிருந்த ஆடையையெல்லாம் கழற்றி அடுப்பில் போட்டு எரித்து விட்டேன். லூக்குடைய ரப்பர் மழைக் கோட்டு சுலபத்தில் எரியாது. அது மட்டும் இன்னமும் அலமாரியில் பத்திரமாயிருக்கிறது.

''நீங்கள் அன்று பாலுடன் சண்டை போட்டு விட்டு வந்தது எனக்கு அப்போது தெரியாது. போலீசார் அந்தக் குருடனைத் தான் கைது செய்வார்கள் என்று எண்ணியிருந்தேன். ஆனால் சற்றும் எதிர்பாராத விதமாய் உங்களைப் பிடித்துக் கொண்டு போனது இடி விழுந்தாற் போலிருந்தது.

''போலீஸாருடைய கவனத்தை மிஸ்டர் லூக் மீது திருப்ப, அவர் நம் வீட்டுப் பக்கமாய் உலவி வருவதாக அன்று சிறையில் உங்களிடம் கதை அளந்தேன். நம் குழந்தையை அவர் காப்பாற்றியதாகப் புளுகினேன்......''

''அதைப் பற்றி நாங்கள் நேற்று மிஸ்டர் லூக்கை விசாரித்தோம்'' என்றார் இன்ஸ்பெக்டர் ''குற்றமுள்ள நெஞ்சுதானே உன்னை அந்த வீட்டுப் பக்கமாய் இழுத்துச் சென்றது? உன் அடாத செய்கையால் ஒருவன் சிறையில் வாட அவன் மனைவியும் குழந்தையும் எவ்வளவு துன்பப்படுவார்கள் என்று உன் நெஞ்சு இடித்துக் காட்டியது இல்லையா? அதனால் அவர்களைப் பார்த்து வரச் சலத்தின் விலாசத்தை விசாரித்துக் கொண்டு போனாய் அல்லவா?'' என்றெல்லாம் கேட்டோம்.


''அவனோ தான் இந்தப் பக்கமே வரவில்லை என்று சாதித்தான். ஆகவே உங்கள் மனைவி மீனா அல்லது மிஸ்டர் லூக் இரண்டு பேரில் ஒருவர் ஏதோ உள்நோக்கத்தோடு பொய் சொல்லுகிறார்கள் என்றாயிற்று. உண்மையை வெளிக் கொணர ஒரு தந்திரம் செய்தேன்.''

''தந்திரமா?''

''ஆமாம், மிஸ்டர் சலம்! அந்த இரும்புக் கம்பியில் மிஸ்டர் லூக்குடைய விரல் ரேகையைத் தவிர வேறு ஒரு ரேகையும் எங்களுக்கு அகப்படவே யில்லை. அதோடு விரல் ரேகைகளில் இது ஆணுடையது, இதுபெண்ணுடையது என்றெல்லாம் பாகுபாடு செய்வதும் சாத்தியமல்ல!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

நான் இடிந்து போய் உட்கார்ந்திருந்த சமயத்தில் இன்ஸ்பெக்டரும் பானர்ஜியும் மீனாவுடன் உள்ளே போய் லூக்குடைய மழைக் கோட்டையும் எடுத்து வந்தார்கள். ''இதன் உள் பக்கத்தில் உங்கள் மனைவியின் ஆடையிலிருந்து ஒட்டிக் கொண்ட ரத்தக் கறை சிறிது இருக்கிறது. நீதி விசாரணையின் போது மிக உபயோகமாக இருக்கும். வருகிறோம்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''போய் வருகிறேன், கருணாவை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். வேலையே பிரதானமென்று கருதி என்னை அலட்சியம் செய்தது போல் அவளிடமும் நடந்து கொள்ளாதீர்கள்!'' என்று நாத் தழுதழுக்கக் கேட்டுக் கொண்டாள் என் மனைவி.



இப்பொழுதெல்லாம் விசேஷ நாட்களில் அன்பளிப்பாக ஏன் தையல் மிஷின்களை கொடுக்கிறார்கள்? உங்கள் குடும்பத்தினர் தையல் மிஷினை விரும்பிப் போற்றுவார்களென்று! உங்களன்புக்குப் பாத்திரமானவர்கள் அந்த தையல் மிஷினை மிகவும் மதித்து, புகழ்ந்து, எக்காலும் அதனை உபயோகிப்பார்களென்று!

ஆம். அதுதான் உண்மை. மேலும், தையல் மிஷின் மங்களகரமான, உயர்ந்ததோர் வாழ்க்கையின் சின்னம். உங்கள் குடும்பத்திற்கேற்ற, விசேஷ தினத்திற்குகந்த ஒரு உயரிய அன்பளிப்பு.

"உஷா ஸ்ட்ரீம்லைன்ட் மாடலை" அளித்து இவ்வருடம் உங்கள் குடும்பத்தினரை வியப்படையச் செய்யுங்கள். மிக நேர்த்தியான தோற்றத்திற்கும், உன்னத உழைப்பிற்கும், 40க்கும் மேலான அயல் நாடுகளில் புகழ்படும் இந்த "உஷா ஸ்ட்ரீம்லைன்ட் மாடல்" இந்தியாவில் இப்பொழுதே முதல் தடவையாக விற்கப்படுகிறது.

உஷா

தையல் மிஷின்

ஜே இஞ்சினீரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா-31



அத்தியாயம் இருபத்தொன்று

சத்தியத்தின் வெற்றி

மிரட்சியுற்று நின்ற பரமேசுவர வர்மனின் உள்ளமும் உடலும் அதிர்ந்து நடுங்கின. ஒன்றும் செய்யத் தோன்றாமல் ஒரு கணம் திகைத்து நின்ற அவன், சடாரெனக் குனிந்து தன் காலடியில் வீழ்ந்து கிடந்த சளுக்கியத் தளபதி வில்வேலியைப் பரபரப்புடன் நோக்கினான். பிறகு அவரது விலாவில் இரத்தப் பீறலுடன் குத்திட்டு நின்ற குறுவாளை வெடுக்கெனப் பிடுங்கி எறிந்து விட்டு

அவசரமாகத் தண்ணீர் அள்ளி வர ஆற்றை நோக்கித் திரும்பினான்.

வில்வேலியின் கரம் அவனைத் தடுப்பது போல் மேலே உயர்ந்தது. 'என்னைக் காப்பாற்ற எந்த முயற்சியும் செய்ய வேண்டாம்; இனிமேல் அது வீண்' என்பது போல் அசைவு காட்டி விட்டுத் துவண்டு மண்ணில் சாய்ந்தது.

பரமேசுவரவர்மன் அவருடைய தலைமாட்டில் ஒற்றை முழந்தாளிட்டு அமர்ந்து அவர் முகத்தையே உற்றுப் பார்த்தான். உண்மையில் மரணம் வெகு வேகமாக அவரை அணுகிக் கொண்டிருப்பது தெளிவாகவே புலனாகியது. உடலின் வேதனைத் துடிப்பு மெல்ல மெல்ல அடங்கி வந்தது. பிழிந்து காய்ந்த கடற் பஞ்சு போல் முகம் சிறுகச் சிறுக வெளிறிச் சிறுத்தது. நாசி நிமிர்ந்து புருவக் கோடுகள் நீண்டன.

அவர் மெல்லக் கண் திறந்தார். விலை மதிப்பற்ற பொக்கிஷம் ஒன்றைப் பார்ப்பது போல் அவனை ஆவல் பொங்கப் பார்த்தார். ''நான் பாக்கியசாலி! என்னுடைய இறுதி நேரம் இத்தனை சுகமாக இருக்கும் என்று நான் கனவில்கூட எதிர்பார்க்கவில்லை.'' — சட்டென்று அவர் முகத்தில் ஒரு பயங்கரக் கலவரம் சூழ்ந்தது. பீதியுடன் அங்குமிங்குமாக விழிகளை உருட்டினார். ''மாமன்னரே! இங்கிருந்து போய் விடுங்கள்! அதோ, அவன் வருகிறான்! அந்த நல்ல பாம்பின் குட்டி உங்களைக் கொல்ல வருகிறது! ஓடிப் போங்கள்! சீக்கிரம் ஓடிப் போய் விடுங்கள்!'' வில்வேலி திடீரென்று அலறினார்.

பரமேசுவரவர்மன் அமைதியாகத் திரும்பி நாலாபுறமும் தன் பார்வையை ஓட்டினான். எங்கும், யாருமே இருப்பதாகத் தெரியவில்லை. வில்வேலியின் அந்த அலறலுக்குரிய காரணத்தை அவன் ஓரளவு புரிந்து கொண்டான். 'என்னைக் கொல்வதற்காகச் சளுக்கிய இளவரசன் விநயாதித்தன், இவரை இங்கு அழைத்து வந்திருக்கிறான். ஆனால் இவரோ தம்மையே கத்தியால் குத்திக் கொண்டு விட்டிருக்கிறார். அதைக் கண்டு அவன் பயந்து ஓடியிருக்கிறான். அதனால்தான் இவர் இப்படி என்னை எச்சரித்து அலறுகிறார். ஆமாம்; இவர் ஏன் என்னைக் கொல்வதற்குப் பதிலாகத் தம்மையே குத்திக் கொண்டார்?' — வியப்பும் துடிப்புமாக அருகில் நெருங்கி அவர் முகத்தைக் கூர்ந்து நோக்கினான் அவன்.

வில்வேலியின் வதனத்தில் மீண்டும் அமைதி நிலவியது. அதே சமயம் அதில் இன்னும் அதி வேகமாகச் சவக் களை படரத் தொடங்கியது. ஆயினும் ஒரு விதத் தெளிவு பெற்றவர்போல் தமக்குள் மெல்ல முணுமுணுத்தார். ''அறம் கொன்று சத்தியத்தைத் தின்று ஈன வாழ்க்கை நடத்திய என் இருண்ட மனத்தில் இப்படி ஒரு ஞான தீபம் ஏறிச் சுடர் விடும் என்று நான் நினைக்கவே யில்லை. எனக்கு இப்போது நன்றாகப் புரிகிறது. இந்தப் பிறவியில் நான் மனித வாழ்க்கையே வாழவில்லை; மனிதக் கூட்டத்தோடு உறவு பூணவும் இல்லை. இரத்த வெறி கொண்ட ஒரு மகா பயங்கரப் புலியின் குகையிலே இருந்து, அதன் கோரப் பசிக்கு உணவாக மண்ணையும், மணி முடி சிம்மாசனங்களையும், விலை மதிப்பற்ற மனித உயிர்களையும் பறித்து வந்து படைக்கும் ஓர் ஏவல் மிருகமாகவே வாழ்ந்திருக்கிறேன். அந்தப் புலியைத் திருப்திப்படுத்துவதற்காக அதனால் சிருஷ்டித்து விடப்பட்ட ஒரு கொடிய வேங்கையாகவே நடமாடி யிருக்கிறேன். சே, என்ன மோசமான பிறவி எடுத்து விட்டேன்! இதற்கு நானா பொறுப்பு? ஆமாம்; இந்த இழி பிறவிக்கு நானே தான் பொறுப்பேற்க வேண்டும். ஏன் என்றால், எனக்கு மனம் இருந்தது. அந்த மனத்தை என் விலாக் கூட்டுக்குள்ளே வைத்துக் கொள்ளாமல் எனது கால் பாதங்களிலே அதைப் பொருத்திக் கொண்டு கல்லிலும் முள்ளிலுமாகக் குருடன் போல் நடந்திருக்கிறேன். வெறுமனே இருண்டு கிடந்த அவ்விலாக்கூட்டிலே அறிவென்னும் மிருகம் குடியேறி, அகந்தை – ஆணவம் என்னும் கொம்புகளை வளர்த்துக் கொண்டு



பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்

என்னை முட்டி மோதி ஆட்டிப் படைக்க விட்டு விட்டேன். இது என்னால் எனக்கு நானே ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்ட கபோதி மார்க்கம் அல்லவா? எனவே இதன் முழுமைக்கும் நானே தான் பொறுப்பேற்க வேண்டும்....''

வில்வேலியின் விலாப்புறத்திலிருந்து குபீரெனப் பீறிட்டுக் கொட்டியது இரத்தம். அதன் வேதனையைத் தாள மாட்டாமல் புழுப் போல் நெளிந்து துடித்த அவர் உதட்டைக் கடித்து முகத்தை முறுக்கிக்கொண்டு முனகினார்.

இந்த நெஞ்சுறுத்தும் காட்சியைக் காணச் சகியாமல் கண்களை இறுக மூடிக் கொண்டான் பரமேசுவரவர்மன்.

சிறு பொழுதுக்குப் பின் வில்வேலியின் வறண்ட உதடுகள் மீண்டும் அசைவுற்றுச் சொற்களை ஹீனஸ்தாயியில் குழைத்தன: ''ஆனாலும் அதற்காக நான் வருந்திப் பயனில்லை. அது என் விதி. அந்த விதியே என்னை அவ்வாறெல்லாம் சீரழித்து நடத்தியது. ஆகவே நான் இப்போது வருந்துவதெல்லாம் ஒன்றே ஒன்றுக்காகத்தான். அதாவது, அன்றொரு நாள் இதே சிற்றாற்றின் மறு கரையில் பழையாறைச் சோழனின் கத்திக் குத்துக்கு இலக்காகிப் புத்துயிர் பெற்று எழுந்தபோது என் உள்ளத்தில் ஏறிச் சுடர் விட்ட இந்த ஞான தீபத்தை அப்படியே அணையாமல் காப்பாற்றி அது சுட்டிக்காட்டிய வழியைப் பின்பற்றிச் செல்லாது விட்டு மீண்டும் பழைய நரக வழிக்கே திரும்பிப் போனேனே, அதை நினைத்துத்தான் ஆறாத் துயரம் அடைகிறேன். இந்த ஜன்மத்தில் எனக்குக் கிடைத்த அந்தக் கடுகளவு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தினையளவு நல்வினைகளையாவது ஆற்றிச் சேர்த்துக் கொள்ளாமல் போய் விட்டேனே என்ற வருத்தம்தான் என் இதயத்தை வாள் கொண்டு அறுக்கிறது! இனி என்ன செய்வது? காலம் கடந்து விட்டதே!''-அவர் விம்மிப் பொருமினார். அவரது வெளுத்த விழிகளில் கண்ணீர் கசிந்து செவிக் குழிகளில் இறங்கியது.

உணர்ச்சிப் பிழம்பாக வெலவெலத்து உட்கார்ந்திருந்த பரமேசுவரவர்மன், அவருடைய நீர் சிந்தும் நேத்திரங்களை இதமாகத் திறந்து விட்டான்.

நிலை கொள்ளாமல் அலைந்துப் புரளும் தம் பார்வையை வெகு சிரமத்துடன் அவன் பக்கமாகத் திருப்பினார் வில்வேலி. அவனும் அவரையே இமைக்காமல் நோக்கினான்.

''நேரம் நெருங்கி விட்டது; எனக்கென்று விதி வகுத்த நேரம் இதோ நெருங்கி வந்து கொண்டிருக்கிறது!'' என்று முணுமுணுத்த வில்வேலி தமது உலர்ந்த உதடுகளில் ஓர் அவலப் புன்முறுவலைத் தூவிக் கொண்டு அடைத்த குரலில் மேலும் சொன்னார்: ''என் ஆத்மாவின் ஜீவ நாதத்தைத் தட்டியெழுப்பிய ஞானகுமாரரே! இந்தக் கடைசி விநாடியில் உங்களிடம் ஒரு வரம் கோருகிறேன்; அதை இல்லையென்னாமல் எனக்கு அளிப்பீர்களா?''

பரமேசுவரவர்மன் அவரை ஆழ்ந்த அன்பின் கனிவோடு குனிந்து பார்த்து 'அளிப்பேன்' என்பதற்கு அறிகுறியாக மெல்லத் தலையசைத்தான்.

''உங்களுக்கும் உங்கள் நாட்டுக்கும் நான் இழைத்த எண்ணிறந்த கொடுமைகளை மறந்து மன்னித்து, உங்களுடைய அன்பு பரிமளிக்கும் வாயால் என்னை என் பெயரிட்டு ஒரு முறை — ஒரே ஒரு முறை — என் செவிபட நீங்கள் அழைப்பீர்களா?''

வில்வேலியின் வலக் கரத்தை இதமாகப் பற்றியெடுத்துத் தன் விரிந்த

நம்பிக்கை பெற்ற மருந்துகள்

ஸான்டலக்ஸ்
சரும ரஸிக கஸிம்பு
காயம், வேர்க்குரு, படை.

இளைகரையின்றி கூந்தல் செழிக்க
காஷ்மீர்-குஸும்

T. A. அப்துல் ரஹீம்
தஞ்சாவூர்
சேவல் மார்க்கு
ஊதுபத்திகள், வாசனைகள்.

குழந்தைகளுக்கு
காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
அர்ஜன்
கொரோஜனை மாத்திரை

நஞ்சன்கூடு-பல்பொடி
மற்றும்
54 அரிய குடும்ப மருந்துகள்
வியாதி விபரம் எழுதியும் சிகிச்சை பெறலாம்

குடும்ப அவசியங்கள்
ஜவரேக்
ஜ்வர நிவாரணி
காலரெக்ஸ்
பேதிகளைத் தடுக்க

பலவிருத்திக்கு: 1. ஆல்மன்டைன், 2. ஓஜோலோ, 3. மகாமகரத்வஜம்
மாதர்களுக்கு: 1. ஜீவனி, 2. சுகுமாரலேகியம், 3. சோணிதாமிர்தம் 4. யூடிஞல்-(கர்ப்பிணிகள் டானிக்) 5. டோனடெல் (பிரசவத்திற்குப் பிறகு லேகியம்) ரூ. 5/-: 1-35
சோல் ஏஜன்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன். 8. பந்தர் தெரு. சென்னை-1 (மதுரை, கோவை, பம்பாய்-19)

மிக எளிது

உங்கள் தேவை எல்லாம் ரூ. 5/-

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்கில் சேமிப்புக் கணக்கு ஒன்றை

ஆரம்பிக்க

1863 1963

இந்திய பாங்கித் தொழிலில் 100 ஆண்டுகள்

பாங்க் கட்டணம் கிடையாது. அதோடு ஆண்டிற்கு 3 சதவீதம் வட்டியும் சம்பாதிக்கலாம்.

இன்றே அருகிலுள்ள கிளை ஆபீஸில் விசாரியுங்கள் :

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது) NGB/61BTAM

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு, 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (லாயிட்ஸ் கிளை) 6, அரமனைக்காரத் தெரு 158, மவுண்ட் ரோடு. தூத்துக்குடி: 44, பீச் ரோடு ஹைதராபாத்: அபித் ரோட்

வாட்டர்பரீஸ்

வைடமின் காம்பவுண்ட்

சாப்பிடவேண்டியது எப்பொழுது?



■ எந்த சீதவெப்ப நிலையிலும், எப்பருவத்திலும் வயதுவந்தோர், சிறுவர் யாவரும் சுவைத்துப் பருகுவதற்கு உகந்த பொது டானிக் வாட்டர்பரீஸ் வைட்டடமின் காம்பவுண்ட்.

■ வைட்டமின் பி காம்ப்ளெக்ஸ், மால்ட் எக்ஸ்ட்ராக்ட் மற்றும் உடல் நலம், தென்பு ஆகியவற்றுக்கு அவசியமான பொருள்கள் செறிந்தது வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட். பசியைத்தூண்டுவதுடன், ஆரோக்கிய உணர்வை ஊட்டுகிறது அது.

வாட்டர்பரீஸ்

வைடமின்

காம்பவுண்ட்

வார்னர் - லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி. (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏவில் இணைக்கப்பெற்றது)

WLY-9 TAM

மார்பிலே அணைத்துக் கொண்ட பரமேசுவரவர்மன் தழுதழுத்த குரலில், ''அண்ணா! இந்த விநாடி முதல் தங்களை என் இரத்த பந்தமுள்ள சொந்தச் சகோதரராக ஏற்று, இவ்வுறவை எனது இறுதி மூச்சு உள்ள வரையில் மதித்துப் போற்றி வருவேன், அண்ணா!'' என்றான்.

சளுக்கியத் தளபதியின் முகத்தில் ஆனந்தக் களை அலைமோதியது. நிம்மதிப் பெருமூச்சுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவர் திடீரென்று தம் உடலை முறுக்கி நெளித்தார். விலாப் புறத்திலிருந்து பச்சை இரத்தம் வழிந்து உறைந்தது. அவர் பயங்கரமாகச் சுற்றிலும் விழித்துப் பார்த்தார். ''என் அருமைச் சகோதரரே! இன்னுமோர் இறுதி விருப்பம். வீரனாகப் பிறந்து, வீரனாக வளர்ந்து, வீரனாகவே வாழ்ந்தவன் நான். எனவே என் இறுதி மூச்சு ஒரு மாவீரரின் மடியில் தலை சாய்த்தே பிரிய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இந்த எனது எளிய ஆசையைத் தயை கூர்ந்து நிறைவேற்றுங்கள்!'' — வில்வேலியின் குரல் உடைந்து தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது.

எல்லையற்ற பேரன்புடன் அவரது மலை போன்ற உடலை அணைத்துத் தூக்கித் தலையைத் தன் மடியில் வளர்த்திக் கொண்டு கண்ணீர் மல்கிய கண்களால் அவரைப் பாசப் பரிவோடு பார்த்தான் பரமேசுவரவர்மன்.

வில்வேலியின் முகத்தில் சாந்தி மயமான மகிழ்ச்சிப் புன்னகையொன்று மலர்ந்து, மறுகணமே அது உலர்ந்து மறைந்தது. வான் நோக்கி நிமிர்ந்திருந்த அவரது தலை மண் நோக்கிச் சாய்ந்து சரிந்தது!

அத்தியாயம் இருபத்திரண்டு

ஜல சமாதி

உடன் பிறந்த சகோதரர் ஒருவரை இழந்தாற் போன்ற உண்மையான துயரப் பொருமலுடன் உள்ளம் கசிந்து கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்த பரமேசுவர வர்மன் மெல்ல எழுந்து நின்றான். அண்ணாந்த நிலையில் கண் மூடிச் சிறிது நேரம் தியானத்தில் ஆழ்ந்திருந்த அவன், வெட்டிச் சாய்த்த வாழை மரம் போல் கிடந்த சளுக்கியத் தளபதி வில்வேலியின் பூதவுடலை இரு கைகளாலும் ஏந்தித் தூக்கியவாறு, அலைத்துச் சுழித்துப் பாய்ந்தோடிக் கொண்டிருந்த சிற்றாற்றை நோக்கி அமைதியாகச் சென்றான்.

ஆற்றில் இடுப்பளவு ஆழத்துக்கு இறங்கி நின்று கொண்டு, ஏந்தித் தூக்கியிருந்த வில்வேலியின் நெடிய உடலை நீர்ப்பரப்பில் மெள்ள இறக்கிக் கிடத்தினான். மறு கணம், அந்த மாவீர மாமனிதரின் உடல் நீரோட்டத்தின் வேகப் பாய்ச்சலோடு மிதந்து செல்ல ஆரம்பித்தது.

கண்களை இறுக மூடிக் கொண்டு சிலை போல் நின்றிருந்த பரமேசுவரவர்மன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டவனாய்த் திரும்பி, ஆற்று நீரில் அப்படியே மும்முறை மூழ்கி எழுந்து கரையை நோக்கி நடந்தான்.

இப்போதுதான் அவனுக்குத் தன்னைப் பற்றிய நினைவு திரும்பியது. தான் இங்கு வந்த காரணத்தையும் அவன் அவசர உணர்ச்சியோடு மனத்தில் இழுத்துக் கொண்டான்.

'உத்தமசீலி எங்கே போயிருப்பாள்? பெரு மழையின் காரணமாய் அவள் இங்கிருந்து புறப்பட்டுத் திருப்பருத்திக் குன்றத்தில் தங்கியிருக்கும் சேதியக் கலைஞரின் இல்லத்துக்குப் போய் இருப்பாளா? அல்லது அவளைப் பார்ப்பதற்கென்று ஆலம்பாக்கத்திலிருந்து பயணமாகி வந்த சோழ இளவரசி இளங்கோப்பிச்சியுடன் சேர்ந்து வேறு எங்கேனும் இடம் மாறிச் சென்றிருப்பாளா? அவள் ஏன் இவளைப் பார்க்க வந்தாள்? தன் தந்தையாலோ அல்லது தன் காதலனாலோ ஆந்திர இளவரசிக்கு ஏதேனும் ஆபத்து நேரலாம் என்பதை அறிந்து அவளை எச்சரித்துக் காப்பாற்றுவதற்காக வந்திருப்பாளோ? அவ்விரு இளவரசிகளும் ஒருவரையொருவர் சந்தித்திருப்பார்களா? அல்லது அந்தச் சந்திப்பு ஏற்படு முன்னே அவர்கள் வெவ்வேறு இடங்களுக்குப் பிரிந்து போய் விட்டிருப்பார்களோ?'

நெற்றி நரம்புகள் புடைத்துப் பின்னலிட இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்த பரமேசுவரவர்மனின் மனத்தில் மற்றொரு பீதி மயமான நினைப்புப் பளீரென முட்டிக் கொண்டு எழுந்தது: 'சோழிய ஆபத்துதவி வீரனை சம்புவராயன் தனது சிற்றரசரிடம் வந்து தெரிவித்த செய்தியிலிருந்து இளங்கோப்பிச்சிக்கும் உயிராபத்து நேர்ந்திருக்கலாம் என்று தோன்றுகிறதே! ஏனென்றால், இரவு வேளையில் சளுக்கிய விநயாதித்தன் அவனுக்குத் தெரியா

பலம் இல்லாத போதும், சந்தர்ப்பச் சூழ்நிலைகளை மீற முடியாத போதும் நாம் ஒருவரை மன்னித்தால் அந்த மன்னிப்பும் சிறந்ததாகாது. அத்தகைய மன்னிப்பைவிடப் போரிடுவதே சிலாக்கியமானது. தேவகணங்களையும் உங்களால் வெற்றி கொள்ள முடியும் போது சண்டையிடாமல் மன்னியுங்கள். அதுவே மன்னிப்பு.

— ஸ்வாமி விவேகாநந்தர்

மலே அவளுடைய சிவிகையைப் பின் தொடர்ந்து சென்றானாமே? அப்படிச் சென்றவன் அவளைப் பழி வாங்காமல் சும்மா விட்டிருப்பானா? ஒருகால் அவள் மூலம் உத்தமசீலி இருந்த இடத்தைக் கண்டுபிடித்து அவ்விருவரையுமே அவன் வஞ்சம் தீர்த்துக் கொண்டிருப்பானோ? அப்படி ஏதேனும் நடந்திருந்தால் அந்த விஷயம் வில்வேலிக்குத் தெரிந்திருக்குமே! தெரிந்திருந்தால் மனம் திருந்திய அவர் அவ்விஷயத்தைத் தமது கடைசி நேரத்திலாவது என்னிடம் வெளியிட்டிருப்பாரே? கொலை வெறி கொண்டு திரியும் விநயாதித்தன், தானே அந்தப் பழி வாங்கலை நடத்தி விட்டு அதை வில்வேலியிடம் சொல்லாமல் மறைத்திருந்தால்?.... இல்லை; ஆந்திர இளவரசியையும், சோழ இளவரசியையும் ஒரே சமயத்தில் தீர்த்துக் கட்ட வேண்டும் என்பதற்காகத்தான் வில்வேலியை இவ்விடத்துக்கு அவன் அழைத்து வந்திருக்கிறான். எதிர்பாராத விதமாக நான் இங்கே இருப்பதைக் கண்டதும் என்னை முதற்பலி வாங்குமாறு அவரைக் கட்டாயப்படுத்தித் தூண்டியிருக்கிறான். ஆனால் அவரோ திருவருளின் பெருங் கருணையால் மனமாற்றம் பெற்று என்னைக் கொல்ல விரும்பாமல் தம்மையே குத்திக் கொண்டு விட்டார். இதை எள்ளளவும் எதிர்பார்க்காத விநயாதித்தன் அதிர்ச்சியடைந்து ஓடி விட்டிருக்கிறான். அப்படி ஓடியவன் நேரே வாதாபிக்கோ, கல்யாணபுரத்துக்கோ பயணமாகி விடுவானா? நிச்சயமாக அவ்வாறு சொல்ல முடியாது. தன் தந்தையின் தோல்விக்குக் காரணஸ்தர்களாக இருந்தவர்களில் ஒருவரையாவது பழி தீர்த்துக் கொள்ளாமல் இந்த நாட்டை விட்டு அவன் ஒரு போதும் வெளியேற மாட்டான். அப்படியானால் அதிர்ஷ்டவசமாக இதுகாறும் ஆந்திர இளவரசியோ, சோழ இளவரசியோ உயிர் தப்பி எங்கேனும் போயிருந்தாலும், இப்போது ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், என்னைக் கொல்லும் முயற்சியில் தோல்வியடைந்தோடியிருக்கும் விநயாதித்தன் நேரே அவ்விரு இளவரசிகள் இருக்குமிடத்தை நோக்கித்தான் விரைந்திருப்பான். ஐயோ, அந்தப் பேதைப் பெண்கள் எங்கு சென்றார்கள் என்றே தெரியவில்லையே! அவர்களை எவ்விடம் போய்த் தேடிக் கண்டுபிடிப்பது?'

குழம்பிக் கலங்கி நின்ற பரமேசுவர வர்மன் தெளிவற்ற ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாய்த் தன் புரவி மீது ஏறித் தான் வந்த வழியாகவே திருப்பருத்திக் குன்றத்துக்குப் பயணப்படலானான்

ஃ ஃ ஃ

மறு நாள் மாலைப் போது மயங்கிக் கருகும் நேரத்தில், — காஞ்சியிலிருந்து ஒரு குரோசத் தொலைவுக்கு அப்பால் வேகவதி ஆற்றங் கரையில் அமைந்த— அழகிய சிற்றூரான திருப்பருத்திக் குன்றத்தை அடைந்த பரமேசுவரவர்மன், அங்கு பழைமைச் சிறப்புடன் திருப்பருத்திக் குன்றூழ்வார் என்னும் பெயரோடு விளங்கிய அருகப் பெருமானின் திருக்கோயிலொன்றுக்குச் சென்று அவ்விடத்திலிருந்த ஒரு குரா மரத் தடியில் சிறு பொழுது களைப்பாறுவதற்காக அமர்ந்தான்.

களைப்பு நீங்கிய பின் மெல்ல எழுந்து நின்று அந்தத் திருக்கோயிலின் எழிலார்ந்த புறத் தோற்றத்தை உள்ளார்ந்த பக்தியுடனும் ஆவலுடனும் பார்த்துக் கொண்டிருந்த பரமேசுவர வர்மனின் கண்கள் சட்டென்று கீழ் நோக்கித் தாழ்ந்து வியப்பால் அப்படியே நிலைகுத்தி நின்றன.

ஆமாம்; அது சமணர்கள் நிறைந்த ஊரானதால் அந்தக் கோயிலுக்கு ஏராளமான ஆண்களும் பெண்களும் வந்து போய்க் கொண்டிருந்தனர். அப்படி வழிபாட்டை முடித்துக் கொண்டு அப்போதுதான் கோயிலை விட்டு வெளியேறிய சமணப் பெண் துறவிகளான ஐந்தாறு கௌந்திகளுக்கு முன்னால், பூக்கூடையும் கையுமாகத் தன்னந் தனியே கந்தர்வலோகத்துக் காரிகை போல் அழகு கொழிக்கச் சென்று கொண்டிருந்தாள் ஆந்திர இளவரசி உத்தமசீலி. (தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



அம்மா ஆ ஆ ஆ ஆ

அவனுடைய வேதனையைப் போக்கி அவனைச் சிரிக்கச் செய்யுங்கள், உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் கொடுப்பதன் மூலம். இப்பொழுது ஒரு நூற்றாண்டுக்கு மேலாகக் குழந்தைகள் (லட்சக்கணக்கில்) வாயு, வயிற்றுக் கோளாறு மற்றும் பல் முளைக்கும் போதுள்ள வேதனைகள் முதலியவைகளிலிருந்து நிவாரணம் அடைந்திருக்கின்றன. இத்தகைய நிவாரணத்தை உடவர்ட்ஸ் மட்டுமே அளிக்கிறது. தலைமுறை தலைமுறையாகத் தாய்மார்கள் செய்தது தவறாகவே இருக்கமுடியாது!

உட்வர்ட்ஸ்
'கிரைப் வாட்டர்'



100 வருஷங்களுக்கு மேலாக உலகெங்கிலும் உபயோகிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: ஹெர்பர்ட்ஸன்ஸ் லிட். பம்பாய், கல்கத்தா, & லக்னோ ● டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ், எம். ஜி. ஷஹானி & கோ. (டில்லி) பிரைவேட் லிட்., டில்லி.

Aiyars AT. 357-TM. A

EGISTERED No. M. 4392
egistered as a Newspaper in Ceylon



மட்டில்லாத கலை, மென்மை...பட்டாடைகளின் பண்புகளை நருவிசாகப் பராமரிப்பது லக்ஸ் சலவை. கம்பளி, நைலான், ரெயான், டெரிலீன் ... பாங்கான துணிகள் எல்லாமே பார்க்கப் புதிதாய்ப் பன்னெடுநாள் நீடித்திருக்கத் துணை: தூய மெல்லிளம் லக்ஸ் தூள்களால் சலவை!

அத்தனை நருவிசாக ஆடைகளைக் காப்பது லக்ஸ் ஒன்றே

ிந்துஸ்தான் லீவர் தயாரிப்பு LX. 20-140 TM